ஸ்ரீ

ஸ்ரீ கிருஷ்ணசகாயம்.

ஸ்ரீகிருஷ்ணஸ்வாமிதூது.

வில்லிபுத்தூராழ்வார்

அருளிச்செய்தமூலமும்,

காஞ்சீபுரம்

குமாரசுவாமிதேசிகராற்செய்த

பொழிப்புரையும்,

மதுரை

ம. அழகர்சாமி பிள்ளையவர்களால்

பரிசோதிக்கப்பெற்று

மதுரை

விக்டோரியா அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

1912

இதன்விலை அணா-சு



ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீகிருஷ்ணஸ்வாமிதூது.

மூலமும்-உரையும்.

காப்பு.

விநாயகர் துதி.

நீடாழி யுலகத்து மறை நாலொ டைந்தென்று நிலை நிற்கவே
வாடாத தவவாய்மை முனிராஜன் மாபாரதஞ்சொன்னநா
ளேடாக வடமேரு வெற்பாக வங்கூ ரெழுத்தாணி தன்
கோடாக வெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வா மரோ.

(எ-து.) நெடியகடல்சூழ்ந்த இப்பூலோகத்திலே வேதம் நாலுடனே ஐந்தாம்வேதமென்னப் பிரசித்தமாக நிலைத்திருக்கும்படி தளர்ச்சியடையாத மெய்த்தவத்தையுடைய வேதவியாசமஹாமுனிவர் மஹாபாரதஞ்சொன்ன நாளிலே, மஹாமேருவை யேடாகவும், தனதுகொம்பை வெள்ளிய கூரையுடைய எழுத்தாணியாகவுங்கொண்டு அந்தப் பாரதக்கதையை யெழுதிய விநாயகக்கடவுளைப்பணிந்து பத்திசெய்வாம். என்றவாறு. (க)

சரஸ்வதிதுதி.

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலேயிருந்து வைகை யாற்றிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின் றாள்

(எ-து.) பொதியமாமலையிலே பிறந்துப் பாண்டியன் கீர்த்தியென்னும் பசும்பொற்றொட்டிலிலே கிடந்து சங்கப்பலகையிலேயிருந்து வைகையாற்றிலே திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளால் விடப்பட்ட எட்டினிடமாக எதிரேறித் தவழ்ந்த பேதையாகிய சரஸ்வதி பின்பு நெருப்பிலே

போடப் பச்சோலையாய் வேகாமல் நின்று கற்றபேர் நினைவிலே நடந்து ஆதிவராக முகக்கொம்பிலே மருவிய பூமிதேவி மருங்கிலே கிடக்குங் குழ மணப்பிள்ளையாக வளர்கின்றாள். அக்கலைமகள் என்னுவிலே நிற்கும் படிக்கு நமஸ்கரிக்கிறேன். எ-று. (உ)

பாடற்றேகை.

தருமமெய்த் தரும னேவத் தாளிணை சிவப்ப மாயோ
னரவுயர் கொடியோன்பக்க லழகுறு நாடு வேண்டித்
துரகத விரத மேறித் தூதுபோய் மீண்ட பாட
லிரவியங் கதிர்போல் வீசு மிருசதத்தறுபத்தொன்றே.

(எ-து.) தருமமே யுருவாயிருக்கின்ற தருமராஜன் தனக்காகத் துரியோ தனனருகே தூதுபோகும்படி யேவினதினுலே ஆதிபராபர வஸ்துவாகிய ஸ்ரீமந் நாருயணமூர்த்தி நாலுவேதங்களாலுங் காணப்படாத பாதாரவிந் தங்கள் சிவக்கக் குதிரைகட்டி யலங்கரித்த இரதத்திலே எழுந்தருளி அஸ் தினுபுரியென்னும் பட்டணத்துக்கு தூதுவனுகச்சென்று சர்ப்பக்கொடி யோனுகிய துரியோதனனை, அழகுபொருந்திய நாடுகேட்டு அவனுடனே யுத்தப்பிரசங்கம்பேசி மீண்டதைக் குறித்தபாடல் சூரியகிரணம்போலப் பிரகாசிக்கின்ற இருநூற்றறுபத்தொன்றும். எ-று. (ங)

ஸ்ரீகிருஷ்ணஸ்வாமிஸ்துதி.

பேர்படைத்த விஜயனுடன் மும்மைநெடும் பிறவியினும் பிரி யா னுகிச், சீர்படைத்த கேண்மையினுற் றேரூர்தற் கிசைந்தருளுஞ் செங்கண் மாலைப், பார்படைத்த சுயோதனற்குப் படையெடே னமரிலெனப் பணிந்த கோவைக், கார்ப்படைத்த நிறத்தோனைக் கைதொழுவார் பிறவாழிக் கரைகண்டாரே.

(எ-து.) பூலோகமெங்கும் சவுரியத்தினுலே கீர்த்தியைப்பெற்ற அர்ச் சுனனுடனே இரணியவதை நிமித்தமாக எழுந்தருளினபோது பிரகலா தனனுகியும், இராவணவதை நிமித்தமாக எழுந்தருளினபோது விபீஷண னுகியும், பூமிபாரந்தீர்ப்பது காரணமாக எழுந்தருளினபோது அருச்சுன னுகியும் இப்படி மூன்றவதாரத்திலும் பிரியாதவனுயிருந்து சிறப்பைப் பெற்ற நட்பினுலே அந்த அர்ச்சுனனுக்கு ரதசாரதியாக இசைந்தருளும் செந்தாமரை மலர்போன்ற கண்களையுடைய திருமாலை பூமியையாளு கின்ற துரியோதனன் வேண்டினபோது அந்தப் பாரதயுத்தத்திலே நான் ஆயுதம் கையிலெடுப்பதில்லை யென்று உறுதிசொன்ன தேவராஜனை, மேக வண்ணனை ஸ்ரீகிருஷ்ணஸ்வாமியைக் கைதொழுதவர்கள் பிறப்பென் னுங் கடலைநீந்தி முத்தியாகிய கரையைக்கண்டவர்கள். எ-று. (௪)

நூல்.

ஞானமன்போ டினிதுரைத்து ஞானமுனி யகன்றதற்பின் சாம பேத, தானதண்ட மெனுமிருபர் தருமமுறை யிற்புகலுந் தகுதி நோக்கித், தூநறுந்தண் டுளவோனைத் தூதுவிடு வதற்கெண் ணிச் சுனைக டோறும், மேனலந்தண் கிரிப்பெருந்தே னிறைக்கு மெழிற் குருநாடனியம்பு வானே.

(எ-து.) தருமபுத்திரமகாராஜன் வனவாசம் பன்னிரண்டு வருஷமும், அக்கியாதவாசம் ஒருவருஷமும் ஆகப் பதிமூன்றுவருடமுந் தொலைத்து, உபலாவியமென்னும் பட்டணமேவந்திருந்து, துரியோதனன்பக்கல் உலூகமகாமுனியான தன்னுடைய புரோகிதனை யனுப்பித் துரியோத னன் தன்னுடைய் தகப்பனை திருதராட்டிரனுடனே உசாவிக்கொண்டு சஞ்சயமகாமுனியான தன்னுடைய புரோகிதனை யழைத்து நீர்போய் ஞானப்பிரசங்கம்பண்ணித் தருமபுத்திராதியரை இன்னும் வனவாசமே போகத்தக்கதாகச் சொல்லி வாருமென்ன, அந்தப்படியே புரோகிதன் ஆசீர்வதித்து அன்புடனே ஞானப்பிரசங்கம்பண்ணி நீங்கள் இன்னந் தபசு பண்ணுவதே உறுதியென்றுசொல்ல, இதை மறுத்துச் சத்துருசம்மாரஞ் செய்து பிரதிக்கினை முடிப்பேனென்று வீமசேனன் சொல்லியனுப்ப, அந் தப்படியே சஞ்சய மகாமுனி போனபின்பு, சாம பேத தான தண்டமென் னும் இராஜநீதிமுறைமைப்படிச் சொல்லத்தக்கவ றென்றறிந்து, பரிமளம் பொருந்திய பரிசுத்தமாகிய துளபமாலையணிந்த ஸ்ரீகிருஷ்ணதேவரைத் தூதுவிடுவதற்கு எண்ணிச் சுனைகள்தோறுஞ் செந்தினையையுடைய தண் ணிய மலைகள்மிகுந்த தேனையிறைக்கின்ற குருநாட்டுக் கதிபதியான தர்ம புத்திரமகாராஜன் சொல்லுவான். எ-று. (க)

செஞ்சொன்முனி சஞ்சயனுக் கியாமுரைத்த கருமமுமுன் சென்ற காலை, யஞ்சொன்முனி புரோகிதனுக் கவனிசைத்த கருமமுநீ யறிதி யன்றே, நஞ்சுதனை மிகவருந்தி நன்மருந்து மந்திரமும் விரைந்து நாடாத், துஞ்சினர்தங் களைப்போல விருக்குமதோ யார் மனத்து மிருக்குஞ் சோதி.

(எ-து.) செவ்வையான சொற்களைச்சொல்லும் சஞ்சயமகாமுனிக்குநாம் சொன்னவசனமும், நாமனுப்ப முன்போகிய உலூகமகாமுனியான புரோ கிதனுடனே துரியோதனன் அப்போது பேசின வசனமும், தேவரீருடைய திருவுளமே யறியுமல்லவோ, விஷத்தை அதிகமாகக்குடித்து அதுதீர நல்ல மருந்தும் மந்திரமும் உயிர் நீங்குவதற்குமுன்னே விசாரியாமல் சீவனை விட்டவர்களைப்போல நாங்கள் போகாதபடிக்கு ஒருபுத்தி எங்களுக்குப் போதிக்கவேண்டும் சர்வலோகத்தார் மனதிலுமிருந்து விளையாடுகின்ற சோதிசொரூபரே யென்று பின்னுஞ் சொல்லுகிறான் தருமராஜன். (எ-று.)

அருஞ்சமரம் புரியும்வகை யவர்துணிந்தா ராமாகி லதுநன்றி யாமுற், பெருஞ்சமரம் விளக்குமது கடனன்றென் றருள்வெள ளம் பெருகக் கூறும், பொருஞ்சமர நெடுமுரசப் பூங்கொடியோன் றனைநோக்கிப் புயப்போர் வாண, னிருஞ்சமரந் தொலைத்தபிரா னிளைஞரையு முடனிருத்தி யியம்பி னானே.

(எ-து.) குருக்ஷேத்திரபூமியிலே அரிய யுத்தஞ்செய்யத்தக்கதாகத் துரியோதனனாதியர் சம்மதிப்பார்களானால் அது நல்லது. நாம் முந்தி யுத்தஞ் செய்யச் சம்மதித்துச் சொல்லுகிறது முறைமையல்லவென்று கிருபா வெள்ளம் பெருகும்படி சொல்லிய பொருகின்ற நெடிய முரசக்கொடி படைத்த தருமபுத்திர மகாராஜனைப்பார்த்து மேகம் போன்ற ஆயிரம் புயங்களையுடைய போரிற்சிறந்த வாணாசுரனைச் செயித்த ஸ்ரீகிருஷ்ண சுவாமியானவர் வீமசேனன் அர்ச்சுனன் நகுலன் சகாதேவன் என்றுசொல்லப்பட்ட இளைஞரையுங் கூடவைத்துக்கொண்டு இவ்வாறு சொல்லினர். எ-று. (௩)

செய்வரா லினமுகளுந் திருநாடு பெறநினைவோ சென்று மீளப், பைவரா யருங்கானிற் பயின்றுதிரி தரநினைவோ பகைத்த போரி, லுய்வரா ரெனவிரைவி னுருத்தெழுந்து பொரநினைவோ வுண்மை யாக, வைவரா மவனிபர்க்கு நினைவேதென் றருள்புரிந்தா னமரர் கோமான்.

(எ-து.) வயலெங்கும் வராலினங்கள் குதித்துவிளையாடுகின்ற சிறந்த குருநாடுவாங்கிக்கொண்டு அரசாக்ஷிசெய்ய நினைவோ மறுபடியும் பழைய படியே துன்பமுடையவராய் வனத்திற்சென்று வசித்திருந்து திரிய நினைவோ, அல்லது பகைத்துச்செய்கின்ற யுத்தத்தில் பிழைப்பார் யாரென்றுசொல்லத் துரியோதனனாதியரைப் பிரதிக்கினைப்படியே கோபித்துப் பொருது செயிக்கநினைவோ ஐவராகிய உங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கின்ற உண்மையான எண்ணம் என்னவென்று கேட்டருளினர் ஸ்ரீகிருஷ்ணதேவர். எ-று (௪)

வயிரமெனுங் கடுநெருப்பை மிகமூட்டி வளர்க்கினுயர் வரைக் கா டென்னச், செயிரமரில் வெகுளிபொரச் சேரவிரு திறத்தோருஞ் சென்று மாள்வோங், கயிரவமுந் தாமரையுங் கமழ் பழனக் குருநாட்டிற் கலந்து வாழ, வுயிரனையாய் சந்துபட வுரைத்தருளென் றுனறத்தி னுருவம் போல்வான்.

(எ-து.) வைராக்கியமென்னுங் கரேமாகிய நெருப்பை அதிகமாக மூட்டி வளர்த்தால் உயரவளர்ந்து தானே யிழைந்தெரிந்து மாய்ந்துபோகின்ற மூங்கிற்காடுபோல குற்றம்பொருந்தியயுத்தத்திலே கோபமூண்டு இரண்டு

திறத்தோரும்போய் ஒருமிக்க மாண்டுபோவோம், அப்படிவராமல் செவ்வல்லியுந் தாமரைமலரும் பரிமளிக்கின்ற வயல்கள்சூழ்ந்த குருநாட்டிலே அம்மலர்களைப்போல நாங்கள்விரோதமில்லாமல் கலந்து வாழும்படி எங்களுயிரையொத்த ஸ்ரீகிருஷ்ணதேவரே நீர் தூது பயன்படும்படி அவர்களையும் எங்களையும் கூட்டி யருளவேண்டுமென்று சொல்லினர் தருமத்தின் வடிவம்போல விளங்கிய தருமபுத்திரர். எ-று (ரு)

அரவுயர்த்தோ னுடன்மறுசூ தாடிநீர் வென்றவன்று ளவன்றான் சொன்ன, விரதமொழி தவிராமல் வெங்கானம் போய்மீண்டூர் வெய்யோ னுங்கள், குருநிலத்திற் பாதியுமே கொடாதிருந்தாலங்கவனைக் கொன்று போரி, லிருநிலத்தை யாளவினித் துணிவதே கடனென்று னெம்பி ரானே.

(எ-து.) சர்ப்பக்கொடிபடைத்த துரியோதனனுடனே மறுபடியுஞ் சூதாடி நீங்கள் வென்றபோது அவன் சொல்லிய சத்தியச்சொற் றவறாமல் பன்னிரண்டுவருஷம் வனவாசமும் ஒருவருசம் அக்கியாதவாசமுமபோய் வந்தீர்கள், வெய்யவனாகிய அந்தத்துரியோதனன் உங்களுடைய குருதேசத்தில் பாதியைக்கொடாமற்போனானாகில் அப்போது அவனைக்கொன்று போர்முகத்திலே பெரிய பூமியை ஆளுகைக்கு இனித் துணிவதே முறைமையென்றார் ஸ்ரீகிருஷ்ணதேவர். எ-று, [சு]

குரவரையுங் கிளைஞரையுங் குலத்துரிய துணைவரையுங் கொன்று போர்வென், றரவநெடுங்கடலாடையவனியெலாந் தனியாளுமரசு தன்னில், கரவுறையு மனத்தாதை முனிக்குரைத்த மொழிப்படியே கானந் தோறு, மிரவுபகல் பலமூல சருகுநுகர்ந் துயிர்வாழ்த லினிது நன்றே.

(எ-து.) துரோணாசாரிமுதலிய ஆசாரியரையுஞ் சல்லியன்முதலிய சுற்றத்தாரையும் குருகுலத்துக்குரிய துரியோதனன்முதலிய அண்ணன் தம்பிமாரையும் இன்னம் பாட்டன் மாமன் மைத்துனன் முதலானபேரையுங் கொன்று போரில்வென்று சப்திக்கின்ற நெடியகடலாகிய ஆடையையுடைய பூமிமுழுவதுந் தனியே யாளுகிற அரசைப்பார்க்கிலும், கபடந்தங்கிய மனத்தையுடைய பெரியதகப்பனாராகிய திருதராஷ்டிரன் சஞ்சயமுனியுடனே சொல்லியனுப்பிய சொற்படியே வனந்தோறும் போய் இரவும் பகலும் கனி காய் கிழங்கு சருகுகளைப் புசித்துப் பிழைத்துக் காலம் போக்குகிறதே மிகவும் நல்லதென்றார் தருமபுத்திரர். எ-று. [எ]

கோதிலா னிந்தமொழி கூறுதலு மாதியான் கூற லுற்றான், மோதமருக் கிளைத்துநீர் மொய்த்தபெருங் கானகத்தே முடுகிச் சென்றால், பூதலத்தோ ரேசாரோ புகன்றபெரு வஞ்சினமும்

பொய்த்தி டாதோ, நீதியோ வெனவுரைத்தா னுங்கதற்கு நிகழ் தரும னிகழ்த்த லுற்றான்.

(எ-து.) பழுதில்லாத தருமபுத்திரமகாராசர் இந்த வசனஞ் சொன்ன மாத்திரத்திலே ஆதிமூலமான ஸ்ரீகிருஷ்ணதேவர் சொல்லுவார்; தரும புத்திரரே நீங்கள் மோதுகின்ற யுத்தத்துக்குத்தோற்று மரங்கள் நெருங் கிய பெரிய வனத்தினிடத்திலே வாசம்பண்ணி விரைந்துபோனால் பூலோ கத்திலுண்டானபேர் தாயாதியுடனே யுத்தம்பண்ணிச் செயிக்கமாட்டா மற் போனார்களென்று ஏசமாட்டார்களோ? தம்பிமார்சொன்ன சபதமும் பொய்யாய்ப்போகாதோ? இது நீதியாகுமோவென்றுசொல்லினர் அது கேட்டுப் பின்னுஞ்சொல்லுவார் தருமபுத்திரர். எ-று. [அ]

நீதூது நடந்தருளியெமதுநினைப் பவர்க்குரைத்தா னினைவின் வண்ணந், தாதூதி யளிமுரலுந் தண்பதியுந் தாயமுந்தான் றாரா னாகில், மீதூது வளைக்குலமும் வலம்புரியு மிகமுழங்க வெய்ய கா லன், மாதூதர் மனங்களிக்கப் பொருதெனினும் பெறுவனிது வசையு மன்றே.

(எ-து.) ஸ்ரீகிருஷ்ணஸ்வாமீ! தேவரீர் எங்கள்நிமித்தந் துரியோதன னிடத்துத் தூதுசென்று எங்களுடைய எண்ணத்தைத் துரியோதனனாதி யர்கட்குச் சொல்லினால் அந்தப்படிய மகரந்தப்பொடியையூதி வண்டு கள் முரலுகின்ற குளிர்ந்த பூஞ்சோலைகள்சூழ்ந்த நகரத்தையும் எங்கள் பங்குக்குரிய செல்வத்தையும் கொடாமற்போனானாகில் வென்றதன்மேல் ஊதப்பட்ட இடம்புரிச்சங்குகளும், வலம்புரிச்சங்குகளும் வீரகாளம் வீர கொம்பு முதலிய நானாவித வாத்தியங்களும் மிகுதியாக முழங்கக் கொடிய எமதூதர் மனங்களிக்கும்படி போர்க்களத்திலே யுத்தஞ்செய்தானாலுந் தாயாதிபக்ஷத்திலுள்ள எங்கள்பூமியைப் பெறுவேன்; இது எமக்கு அப கீர்த்தியல்லவென்று பின்னுஞ் சொல்லுவார் தருமபுத்திரர். எ-று [கூ]

முந்தூர்வெம் பணிக்கொடியோன் மூதூரி னடந்துழவர் முன்றின்மேறும், நந்தூரும் புனனாட்டின் றிறம்வேண்டு நாடொன்று நல்கா னாகி லைந்தூர்வேண் டவையிலெனி லைந்தில்வேண் டவை மறுத்தா லடுபோர் வேண்டு, சிந்தூரத் திலகநுதற் சிந்துரத்தின் மருப்பொசித்த செங்கண் மாலே.

(எ-து.) முந்தியூருகின்ற வெவ்விய சர்ப்பக்கொடியுடைய துரியோதன னது பழயபதியான அஸ்தினாபுரத்திற்குத் தேவரீர் எழுந்தருளிப் பள்ளர் முற்றங்கள்தோறுஞ் சக்கினங்கள் ஊருகின்ற நீர்வளம்பொருந்திய நாட் டைக்கேளும் அது கொடானாகில் எங்கள் ஐந்துபேருக்கும் இந்திரப்பிரஸ் தம் எமப்பிரஸ்தம் அவந்தி வாரணாபுரி அஸ்தினாபுரி என்கின்ற ஐந்தூருங்

கேளும், அவை யில்லையென்று மறுத்தானாகில் ஐந்து மனைகேளும், அவையும் இல்லையென்றால் யுத்தத்திற்குச் சம்மதித்துவாரும் சிந்தூரத் திலதம் பொருந்திய மதயானைக்கோடுமுறித்த வீரம்பொருந்திய சிவந்த கண்களையுடைய மாயனே என்றார் தருமபுத்திரர். எ-று. (௧௦)

மூத்தோன்மற் றிவையுரைப்ப விளையோன்வெஞ் சினமனத்தின் மூள மூள, நாத்தோமி லுரைபதறக் கதுமெனவுற் றெழுந்திறைஞ்சி ஞால மெல்லாம், பூத்தோனே பூந்தவிசிற் பூவைபுணர் மணிமார்பா புன்மை யாவுந், தீர்த்தோனே யூனமிலான் மானமிலா துரைப்பதற்கென் செய்வ தென்றான்.

(எ-து) மூத்தவராகிய தருமபுத்திரமகாராசர் இந்தவசனஞ் சொல்ல வீமசேனன்கேட்டு அவன் மனதிலே கோபமதிகரிக்க நாவினிடத்திலே குற்றமில்லாத சொற்கள் பதறச் சீக்கிரத்தில்வந்து எழுந்து ஸ்ரீகிருஷ்ணதேவரைப்பணிந்து பூலோகமுழுதும் உண்டாக்கினவனே! பதுமாசனத்திலிருக்கின்ற மகாலட்சுமிபொருந்திய கௌஸ்துவாபரணந்தரித்த மார்பையுடையவனே! எமக்குநேரிட்ட குறைவுகளைத் தீர்த்தவனே! குற்றமற்ற தருமபுத்திரர் மானமில்லாமற் சொல்லுவதற்கு நான் செய்வது என்னென்று பின்னுஞ் சொல்லுவான் வீமசேனன். எ-று. (௧௧)

விரிகுழற்பைந் தொடிநாணி வேந்தவையின் முறையிடுநாள் வெகுளே லென்று, மரபினுக்கு நமக்குமுல குள்ளளவுந் தீராத வசையே கண்டா, யெரிதழற்கா னகமகன்று மின்னமும்வெம் பகை முடிக்க விளையா நின்றீ, யரவுயர்த்தோன் கொடுமையினு முரசுயர்த்தோ யுனதருளுக் கஞ்சி னேனே.

(எ-து.) விரிந்த கூந்தலையும், பசியவளையலையுமுடைய திரௌபதி நாணமடைந்து மூன்றுலக்ஷத்து அறுபத்தாறாயிரம் பட்டவர்த்தனரும், ஆறுலக்ஷத்து அறுபத்தாறாயிரம் மகுடவர்த்தனரும். பதினெண்பூமி மன்ன மண்டலீகரும், ஐம்பத்தாறுதேசத்து இராசவர்க்கமும் வீஷ்மாசாரி, துரோணசாரி, கிருபாசாரி, அசுவத்தாமா, கர்னன், சகுனி, சல்லியன், அதிரதர் மகாரதர், சமரதர், முதலிய சமஸ்தமானபேரும் நிறைந்த ராஜசபையிலே அபிமானபங்கம் பண்ணுவித்தநாளில் தஞ்சமில்லாத பேர்போலே முறையிட்டபோது நீ கோபியாதேயென்றுசொல்லி குருகுலத்துக்கும் நமக்கும் பூலோகமுள்ளளவுந் தீராத பழிப்புவசன முண்டாக்கினீர், அதுவுமல்லாமல் கள்ளக்கயிறுகொண்டு சூதாடித் தீப்படுகின்ற காட்டுக்குப்போய் நீங்கி வந்தும் இன்னமும் அக்கொடியபகையை முடிக்க இளைக்கின்றீர் ஆதலாலே, துரியோதனனுடைய கொடுமையைப்பார்க்கிலும் தருமபுத்திரரே! உம்முடைய கருணைக்கு மிகவும் பயந்தேனென்று பின்னுஞ் சொல்லுவான் வீமசேனன். எ-று. (௧௨)

காளுள வுனைவிடுத்த கண்ணிலா வருளிலிதன் காதன் மைந்தன், ருளுளுந் தரணியெலா மொருகுடைக்கீழ் நீயாளத் தருவனின்றே. மேனுணம் முரிமையறக் கவர்ந்தபெருந் துணைவனுனை வெருத வண்ணம், வாளுள வானவர்கோன் றன்பதமற் றவன்றனக்கே வழங்கு வேனே.

[எ-து.] உன்னை வனவாசம் போகச்சொன்ன கண்ணும் அருளுமில்லாத திருதராஷ்ட்டிரனுடைய ஆசைமிகுந்த குமாரனை துரியோதனன் தாளுளுகின்ற பூலோகமெல்லாம் ஒருகுடைக்கீழ் இன்றைக்கே நீராளத் தருவேன் அதுவுமல்லாமல் முன்ளுளில் தம்முடைய ஆட்சியான நாட்டைக் கைக்கொண்ட அந்தத் துரியோதனன் தேவரீரை வெறுக்காதபடி அவனுக்கு வீரசுவர்க்கத்தை யாளும்படி இந்திரபதத்தைத் தருவேனென்று பின்னுஞ் சொல்லுவான் வீமசேனன். எ-று. (கந)

போர்முடித்தா ரமர்பொருது புலம்புறுசொற் பாஞ்சாலி பூந்தண் கூந்தற், கார்முடித்தா ரிளையோர்முன் கழறியவஞ் சினமுடித்தார் கடவுட் கங்கை, நீர்முடித்தா ரிரவொழிந்த நீரறியப் பூதலத்தி னிலைநின் ரேங்கும், பேர்முடித்தா ரிப்படியே யார்முடிப்பா ரிவருடனே பிறந்தே னென்ருன்.

(எ-து.) ஸ்ரீகிருஷ்ணதேவரே! எங்கள் அண்ணுவியார் துரியோதனனுடனே யுத்தஞ்செய்து போரைமுடித்தார், புலம்புகின்ற சொல்லையுடைய திரௌபதியின் மேகம்போன்ற கூந்தலையும் முடிக்கச்செய்தார், திரௌபதியினுடைய ஆடையை உரிவித்தகாலத்திலே தம்பிமார் சபையிலே பேசிய சபதங்களையும் முடிப்பித்தார், தெய்வத்தன்மைபொருந்திய கங்கையைத் தரித்த உருத்திரமூர்த்தியிடத்திலே பிரமகபாலங்கொண்டு இரப்பதைத் தவிர்த்தருளிய உம்முடைய சித்தமறியும்படி பூலோகத்திலே நிலைநின்றுயர்ந்த கீர்த்திமானென்னும் பேர் பிரசித்தமாக முடித்தார், இவ்விதமாகவே யார் முடிக்கப்போகிருர்கள் இவருடன் ஏன் பிறந்தேன் நான் என்று பின்னுஞ்சொல்லுவான் வீமசேனன். எ-று. (கச)

அணிந்துவருஞ் சமரிலெதிர்த் தரவுயர்த்தோ னுடனரசருடலமெல்லாந், துணிந்திரண்டு படப்பொருது தொல்லையுல கரசாளத் துணிவ தல்லால், தணிந்தறமுங் கிளையுறவுங் கொண்டாடித் தாளின்னந் தனித்தா தேவிப், பணிந்திரந்து புவிபெற்றுண் டிருப்பதற்கே துணிகின்ருன் பட்ட பாடே.

(எ-து) போர்க்கோலங் கொண்டுவருகிற பெரிய யுத்தத்திலே யெதிர்த்து துரியோதனனுடனே யெதிர்த்த அரசர்களுடைய சரீரங்களெல்லாம் இரண்டுதுண்டாகும்படிப் போர்செய்து, பழைய பூலோகமுழுதும் அரசா

ஷிசெய்பத் துணிவதல்லாமல் பொறுமைகண்டு தருமத்தையுஞ் சுற்றத் தாரிடத்து உறவையும் பாராட்டிதான் இன்னம் ஒப்பற்ற தூதுவிட்டு பகைவனை வணங்கிப் பூமியை யாசித்துப் பெற்றுச் சவுக்கியமாகப் புசித் திருக்கவே யெண்ணுகிறார் தருமபுத்திரமகாராசர் குருகுலம்பட்டபாட்டை என்னசொல்வேன் என்றான் வீமசேனன். எ-று. (கரு)

பரிவுடன்மற் றிவைகூறும் பவனகுமா ரனைமலர்க்கைப் பணித்து நோக்கிக், குருகுலத்தோர் போரேறே குற்றமது பார்க்குங் காற் சுற்ற முண்டோ, வொருகுலத்திற் பிறந்தார்க ளுடன்வாழும் வாழ்வினைப்போ லுறுதி யுண்டோ, விருவருக்கும் வசையன்றோ விருநிலங்கா ரணமாக வெதிர்ப்ப தென்றான்.

(எ-து.) இப்படி வருத்தமாகச்சொல்லிய வாயுபுத்திரனாகிய வீமசேனனைப்பார்த்து மலர்போன்ற கையாலமர்த்தி குருகுலத்தாருக்குள்ளே போரிற்சிறந்த ஆண்சிங்கமே! குற்றம்பார்க்குமிடத்திலே சுற்றமுண்டோ, ஒரு குலத்திலே பிறந்த அண்ணன்தம்பிமாருடனே கூடிவாழும் வாழ்வினைப் போல் வேறொரு உறுதியுண்டோ, பெரிய இப்பூமியைப் பெறுவது காரணமாக எதிர்ப்பது நம்மிருவருக்குங் குற்றமல்லவோ என்றார் தருமபுத்திர மகாராசர். எ. று. (கசு)

உரிமையுள தம்பியர்க ளுணர்வறியா மையினவைக்க ணுரைத்த மாற்றம், பரிபவமோ கேட்டோர்க்குப் பரிபவமென் பதுபிறராற் பட்டா லன்றோ, கருதிலது மற்றெவர்க்கு மொவ்வாதோ கண்மலரிற் கைப டாதோ, பொருதொழிலுங் கடைநிலத்திற் கிடந்ததே யென மொழிந்தான் புகழே பூண்பான்.

[எ-து.] உரிமையுள்ள தம்பிமார்கள் அறியாமையினாலே சபையிலே சொன்னவார்த்தைகள் நமக்கு இழிவையுண்டாக்குமோ, இழிவென்பது அன்னியராற் சொல்லப்பட்டாலல்லவோ அது நினைக்குமிடத்தில் ஒருவருக்கும் பொருந்தாதோ கண்மலரிற் கைப்பட்டால் அந்தக்கையைத் துணிக்கலாகுமோ உன்விருப்பத்தின்படி யுத்தமும் யிருக்கின்றதே என்றார். கீர்த்தி ஒன்றையே தரிக்கின்றவராகிய தருமபுத்திரமகாராசர். எ-று.()

சூடுகின்ற துழாய்முடியோன் சுரருடனே முனிவர்களுஞ் சுருதி நான்குந், தேடுகின்ற பதஞ்சிவப்பத் திருநாடு பெறத்தூது செல்லவேண்டாம், வாடுகின்ற மடப்பாவை தன்வரமு மென்வரமும் வழுவா வண்ணங், கோடுகின்ற மொழியவன்பா லெனைத்தூது விடுகவினிக் கொற்ற வேந்தே.

(எ-து.) துளபமாலையணிந்த ஸ்ரீகிருஷ்ணதேவரானவர் தேவர்களோடு முனிவர்களும், நாலுவேதங்களுந் தேடுகின்ற பாதஞ்சிவப்ப நடந்து நாம்

நம்முடைய் திருநாடு பெறும்பொருட்டுத் தூதுசெல்ல வேண்டுவதில்லை, தன்சபதம் நிறைவேறவில்லையேயென்று வாடுகின்ற திரௌபதியினுடைய பிரதிக்கினையும், என் பிரதிக்கினையுந் தப்பாதவிதம் முன்சொன்னசொல்லை மாறுகின்றவனாகிய துரியோதனன்னிடத்தில் இனி என்னைத் தூதாக அனுப்புந் தருமபுத்திரரேயென்றான் வீமசேனன். எ-று. (க௮)

மலைகண்ட தெனவென்கைம் மலர்த்தண்டின் வலிகண்டு மகவான்மைந்தன்; சிலைகண்டுமிருவர்பெருந் திறல்கண்டு நமக்காகத் திருமா னின்ற, நிலைகண்டு மிவள்விரித்த குழல்கண்டு மிமைப்பளவி னேரார் தம்மைக், கொலைகண்டு மகிழாம லவன்குடைக்கீ ழுயிர் வாழக் குறிக்கின் றீரே.

(எ-து.) மலையின் வலிமையைக்கண்டதென என் கையிலிருக்கின்ற தண்டாயுதத்தினுடைய வலிமையைக்கண்டும், இந்திரகுமாரனாகிய அர்ச்சுனனுடைய காண்டீபத்தின் வலிமைகண்டும், நகுலசகாதேவருடைய வல்லமையைக்கண்டும், நமக்குச்சகாயமாக ஸ்ரீகிருஷ்ணதேவரிருக்கும் நிலைகண்டும், இந்தத் திரௌபதி விரித்த அளகபாரத்தைக்கண்டும், ஒரு நிமிஷமாத்திரத்திலே நம் பகைவராகிய துரியோதனாதியரைச் சர்வசங்காரம்பண்ணி மகிழ்ச்சியடையாமல் அத்துரியோதனனுடைய குடைக்கீழே யிருந்து வாழும்படிக்கு எண்ணுகின்றீர் தருமபுத்திரரே என்றான் வீமசேனன். எ-று. (கக)

வெம்புயவீ மனும்வெகுண்டு மீண்டுமிவை யெடுத்துரைப்ப மேகமேனிப், பைம்பொனெடுந் தனித்திகிரிப் பரந்தாமன் கருணை யுடன் பரிந்து நோக்கி, யம்புவியின் முன்பிறந்தோ ராசுநெறி முறையுரைத்தா லதுகே ளாமற், றம்பியரு மறுப்பரோ தலைவ வினிக் கடுங்கோபந் தணிக வென்றான்.

(எ-து.) வலிய புயமுடைய வீமசேனனுங் கோபித்து மறுபடியும் இந்த வசனங்களை எடுத்துச்சொல்ல மேகம்போன்ற திருமேனியும் பசிய பொன் போன்ற நெடிய ஒப்பற்ற சக்கிராயுதமுமுடைய ஸ்ரீகிருஷ்ணதேவர் கிருபையுடன் பரிவுடனே பார்த்துப், பூமியிலே முன்பிறந்த தமையன்மார் இராசநீதி முறைமை சொன்னால் அதைக்கேளாமல் தம்பிமார்களும் மறுப்பார்களோ, தலைமைபெற்ற வீமசேனனே! இனி உன்கடியகோபத்தைத் தணிப்பாயென்று திருவுளம்பற்றினார். எ-று. (உ0)

மைக்காள முகிலூர்தி வானவர்கோன் றிருமதலை வணங்கி நின்று, முக்காலங் களுமுணரு முகுந்தனுக்கு முதல்வனுக்கு மொழிந்தான் மன்னே, வக்காலம் பொறுத்தவெலா மமையாம லின்ன

மிருந் தறமே சொன்னு, லெக்காலம் பகைமுடித்துத் திரௌபதி யுங் குழன் முடிக்க விருக்கின்றுளே.

(எ-து.) மைபோலுங் கரியமேகவாகனனுன தேவந்திரனுடைய குமாரனுகிய அர்ச்சுனன் வணக்கஞ்செய்து நின்று இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலமென்னும் மூன்றுகாலங்களையுமறியும் ஸ்ரீகிருஷ்ணதேவருக்கும் தருமபுத்திரருக்குஞ் சொல்லினுன்; அதென்னவென்றால் அந்தக்காலத்திலே துரியோதனன்பண்ணின குற்றங்களைப்பொறுத்த பொறுமையெல்லாம் போதாமல், இன்னமும் போர்செய்யாமலிருந்துதருமத்தையேசொல்லிக்கொண்டிருந்தால் இனி எந்தக்காலத்தில் பகையைமுடித்துத் திரௌபதியுங் கூந்தலை முடிக்கவிருக்கின்றுளென்று பின்னுஞ் சொல்லுவான். எ-று. [உக]

தேவரா யினும்பழையதயித்தியரா யினுமற்றுஞ் செப்புகின்றோர், யாவரா யினுமெதிர்த்தோ ருயிருணவென் றிருப்பதுவா மென்கை வாளி, மூவரா யவர்களுக்கு முதல்வனு கியமூர்த்தி முகிறேய் பூக, மீவரா லுகளும்வயற் குருநாடே னிவனவன்பால் வேண்டு மாறே.

(எ.து.) தேவர்களானுலும் பழைய அசுரரானுலும் பின்னுஞ் சொல்லுகின்ற வலிமைபெற்றபேர் எவர்களானுலும் எதிர்த்தபேர்களுடைய உயிரைத் தனக்குப் புசிப்பென்று நினைத்திருப்பது என்கை பாணமானது திரிமூர்த்திகளானவர்களுக்கு முதல்வராகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியே! மேகத்தை முட்டியிருக்கின்ற கமுகின்மேல் வராலினம் பாய்கின்ற கழனிகள் சூழ்ந்த குருநாட்டை என்னநிமித்தம் இந்தத் தருமபுத்திரர் துரியோதனனிடத்தில் வேண்டுகிறதென்று பின்னுஞ்சொல்லுவான் அர்ச்சுனன். எ-று.

தீண்டாத கற்புடைய செழுந்திருவைத் துகிலுரியச் செய்லொன் றின்றி, நீண்டோனே கரியோனே நிமலாவென் றரற்றினளாய் நின்று சோர, மாண்டார்போலதுகண்டு மன்னவையில் யாமிருந்த மாசு தீர, வேண்டாவோ வேண்டுவது மேம்படுநல் லறமேயோ வேந்தர் வேந்தே.

(எ-து.) அக்கினியைப்போல் தீண்டப்படாத பதிவிரதமுடைய திரௌபதியைச் சபையிலே துரியோதனன் துற்சாதனனைவிட்டுத் துகிலுரிந்தபொழுது அவள் யாதொரு செயலுமில்லாதவளாய் நெடியவனே நீலவண்ணனே நிர்ம்மலசொரூபனே யென்று முறையிட்டவளாகி நின்று சோர்வையடைய இறந்தவர்களைப்போலே அதைக்கண்டும் இராசசபையிலே யாங்க ளனைவருமிருந்த குற்றந்தீரவேண்டாமோ அவனிடத்தில் பூமியை யாசிப்பது நல்ல தருமந்தானே மன்னர்க்கு மன்னவனுகிய தருமபுத்திரரேயென்று பின்னுஞ்சொல்லுவான் அர்ச்சுனன். (எ-று) [உஉ]

பொன்னொருந் திகிரியினான் போனாலும் புகழ்வேந்தன் புகன்ற வெல்லாஞ், சொன்னாலு மவன்கேளான் விதிவலியாற் கெடுமதிகண் டோன்று தன்றே, யெந்நாளு முவர்நிலத்தி நல்விரைவித் திடினும் விளை வெய்தி டாது, பன்னாகந் தனக்கமிர்தங்கொடுத்தாலும் விட மொழியப் பயன் கொ டாதே.

[எ-து.] பொற்பிரகாசம் பொருந்திய சக்கரத்தையுடைய ஸ்ரீகிருஷ்ண தேவர் தூதாகப்போனாலும் புகழையுடைய தருமபுத்திரர் சொன்ன வார்த்தைகளெல்லாஞ் சொன்னாலும் அந்தத் துரியோதனன் கேளான், விதியினுடைய வலிமையாலே கெடுமதி கண்ணுக்குத் தோற்றுது எந்நாளுங் களர்நிலத்திலே நல்ல விரைகளை விரைத்தாலும் விளையமாட்டாது, விஷப்பற்களையுடைய சர்ப்பத்திற்குப் பால்கொடுத்து வளர்த்தாலும் விஷத்தை யல்லாமல் வேறொரு பயனைக் கொடாது. [எ-று] [௨௪]

பார்த்தனிவை புகன்றிறைவன் பணித்தருள விருந்ததற்பின் பரிவினோடுந், தீர்த்தனிரு பதமிறைஞ்சித் தருமனையுங் கைதொழுதுசினங்கொள் வேலா, னீத்தனெடுங் கடலுழபா ரடலைவர் பெறுவரெனு நிகழ்ச்சி பொய்யோ, கோத்தருமந் தனிலாண்மை கூறுதோ கூறுகநீ கொற்ற வேந்தே.

(எ-து.) அர்ச்சுனன் இந்தவசனஞ்சொல்லி ஸ்ரீகிருஷ்ணதேவர் கையமைக்கவிருந்தபின்பு நகுலனனவன் அன்புடனே ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினுடைய இரண்டு பாதங்களையும் வணங்கித் தருமபுத்திரரையும் வணங்கி முன்னிழந்த சமுத்திரஞ்சூழ்ந்த பூமியைப் பெருமைபொருந்திய பஞ்ச பாண்டவர் பெருவார்களென்று சொல்வது பொய்யோ இராசதருமத்தில் ஆண்மகனுக்குரிய ஆண்தன்மையைச் சொல்லாதோ நீ சொல்வாய் வெற்றியையுடைய தருமராசனேயென்று பின்னுஞ் சொல்லுவான். எ-று. (௨௫)

கேவலந்தீர் வரியபகை கிடக்கமுகில் கிளர்மழைக்குக் கிரியொன்றேந்தும், கோவலள்போ யுரைத்தாலுங் குருநாடு மரசுமவன் கொடுக்க மாட்டா, னுவலம்பூதலத்தரசர் நாடிரந்தோமென நம்மை நகையா வண்ணங், காவலன்றன் படைவலியுமெனது தடம் புயவலியுங் காணலாமே.

(எ-து.) கேவலமாகத் தீர்வதற்கு அரியபகையிருக்க மேகஞ்சொரிகின்ற மழையைத் தடுப்பதற்குப் பசுத்திரள்களைக் காக்கும்பொருட்டுக் கோவர்த்தனபர்வதத்தை யேந்திய ஸ்ரீகிருஷணதேவர் தூதுபோய்ச்சொன்னாலுங் குருநாட்டையும் அரசையும் அத் துரியோதனன் கொடுக்கமாட்டான் ஆகையினாலே சம்புத்தீவாகிய இந்தப் பூமியிலே யிருக்கின்ற அரசர்கள் நாட்டை யிரந்தோமென்று நம்மை நகையாதபடி, துரியோதனனுடைய

சேனை வலிமையும் என்னுடைய விசாலமாகிய புஜவலிமையும் பார்க்கலா மென்று பின்னுஞ்சொல்லுவான் நகுலன். எ-று. [உசு]

அன்னநடை யரம்பைதனை யவுணர்கவர்ந் திடவிமையோ ரர சுக் காக, முன்னமவ ருடன்பொருத் சிறைமீட்டா னங்குலத்து முதல்வ னன்றோ, மன்னவையில் யாங்காண மடவரலைத் துகிலுரி ந்த வலியோன் றன்பா, லின்னமிரந் தவன்குடைக்கீ ழிருந்தக்கா னம்மையுல கென்சொ லாதோ.

(எ-து) அன்னம்போன்ற நடையையுடைய தேவரம்பையை அசுரர்கள் பிடித்துக்கொண்டுபோக அப்போது அவள் பயந்து கூப்பிடுவது தெரிந்து இந்திரன் பொருட்டு முற்காலத்திலே அந்த அசுரருடனே யுத்தஞ்செய்து சிறைமீட்டவன் நம்முடைய குலத்துத் தலைவனாகிய புரூரவச்சக்கரவர்த்தி யல்லவோ இராசசபையிலே நாம் காணும்படிக்குத் திரௌபதியை மான பங்கஞ்செய்த வலிமையையுடைய துரியோதனனிடத்தில் இன்னம் யாசி த்து அவன் குடைநிழலி லிருந்தால் நம்மை உலகம் என்னசொல்லாதென்று பின்னுஞ் சொல்லுவான் நகுலன். எ-று. [உஎ]

கானெறிபோய்க் கரந்துறைந்து கடவநாட் கழித்ததற்பின் கான நீங்கி, யீனமிலா வகைவந்தார் நந்துணைவ ரெனச்சிறிது மிர ங்கா னாகின், மாநகரும் வளநாடு முரிமையுந்தன் மொழிப்படியே வழங்கா னாகிற், றானறியா தவன்பிறர்போய்க் கற்பித்தா லறிவனோ தரணி வேந்தே.

(எ-து.) வனவாசம் பன்னிரண்டுவருஷமும், அக்கியாதவாசம் ஒரு வரு ஷமும் இருந்து கழிக்கவேண்டிய கடமையாயுள்ள நாள்களைக் கழித்தபிற் பாடு காட்டைவிட்டு ஈனமில்லாதபடி வந்தார்கள் நம்முடைய அண்ணன் தம்பிமார்களென்று கொஞ்சமும் இரக்கஞ்செய்யானாகில் தாயாதிபகூ முண்டான மகத்தாகிய நகரமும் வளத்தையுடையநாடும் மற்ற சுதந்தரத் தையும் தன் சொல்லின்படியே கொடாமற்போனானாகில் தானே யறியாத வன் ஒருவர் போய்ச்சொன்னால் அறிவானா பூமிக்கரசனாகிய தருமபுத்தி ரரே யென்றான் நகுலன். எ-று. (உஅ)

நகுலனிவை யுரைத்ததற்பி னன்றெனக்கை யமைத்தருளி நகுலன் சொல்லு, மிகல்விசையன் றன்மொழியுந் திறல்வீம னியம் பியதும் யாவுங் கேட்டோம், புகலரிய வுணர்வுடையோய் புகழு டையோய் திறலுடையோய் புகனீ யென்ன, முகிலனைய திருமேனி முகுந்தனுக்கு மனமுருக மொழிகின் றானே.

(எ-து.) நகுலன் இந்தவசனஞ்சொல்லியபின் நல்லதென்று கையாலடக்கி யருளி நகுலன்சொன்னதும் வலிமையுடைய அர்ச்சுனன் சொன்னதும்

சௌரியத்தையுடைய வீமசேனன்சொன்னதும் ஆகிய எல்லாவற்றையுங் கேள்விப்பட்டோம்; சொல்லுதற்கரிய அறிவையுடையவனே! கீர்த்தியை யுடையவனே! சௌரியத்தை யுடையவனே! உன்கருத்தை நீ சொல்லென்றுகேட்கக் கரியமேகத்தை யொத்த திருமேனியை யுடைய ஸ்ரீகிருஷ்ணதேவரைப்பார்த்து மனமுருகும்படிச் சொல்லுவான் சகாதேவன். எ-று.

சிந்தித்த படிநீயுஞ் சென்றாலென் னொழிந்தாலென் செறிந்த நூறு, மைந்தர்க்குண் முதல்வனிலம் வழங்காமலிருந்தாலென் வழங்கி னாலென், கொந்துற்ற குழலிவளு முடித்தாலென் விரித்தாலென் குறித்த செய்கை, யந்தத்தின் முடியும்வகை யடியேற்குத் தெரியுமோ வாதி மூர்த்தி.

(எ-து.) ஆதிநாராயணராகிய ஸ்ரீகிருஷ்ணதேவரே! நீர் நினைத்தபடியே தூதுபோனாலென்ன, அதைவிட்டாலென்ன, நூற்றுவருக்குள் முதல்வனாகிய துரியோதனன் பூமிகொடாவிட்டாலென்ன கொடுத்தாலென்ன பூங்கொத்தையுடைய அளகபாரத்தை இத்திரௌபதை முடித்தாலென்ன விரித்தாலென்ன, நீர் நினைத்தகாரியம் முடிவிலே முடியும்விதம் அடியேனுக்குத் தெரியுமோவென்றான் சகாதேவன். எ-று. (௨௦)

முருகவிழ்க்கும் பசுந்துளப முடியோனே யன்றலகை முலைப்பா லுண்டு, மருதிடைச்சென் றுயர்சகடம் விழவுதைத்துப் பொதுவர்மனை வளர்ந்த மாலே, யொருவருக்குந் தெரியாதிங் குன் மாய்கை யானறிவே னுண்மை யாகத், திருளவுத்துக் கருத்தெதுவோ வதுவெனக்குங் கருத்தென்றான் றெய்வ மன்னன்.

(எ-து.) வாசனையைவீசுகின்ற பசிய துளபமாலையையணிந்த கிரீடத்தை யுடையவரே! அன்று பூதகியினுடைய முலைப்பாலையுண்டும் சாபம்பெற்றிருந்த மருதமரத்தினிடையிலே புகுந்தும், உயர்ந்தபண்டியி னுருக்கொண்டுவந்த அசுரனை விழும்படியுதைத்து யாதவர்மனையில் வளர்ந்தருளிய ஸ்ரீகிருஷ்ணதேவரே இங்கே நீர்செய்கின்ற மாயம் ஒருவருக்குந் தெரியாது, எனக்குத்தெரியும் ஆகையால் சத்தியமாக உம்முடைய திருவுளத்துக்கு நினைப்பு எதுவோ அதுவோ எனக்குங் கருத்தென்றான் தெய்வத்தை யொத்த சகாதேவன். எ-று (௨௧)

இவ்வண்ணஞ் சகாதேவ னியம்புதலு நகைத்தருளி யிகலோர் சொன்ன, வவ்வண்ணம் புகலாமல் விரகுரைத்தா னிவனென்ன வவனோ டாங்கோர், பைவண்ண மணிக்கூடந் தனிலெய்திப் பாரதப்போர் பயிலா வண்ண, முய்வண்ணஞ் சொல்லுகநீ யுபாயமெனத் தொழுதுரைப்பா னுரங்கொள் வேலான்

(எ-து.) இந்தப்பிரகாரஞ் சகாதேவன் சொன்னமாத்திரத்திலே ஸ்ரீகிருஷ்ணதேவர் புன்சிரிப்புக்கொண்டு தர்மபுத்திராதியர் சொன்ன அவ்விதஞ்

சொல்லாமல் இவன் உபாயமாகச் சொன்னனென்று அவனுடனே அங்கே நாகரத்தினத்தினு விழைக்கப்பட்டிருக்கின்ற ஒரு ஏகாந்தஸ்தானத்திலே போய் இந்த பாரதயுத்தஞ் செய்யாதவிதம் பிழைக்கும்படி நீ ஒருபாயஞ் சொல்லென்று கேட்க அவரை வணங்கிச் சொல்லுவான் சகாதேவன். எ-று. (௩உ)

வேறு.

கலிவிருத்தம்.

நீபாரத வமரில் யாவரையு நீறுக்கிப்
பூபாரந்தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணு
கோபாலா போரேறே கோவிந்தா நீயன்றி
மாபாரத மகற்ற மற்றூர் சொல் வல்லாரே.

(எ-து.) நீர்பாரதயுத்தத்திலே சகலதேசத்து இராசவர்க்கத்தையும் குருக்ஷேத்திரத்திலேகூட்டிச் சாம்பலாக்கிப் பூமிபாரந்தீர்க்க இந்த எத்தனஞ் செய்தீர், மேகவண்ணரே! பசுக்களைப் பரிபாலனஞ்செய்தவரே! யுத்தத்திற்கு ஆண்சிங்கம்போன்றவரே! கோவிந்தரே! இந்த மகாபாரதத்தை நீக்கவல்லவர் உம்மையல்லாமல் வேறே யாரிருக்கிறூர்கள் சொல்லுவீரென்று பின்னுஞ்சொல்லுவான் சகாதேவன். எ-று. (௩௩)

பாராளக் கன்னனிகற் பார்த்தனை முன் கொன்றணங்கின்
காரார் குழல்களைந்து காலிற் றளைபூட்டி
நேராகக் கைப்பிடித்து நின்னையும்யான்கட்டுவனேல்
வாராமற் காக்கலா மாபா ரதமென்றூன்.

(எ-து.) கர்னனைப்பூமியாளும்படிப் பட்டங்கட்டி அவனைக் கொல்லுகிறேனென்று பகைத்திருக்கின்ற அர்ச்சுனனை முன்னே கொலைசெய்து திரௌபதியினுடைய கூந்தலைக் களைவித்து காலிலே விலங்கைப்பூட்டி உம்மையும் யான் நேராகக் கையாற்பிடித்துக் கட்டுவனேயானல் இந்த மகாபாரதயுத்தம் வாராமற்படிக்குக் காக்கலாமென்றூன் சகாதேவன். எறு-

முன்னநீ கூறியவை யெல்லா முடித்தாலு
மென்னை நீ கட்டுமா றெவ்வா றெனமாய
னுன்னைநீ தானு முணராதா யுன்வடிவந்
தன்னைநீ காட்டத் தளைந்திடுவேன் யானென்றூன்.

(எ-து) திருமாலானவர் முன்னே நீ சொல்லியபடி அவைகளெல்லாஞ் செய்து முடித்தாலும் என்னை நீ பிடித்துக் கட்டும் விதம் எப்படியென்று கேட்க உமது பெருமையை யறியாத நீர் உம்முடைய வடிவைக்காட்டிஞல் நான் கட்டுவேனென்றூன் சகாதேவன். எ-று. (௩௫)

மாயவனு மன்பன் மனமறிவான் கட்டுகவென்
றூய வடிவு பதினாறா யிரங்கொண்டான்
ஆயவனு மூலமாந் தோற்றமுணர்ந் தெவ்வுலகுந்
தாய வடியிணைக டன் கருத்தி னாற்பிணித்தான்.

(எ-து.) ஸ்ரீகிருஷ்ணதேவரும் அன்பனுடைய மனதையறியும்படி நம்மைக் கட்டுவாயென்று தம திச்சையினால் ஒன்றையொன்று ஒத்ததாகிய பதினாறாயிரம் வடிவுகொண்டார், பரிசுத்தனாகிய சகாதேவனும் அவ்வடிவுகளுக்கெல்லாம் ஆதியாகிய வடிவை ஞானத்தாலறிந்து எந்தவுலகத்தையுந் தாவியளந்த இரண்டுபாதங்களையுந் தன்கருத்தாகிய கயிற்றினாலே கட்டினான். எ-று. (௩௬)

நீதேவ னென் றறிந்து நெஞ்சாற் றனைக்கட்டுஞ்
சாதேவன் கண்களிக்கத் தானேயாய் முன்னின்றான்
பூதேவ ருங்கனகப் பூங்கா நிழல்வைகும்
மாதேவ ருந்தேடிக் காணா மலரடியோன்.

(எ-து.) பதினாறாயிரம் வடிவிலே மூலமாகிய வடிவையறிந்து நீதான் தேவனென்று நிச்சயித்து மனதினாலே தன்னைக்கட்டிய சகாதேவனுடைய கண்கள் களிக்கும்படி அவ்வுருவங்களை மறைத்துத்தானே பிரத்தியக்ஷமாய் முன்னே நின்றார். பூலோகத்துத் தேவரும் பொன் மயமாகிய மலர்களையுடைய பஞ்சதருவினிழலிலே தங்கிய பெருமைபொருந்திய தேவர்களுந் தேடிக்காணாத தாமரைமலரையொத்த பாதங்களையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவர். எ-று. (௩௭)

அன்பாலின் றென்னை யறிந்தே பிணித்தமைந்தா
வென்பாதந் தன்னை யினிநீ விடுகவென் றுரைப்பா
வன்பா ரதப்போரில் வந்தடைந்த மைவரையு
நின்பார்வை யாற்காக்க வேண்டு நெடுமாலே.

(எ-து.) பத்தியினாலே இன்று என்னை அறிந்து கட்டிய பிள்ளாய்! இனி என்னுடைய பாதத்தை நீ விடக்கடவாயென்று ஸ்ரீகிருஷ்ணத்தேவர் சொல்ல வன்மை பொருந்திய பாரதயுத்தத்திலே வந்துசேர்ந்த எங்கள் ஐவரையும் உம்முடைய கடாக்ஷத்தினாலே ரக்ஷிக்கச்செய்ய வேண்டும் நெடியமகாவிஷ்ணுவே யென்றான் சகாதேவன். எ-று (௩௮)

என்றெடுத் திறைஞ்சி யிருதா மரைத்தாளி
லொன்றுங் கதிர்முடியாற் கோமென் றுரைத்தருளி
யின்றிங் கிருவேமு மிப்போ துரைத்தமொழி
யொன்றும் பிறரறிய வோதா தொழிகென்றான்.

(எ-து.) இப்படியென்று பலமுறைசொல்லி வணங்கி இரண்டு தாமரை மலர்போன்ற பாதங்களில் நமஸ்கரித்த சகாதேவனுக்கு அப்படியே செய்வேனென்று சொல்லியருளி இன்று நாமிரண்டுபேரும் இப்போது பேசிய சொல்லொன்றும் அன்னியரறியச் சொல்லாதே யென்றார் ஸ்ரீகிருஷ்ண தேவர். எ-று. (ங௯)

ஆண்டிருந்த வவைநீங்கி யறிவுடையோ ரிருவோரும்
பாண்டவர்கண் முன்னெய்திப் பழுதில்புகழ்ப் பாஞ்சாலி
நீண்டகருங் குழல்சோர நின்றானை முகநோக்கி
யீண்டவரி லிளையோனிச் சமயமிக விழிதென்றான்.

(எ-து.) அவ்விடத்தே யிருந்த சபையினின்றும் நீங்கி அறிவுடைய அவ்விரண்டுபேரும் தருமபுத்திரர் முதலானோரிருக்கின்ற சபைக்குவர அப்போது குற்றமற்ற கீர்த்தியையுடைய நெடிய கருமைபொருந்திய அளக பாரஞ்சோர நின்ற, திரௌபதியின் முகத்தைப்பார்த்து ஸ்ரீகிருஷ்ணதேவருக் கிளையவராகிய சாத்தகியாழ்வார் இந்தச்சமயம் நல்லது நீ கேட்க வேண்டியவைகளைக் கேளென்றார். எ-று. (சo)

தருமனுக்குங் கருத்திதுவே தமருடன்போர் புரியாம
லிருநிலத்தி லுடன்வாழ்த லிவர்க்குமினி யென்றுரைத்து
வரிமலர்க்கண் புனல்சோர மலர்மறந்த குழல்சோர
விரிமலர்ச்செஞ் சேவடிக்கீழ் வீழ்ந்தழுதாள் மின்னனையாள்.

(எ-து.) சாத்தகியாழ்வார் சொன்ன வசனங்கேட்டு ஞாதிகளுடனே யுத்தஞ்செய்யாமல் பெருமைபொருந்திய பூமியிலே கூடிவாழ்வதற்கே தருமபுத்திரருக்குங் கருத்து, இந்தச் சகாதேவர்க்கும் இதுவே கருத்தென்று சொல்லி செவ்வரிபரந்த நீலோற்பலமலரையொத்த கண்களிலே நீரொழுகப் பூமுடித்தலை மறந்த அளகபாரமுஞ் சோர்வையடைய என்னுடைய பிரதிக்கினை எவ்விதத்தில் முடியுமென்று ஸ்ரீகிருஷ்ணதேவருடைய விரிந்த தாமரை மலரையொத்த சிவந்த திருவடியிலே விழுந்து பிரலாபித்தாள் மின்னலையொத்த வடிவையுடைய திரௌபதி. எ-று. (சக)

சாலக் கனகன் றனிமைந் தனைமுனிந்த
காலத் தவனறைந்த கற்றா ணிடைவந்தாய்
மூலப்பே ரிட்டழைத்த மும்மதமால் யானைக்கு
நீலக் கிரிபோன்முன் னின்ற நெடுமாலே

(எ-து.) ஆதிநாராயணன் எங்கேயிருக்கிறான், இந்தத் தூணிலுமிருப்பானோ சொல்லடாவென்று ஒப்பற்ற தன்னுடைய குமாரனாகிய பிரகலாதனை இரணியனெனவன் மிகவுங் கோபித்தகாலத்திலே அவனலறையப்பட்ட கற்றூணிலே நரசிங்கவுருவங்கொண்டுவந்தாய், ஆதிமூலமேயென்று

பெயரிட்டழைத்த மும்மதங்களையும் பொழிகின்ற பெரிய யானைக்கு நில கிரிபோல எதிரே யெழுந்தருளிவந்த நெடிய மகாவிஷ்ணுவேயென்றாள் திரௌபதி. எ-று. (௪உ)

கற்றைக் குழல்பிடித்துக் கண்ணிலான் பெற்றெடுத்தோன்
பற்றித் துகிலுரியப் பாண்டவரும் பார்த்திருந்தார்
கொற்றத் தனித்திகிரிக் கோவிந்தா நீயன்றி
மற்றைக்கு மென்மான மார்வேறு காத்தாரே.

(எ-து.) கற்றையாகிய என்னுடைய அளகபாரத்தைப் பிடித்துத் திருத ராஷ்டிரன்பெற்ற குமாரனாகிய துச்சாதனன் என்னுடைய துகிலைப்பற்றி உரியும்போது பஞ்சபாண்டவரும் பார்த்திருந்தார்கள், வெற்றிபொருந்திய ஒப்பற்ற சக்கிராயுதத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவரே அந்தக்காலத்தும் என்மானத்தை உம்மையல்லாமல் வேறே யார்வந்து காத்தார்களென்று பின்னுஞ்சொல்லுவாள் திரௌபதி. எ-று. (௪௩)

மன்றி லழைத்தெனக்கு மாசளித்த மன்னவன்பாற்
சென்றுதமக் கைந்தூர் திறல்வீரர் பெற்றிருந்தா
லன்று விரித்த வருங்கூந்தல் வல்வினையே
னென்று முடிப்பதினி யெம்பெருமா னென்றழுதாள்

(எ-து.) சபையிலே அழைத்து எனக்குக் குற்றத்தைத்தந்த, துரியோ தனனிடத்திற்போய்ச் சுத்தவீரராகிய பஞ்சபாண்டவர் தமக்கு ஐந்தூர் பெற்று உயிர்வாழ்ந்திருப்பார்களாகில், அன்றுவிரித்த அரிய அளகபாரத் தைத் தீவினையுடைய அடியேன் இனி என்றைக்கு முடிப்பது எமது கடவுளேயென்று அழுதாள் திரௌபதி. எ-று. (௪௪)

தண்டிருந்த திவன்கரத்திற் றனுவிருந்த தவன்கரத்தில்
வண்டிருந்த பூங்குழன்மேன் மாசிருந்த தெனவிருந்தாள்
கண்டிருந்தீ ரெல்லீருங் கருதலர்பா லூர்வேண்டி
யுண்டிருந்து வாழ்வதற்கே யுணர்கின்றீ ருரையீரே.

(எ-து) இந்த வீமசேனன்கையில் தண்டாயுதமிருந்தது, அந்த அர்ச்சு னன்கையில் காண்டீபமென்னும் வில்லிருந்தது வண்டுகள்மொய்த்திருக் கின்ற பூவையணியும் கூந்தலின்மேல் மாசேறியிருந்த தென்னும்படி யிருந்த திரௌபதியை நீங்களெல்லோரும் பார்த்திருந்தீர்கள், சத்துருக்களிடத் திலே ஊரைப் பெற்றுக்கொண்டு புசித்து உயிர்வாழ்ந்துக்கொண்டிருப்ப தற்கு நினைக்கின்றவர்களே! இதற்கு உத்திரவு சொல்லுங்களென்றார் சாத் தகியாழ்வார். எ-று. (௪௫)

சண்டமுகி லுருமனைய சராசந்தன் றனக்கஞ்சி
வண்டுவரை பரஞ்ச வடமதுரை கைவிட்ட

திண்டிறன்மா தவன்மதியோ திகழ்தருமன் றன்மதியோ
பண்டுமவர் கருத்தறிந்து பார்போய்வேண் டுவதென்றான்.

(எ-து.) வேகத்தையுடைய பிரளயகாலத்து இடியையொத்த சராசந்த னென்னும் அரசனுக்குப்பயந்து வளப்பத்தையுடைய துவாரகையைக் கோட்டையாகக்கொண்டு வடமதுரையென்னும் பட்டணத்தைக் கை விட்ட வலிய சௌரியத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவருடைய புத்தியோ பிரகாசத்தையுடைய தருமபுத்திரருடைய புத்தியோமுன்னமே அவர் கருத்துத்தெரிந்திருந்தும் போய்ப் பூமியைவேண்டுவது என்னென்றார் சாத்தகியாழ்வார். எ-று. (௩௬)

சாத்தகிமின் றிவையுரைப்பச் சடைக்குழலா ளழுதரற்றக்
கோத்தருமன் முதலாய குலவேந்த ரைவரையும்
பார்த்தருளி யருள்பொழியும் பங்கயக்க ணெடுமாலு
மேத்தரிய பெருங்கற்பி னிளையாளுக் கிவையுரைப்பான்.

(எ-து.) சாத்தகியாழ்வார் எழுந்துநின்று இந்தவசனஞ்சொல்ல, சடை பட்ட கூந்தலையுடைய திரௌபதி பிரலாபித்துப் புலம்ப, அப்போது தலை வணங்கிய தருமபுத்திரர் முதலாகிய ஐவரையும் பார்த்தருளிக் கிருபையைப் பொழிகின்ற தாமரைக்கண்ணராகிய ஸ்ரீகிருஷ்ணதேவருந் துதிசெய்தற் கரியபெரிய பதிவிரதத்தையுடைய தங்கையாகிய திரௌபதிக்கு இவை களை யருளிச்செய்வார். எ-று. (௩௭)

தொல்லாண்மைப் பாண்டவர்க்குத் தூதுபோய் மீண்டதற்பி
னல்லாயுன் பைங்கூந்த னானே முடிக்கின்றே
னெல்லாருங் காண வினிவிரிப்ப தெண்ணரிய
புல்லார்த மந்தப் புரமாதர் பூங்குழலே.

(எ-து.) பழமையாகிய சௌரியத்தையுடைய பஞ்சபாண்டவர்க்காகத் தூதுபோய் வந்தவுடனே நற்குணமுடைய திரௌபதியே உன்னுடைய பசியகூந்தலை நானேமுடிப்பேன் எல்லாரும் பார்க்கும்படி இனி விரிக்கப் படுவது எண்ணிக்கையற்ற சத்துருக்களுடைய அந்தப்புரத்தி லிருக்கின்ற ஸ்திரீகளுடைய பூவையணிந்த கூந்தல் எ-று. (௩௮)

மைக்குழலாய் கேளாய் மருவா ருடற்புலத்துப்
புக்குழலா குங்கொழுவாம் போர்வா ளபிமன்னுத்
தொக்குழலும் வெங்கோன்மைத் தொல்வேந்தர் தங்குலமு
மிக்குழலுஞ் சேர முடியா திரானென்றான்.

(எ-து.) கரியகூந்தலையுடைய திரௌபதியே! கேட்பாயாக சத்துருக்க ளுடைய தேகங்களாகிய வயலிலே புகுந்து உழுதற்கு ஆகின்ற கொழுப்

படையென்று சொல்லலாகும் யுத்தத்திலேசிறந்த வாளாயுதத்தையுடைய அபிமன்னியுவானவன் ஒன்றாகக் கூடி யுழலுகின்ற கொடுங்கோலின் நன்மையையுடைய பழைய அரசர்களது குலங்களையும் உன்னுடைய அளக பாரத்தையும் ஒருங்குசேர முடியாமல் விடானென்று பின்னுஞ்சொல்லுவார் ஸ்ரீகிருஷ்ணதேவர். எ-று. (சகூ)

துன்று பிணியோர் துறந்தோ ரடங்காதோர்
கன்று சினமனத்தோர் கல்லா தவரிளையோ
ரொன்று முறைமை யுணரா தவர்மகளி
ரென்றுமிவர் மந்தணத்தி லெய்தப் பெறாதாரே.

(எ-து.) நிறைந்த வியாதியையுடையவர்கள், துறந்த மகத்துக்கள், மனமடங்காதவர்கள், கன்றிய கோபம்பொருந்திய மனமுடையவர்கள், கல்வியில்லாதவர்கள், சிறுபிள்ளைகள், பொருந்திய நீதியறியாதவர்கள், பெண்கள் ஆகிய இவர்கள் என்றும் ரகசியம்பேசுமிடத்தில் அடையப்பெறாதவர்கள். எ-று. (ருo)

பெண்ணீர்மை குன்றாப் பெருந்திருவின் செங்கமலக்
கண்ணீர் துடைத்திருதன் கண்ணிற் கருணையெனுந்
தெண்ணீரி னாற்பொருந்த தேற்றினான் சாற்றுகின்ற
மண்ணீ ரனலனிலம் வான்வடிவா மாமாயன்.

(எ-து.) பெண்களுக்குரிய சிறந்த குணங்களுள் ஒன்றுங் குறைவில்லாத திரௌபதியினுடைய செந்தாமரைமலர்போன்ற கண்களிலிருந்து வருகின்ற நீரைத் துடைத் தருளித் தன்னுடைய கண்களிலிருக்குங் கிருபையென்கிற தெளிந்தநீரினாலே சம்மதிக்கும்படி தெளியச்செய்தார் சொல்லுகின்ற பஞ்சபூதவடிவமாகிய பெருமைபொருந்திய ஸ்ரீகிருஷ்ணதேவர். எ-று

என்னக் கழறி யிருந்தோ ருரைதவிர்த்து
நின்னைப் பவரில்லாய் நீயே தெனவுரைப்ப
மன்னர்க்கு மன்னவன்பான் மாயோனுந் தூதாகிப்
பொன்னுற்ற நேமிப் பொருபரித்தேர் மேற்கொண்டான்.

(எ-து.) இப்படி உறுதியாக சொல்லியிருந்த ஸ்ரீகிருஷ்ணதேவருடைய வசனங்களை நீக்கி உமக்குச் சமானம் ஒருவருமில்லாத கண்ணபிரானே! தேவரீரே தூதுபோகவேண்டு மென்று பஞ்சபாண்டவர்கள் சொல்ல, அரசர்க்கரசனாகிய துரியோதனனிடத்திலே போக ஸ்ரீகிருஷ்ணதேவருந் தூதுவனாகி மகாமேருமலைக்குச் சமானமாகிய போர்செய்யவல்ல குதிரைகள்கட்டிய தேரின்மேலேறிக்கொண்டார். எ-று. (ருஉ)

சங்கு மணிமுரசுஞ் சல்லரியுந் தாரைகளு
மெங்கு முழங்க வெழில்வெண் குடைநிழற்ற

பொங்கு கவரி புடையிரட்ட வெண்ணிலா
வங்கமொரு நான்கு மவனிபருந் தற்சூழ

[எ-து.] அப்போது சங்கவர்க்கங்களும் அழகிய பேரிகைகளுஞ் சல்லரி என்னும் வாத்தியங்களும் தாரைஎன்னும் வாத்தியங்களும் எவ்விடத்தி லுஞ் சத்திக்க அழகிய வெள்ளைக் குடைநிழலைச்செய்ய மிகுந்த சாமரை கள் இரண்டு பக்கங்களிலும் வீசிவர சணக்கில்லாத ரதகஜ துரகபதாதி யாகிய சதுரங்கங்களும் பூமியையாளும் அரசர்களும் தன்னைச் சூழ்ந்து வரப் புறப்பட்டார் ஸ்ரீகிருஷ்ணதேவர். எ-று. [ருஙட]

கல்வரையும் பாலைக் கடுஞ்சுரமுங் கான்யாறு
நல்வரையு நீர்நாடு நாளிரண்டிற் சென்றருளித்
தொல்வரைய கோபுரமு நீண்மதிலுஞ் சூழ்ந்திலங்கும்
மல்வரைய தோளான் வளமா நகர்கண்டான்.

[எ-து.] மணியாம்பருக்கையைக் கொண்டிருக்கின்ற பாலையென்னுங் கடிய சுரங்களையும் காறுைறையும் நல்லமலைகளையும் நீரையுடைய நாடுகளை யும் இரண்டுநாளிற்கடந்துபோய் பழமையானமலைக் கொப்பாகியகோபுரங் களும் நெடிய மதிலுஞ்சூழ்ந்து விளங்குகின்ற மல்யுத்தஞ்செய்கின்ற மலைக் குச் சமானமாகிய தோளையுடைய துரியோதனனது வளப்பத்தையுடைய பெரிய நகரத்தைக்கண்டார் ஸ்ரீகிருஷ்ணதேவர். எ-று. [ருச]

கலிநிலைத்துறை.

மேவுசெந்துகிர்த திரளுமா மரகத விதமுங்
கோவைவெண்கதிர்த் தாளமு நிரைநிரை குயிற்றித்
தாவும்வெம்பரித் தேரினுன் றனக்கெதிர் சமைத்த
காவ ணங்களிற் றோன்றின பச்சிளங் கமுகம்.

[எ-து.] அந்த மார்க்கத்திலே பசுமையும் இளமையும் பொருந்திய கமுகு கள் பழுத்த குலையும் பச்சைக்குலையும் பாளைகளும் விளங்கிய தெப்படி யிருக்கிறதென்றால், சிவந்த நிறத்தையுடைய பவளங்களும் வெவ்வேறு விதமாகிய மரகதங்களும் கோர்வைசெய்த வெள்ளிய கிரணத்தையுடைய முத்துக்களும் வரிசைவரிசையாகப் பதித்துத் தாவிநடக்கும் வெவ்விய குதிரைகள்கட்டியதேரையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவருக்கெதிரே யுண்டாக் கிய மண்டபங்கள்போ லிருந்தன. எ-று. [ருரு]

வம்பு லாமகிழ் சந்தனம் வருக்கைமா கந்தஞ்
சம்ப கந்தமா லம்பல திசைதொறுந் தயங்க
யும்பர் நாயகன் வரவுகண் டுளங்களி கூர்ந்து
தும்பி பாடின தோகைநின் றாடின சோலை.

[எ-து.] பரிமளம்வீசிய அகிலும் சந்தனமும் பலாவும் மாவும் வாசனை பொருந்திய சண்பகமும் பச்சிலைமரமும் எந்தத்திசைகளிலும் விளங்கியிருக்கப்பெற்ற சோலைகளில் தேவநாயகனாகிய ஸ்ரீகிருஷ்ணதேவர் வருதலைக்கண்டு மனமகிழ்ச்சியடைந்து வண்டுகள்பாடின மயில்கள் நின்று கூத்தாடின. எ-று. [ருகூ]

அணிகொ ளத்தின புரியெனு மணங்குசெந் திருவின்
கணவ னுக்கெதிர் காட்டுநீ ராசனங் கடுப்ப
மணமி குத்தசெந் தாமரை மலருடன் சிறந்த
புணரி யிற்பெரும் புனலையுங் கொள்வன பொய்கை.

[எ-து.] அழகினைக்கொண்ட அஸ்தினபுரியென்னும் ஒரு கன்னிகையானவள் மகாலெட்மிக்கு நாயகனாகிய ஸ்ரீகிருஷ்ணத்தேவருக்கு எதிரே காட்டுகின்ற ஆலத்திக்கொப்பாக வாசனைமிகுந்த சிவந்த தாமரைமலருடனே சிறந்த கடல்போல் நிறைந்த நீரையுங்கொண்டிருந்தன பொய்கைகள். எ-று. [ருஎ]

நடந்த நாயகன் கோலமாய் வேலைசூழ் ஞால
மிடந்த நாளினி லதுவழி யாகவந் தெழுந்து
படர்ந்த பாதல கங்கையப் படர்மதில் சூழ்ந்து
கிடந்த தாமெனச் சிறந்தது தாழ்புனற் கிடங்கு.

[எ-து.] தூதுநடந்த ஸ்ரீகிருஷ்ணதேவர் பூருவத்திலே வராகரூபியாய்ச் சமுத்திரஞ்சூழ்ந்த பூமியைப் பேர்த்தநாளில் அதுவழியாகவந்தெழுந்து பரவிய பாதாளகங்கை அந்த நகரின் பெரிய மதிலை வளைந்துக்கொண்டிருந்ததென்று சொல்லும்படிச் சிறந்திருந்தது தாழ்ந்த நீரையுடைய அகழி. எ-று. (ருஅ)

அடிநி லத்திலே படிவன விடிமு கிலனைத்து
முடிநி லத்தினுக் குடுபதத் தினுமுடி வில்லை
நெடிய சக்கரப் பொருப்பையு நிகரிலா விதற்கோர்
படிவ குத்ததா மெனும்படி பரந்தது புரிசை.

[எ-து.] கீழ்நிலத்திலே இடியையுடைய மேகங்களெல்லாம் படிவனவாகும் அதினுடைய மேல்நிலத்துக்கு நட்சத்திர பதவியிலும் முடிவில்லை நீண்ட சக்கரவாளகிரியையும் நிகரில்லாத விதற்கு ஒருபடி யொப்பாகச் செய்ததாமென்று சொல்லும்படி பரந்திருந்தது அந்த அஸ்தினபுரத்து மதில். எ-று. [ருகூ]

பகலி னுங்கடும்பரிதிதன் கதிர்பரப் பாம
லிகலி யெங்கணு மெறிந்தகால் பொருதலி னேத்திப்

புகலுகின்றமந் தாகினித் தரங்க மேபோல
வகல்வி சும்பிடை மிடைவன நெடுங்கொடி யாடை.

[எ-து] நடுப்பகலிலும் வெப்பத்தையுடைய சூரியன் தன்கிரணங்களை வீசாமலிருக்கும்படி வலிமைகொண்டு எவ்விடத்தும் காற்றுவீசித்தாக்குகிற படியால் உயர்வாகச் சொல்லுகின்ற கங்கையினுடைய அலைகளைப்போலே அகன்ற ஆகாசத்தினிடத்திலே நெருங்குவன நெடிய கொடியாகக்கட்டிய வஸ்திரங்கள். எ-று. [சுo]

புயங்க பூமியோ புரந்தரற் கமைத்தபொன் னுலகோ
தயங்கு செல்வநீ டளகையோ நிகரெனுந் தரத்த
வியங்கு கார்முகில் வரையினின் றெழுவன போல
வயங்கு காரகி னறும்புகை யுயிர்ப்பன மாடம்.

[எ-து] நாகலோகமோ இந்திரனுக்குச் செய்த பொன்மயமான தெய்வ லோகமோ விளங்காநின்ற செல்வமிருந்த அளகாபுரியோ இந்தநகரென்று சொல்லப்படும் தகுதியையுடையது சஞ்சரிக்கின்ற கரிய மேகங்கள் மலைகளின்மேலே நின்று எழுவனபோல் பிரகாசிக்கின்ற வயிரம்பற்றிய அகலினது நறியதாகிய புகைகளை வீசுகின்றன மாளிகைகள். எ-று. [சுக]

மன்னர் வேழமுஞ் சேனையு மெதிரெதிர் மயங்கப்
பின்னுமுன்னுமெம் மருங்கினும் பெயரிடம் பெறுமற்
றுன்னி நின்றவ ரேகுமி னேகுமி னென்னு
மென்னு மோசையே யுள்ளன வீதிகளெல்லாம்.

[எ-து] அரசர்களுடைய யானைகளுஞ் சேனைகளும் ஒன்றுக்கொன்று எதிரிட்டு மயங்கப் பின்னும் முன்னும் எந்தப்பக்கத்திலும் காலைத் தூக்கி வைத்துப்போக இடம்பெறமாட்டாமல் நெருங்கி நின்றவர்கள் செல்லுங் கோள் செல்லுங்கோள் என்று பலமுறைசொல்லும் சத்தங்களே யுண்டா யிருக்கின்றன வீதிகளெல்லாம். எ-று. [சுஉ]

வரையெ லாம்பல வனமெலாங் கடலெலாம் விளைந்த
தரையெ லாம்படு பொருளெலாந் தனித்தனி குவித்த
நிரையெ லாங்கவ ராவண நீர்மையைப் புலவோ
ருரையெ லாந்தொடுத் துரைப்பினு முவமைவே றுளதோ.

[எ-து.] மலைக ளெல்லாவற்றினு முண்டாகின்ற மாணிக்கமுதலிய திரவியமும் காடுக ளெல்லாவற்றினு முண்டாகின்ற சந்தனமுதலிய திரவியமும் கடல்க ளெல்லாவற்றினு முண்டாகின்ற சங்குமுதலிய திரவியமும் நாடுக ளெல்லாவற்றினு முண்டாகின்ற செந்நெல் முதலியதிரவியமும் வெவ்வேறாகக் குவித்து வரிசையாக வைக்கப்பெற்ற கடைவீதியினுடைய

தன்மையை வித்துவான்கள் கற்ற சொல்லுகளெல்லாம் செய்யுளாகத் தொடுத்துச்சொன்னாலும் வேறே உபமானமுண்டோ. எ-று. [௩௩]

விரவு கான்மல ரினும்பல வீரரின் விதங்கள்
பரவை வெண்மண லினும்பல புரவியின் பந்தி
யிரவில் வானமீ னினும்பல யானையி னீட்ட
நிரைகொள் சார்த்துளி யினும்பல தேரணி நிலையே.

[எ-து] காட்டிலிருக்கின்ற பல மலர்களைக் காட்டினுஞ் சுத்தவீரர்கள் அதிகமாக இருப்பார்கள்; சமுத்திரத்தினுடைய வெள்ளைமணலைக்காட்டிலும் குதிரைப்பந்திகள் அதிகமாகவிருக்கும்; இராத்திரியில் ஆகாசத்திலே தோன்றும் நட்சத்திரங்களைக்காட்டிலும் யானைக்கூட்டங்கள் அதிகமாக இருக்கும்; வரிசையான மேகதாரைகளைக்காட்டிலும் இரதங்கள் அதிகமாக விருக்கும். எ-று. [௩௪]

ஆசி லாமறை யந்தண ராலய மொருபான்
மாசி லாமுடி மன்னவர் மாளிகை யொருபாற்
காசி லாமதி யமைச்சர்தங் கடிமனை யொருபாற்
பேசி லாவள வணிகர்தம் பேரிட மொருபால்.

[எ-து.] குற்றமில்லாத நான்கு வேதமுந்தெரிந்த பிராமணர் திருமாளிகைகள் ஒருபக்கத்திலிருக்கும், களங்கமில்லாத கிரீடந்தரித்த அரசர் அரண்மனைகள் ஒருபக்கத்திலிருக்கும், பழுதில்லாத புத்தியின்மிகுந்த மந்திரிகளுடைய காவல்கொண்டவீடுகள் ஒருபக்கத்திலிருக்கும், சொல்லுமிடத்தில் நிறைந்த மிகுந்தசெல்வமுடைய வைசியாது இடமகன்ற வீடுகள் ஒருபக்கத்திலிருக்கும். எ-று. [௩௫]

மங்க லந்திகழ் மனையெலாம் வலம்புரி யோசை
திங்க டோய்நெடுந் தலமெலாஞ் செழுஞ்சிலம் போசை
யங்கண் மாநக ரனைத்துமும் முரசதி ரோசை
யெங்க ணுங்கட வுளரிடந் தொறுமுழ வோசை.

[எ-து.] கல்யாணஞ்செய்கின்ற வீடுகளெல்லாம் வலம்புரியென்னுஞ் சங்கத்தொனியாயிருக்கும், சந்திரன் தோய்கின்ற உயர்வாகிய உப்பரிகைகளெல்லாம் நடனஞ்செய்கின்ற மாதர்களுடைய செழுமைபொருந்திய சிலம்போசையா யிருக்கும், அழகிய இடத்தையுடைய மகத்தாகிய நகர முழுவதும் வெற்றிமுரசு வீரமுரசு தியாகமுரசென்னும் மூவிதப்பேரிகையோசையா யிருக்கும், எக்காலத்தும் தேவாலயங்களிலெல்லாம் மத்தளவோசையா யிருக்கும். எ-று. [௩௬]

முன்றி லின்கணின் றிடம்பெறு வரசர்மா முடிக
ளொன்றோ டொன்றறரைந் தெற்றிமே லொளிபெரு றி சிதறி

சென்று சென்றறு திசைதொறுந் திகழ்ந்தது செம்பொற்
குன்றெ னும்படி குருகுலநாயகன் கோயில்.

[எ-து.] தெருவாசலிலே நிற்க இடம்பெறுமல் அரசருடைய கிரீடங்கள் ஒன்றோடொன்று தேய்ந்து இடிபடுவதினல் மேலே பிரகாசிக்கின்ற அபரஞ்சிப்பொடிகள் இடைவிடாமற் றெறித்துப்போய் பொருந்துகின்றதிக்குகள்தோறும் மகாமேருமலையென்னும்படி விளங்கியது துரியோதனனுடைய அரண்மனை. எ-று. [சுஎ.]

என்றி சைக்குநல் லொளிநிமி ரெழின்மணி மகுடக்
குன்றி சைக்கும்வண் கோபுர நீணகர் குறுகித்
தென்றி சைக்குளிர் செண்பக மலர்தொறுஞ் சிறைத்தே
னின்றி சைக்கும்வண் சோலையா யமர்ந்தன னெடுமால்.

[எ-து] சூரியனெனச்சொல்கின்ற பிரகாசங்களையுடைய அழகிய ரத்நங்கள்பதித்த சிகரங்களையுடைய மலையென்று சொல்லுகின்ற வளத்தைப்பெற்ற உயர்வாகிய கோபுரத்தையுடைய நெடிய அஸ்தினபுரத்திற் சேர்ந்து அதற்குத் தென்றிசையில் குளிர்ச்சி பொருந்திய சண்பக மலர்கள்தோறுஞ் சிறகுகளையுடைய பெண்வண்டுகளிருந்து பாடுகின்ற வளப்பம் பொருந்திய சோலையினிடத்திலே எழுந்தருளினர் கிருஷ்ணதேவர். எ-று.

அன்று தூதுகொண் டிலங்கைதீ விளைத்தவ் ரைவர்க்
கின்று தூதுவந் தெயிற்புரத் திறுத்தன ரென்னுத்
துன்று தூதுவண் டினமுரற் றொடையலான் றனக்குச்
சென்று தூதுவ ரியம்பினர் சேவடி வணங்கி.

[எ-து] முற்காலத்திலே ஒருகுரங்கைத் தூதாகவிடுத்து இலங்காபுரியை அக்கினியாற் கொளுத்திய கண்ணபிரான் பஞ்சபாண்டவர்க்காக இன்று தூதாகவந்து மதிற்புறத்துச்சோலையி லிரங்கினரென்று நெருங்கிய மலரினிடத்து தூதுக்குரிய பெண்வண்டுகள் பாடுகின்ற பசிய மலர்மாலையணிந்த துரியோதனராஜனுக்குத் தூதுவர்போய் சிவந்த பாதங்களை வணங்கிச்சொன்னர்கள். எ-று. [சுகூ]

தொல்லை நாயகன் வந்தன னென்றலுஞ் சுரும்பார்
மல்லன் மாலையா னேவலான் மாநகர் மாக்க
ளெல்லை நீண்மதில் வட்டம்யோ சனையெழு நூறுஞ்
செல்வ மாநகர்த் தெருவினை யொப்பனை செய்தார்.

[எ-து] ஆதிநாயகனுகிய ஸ்ரீகிருஷ்ணதேவர் தூதுவந்தாரென்று சொன்னமாத்திரத்திலே வண்டுகள் நிறைந்த வளத்தையுடைய நந்தியாவர்த்த மாலையணிந்த மார்பனுன துரியோதனராஜனது கட்டளையினலே மகத்

தாகிய அஸ்தினபுரத்திலுள்ள ஜனங்கள் பெரியமதிலாற் சூழப்பட்ட விருத்தமாகிய எழுநூறு யோசனையளவு செல்வமிகுந்த பெரிய பட்டணத்து வீதிகளை அலங்காரஞ் செய்தார்கள். எ-று. [எ௦]

மின்னு மாமுகிற் பல்லிய விதங்கண்முன் முழங்க
மன்னர் மன்னவ னெழுந்தனன் மாலெதிர் கொள்வா
னென்னை நீயவர் கெதிர் செல்வ தென்றுதன் மருகன்
றன்னை வன்பொடு தகைந்தனன் கொடுமைகூர் சகுனி.

[எ-து] மின்னுதல்செய்யும் பெரியமேகமுழக்கத்தைப்பார்க்கிலும் நானாவித வாத்தியங்கள்சப்திக்க அரசர்க்கரசனாகிய துரியோதனன் கிருஷ்ணதேவரை எதிர்கொள்ள வெழுந்தான் அதுகண்டு தூதுவருகிறவர்களை எதிர்கொள்வது என்ன மரியாதையென்று தன் மருமகனாகிய அந்தத்துரியோதனராஜனை கடினமாகத் தடுத்துவிட்டான் கொடுமைமிகுந்துள்ள சகுனியானவன். எ-று. [எக]

சீர்வ லம்புரி திகிரிசேர் செங்கையான் றனக்குக்
கார் வலம்புரி கோயிலுங் காட்சியு மமைத்துப்
போர்வ லம்புரி நிருபரு மீளனுரும் போற்றத்
தார்வ லம்புரித் தோளின னிருந்தனன் றவிசில்.

[எ-து.] சிறப்புமிகுந்த சங்குஞ் சக்கரமுஞ் சேர்ந்த சிவந்த ருக்கரங் திகளுடைய கண்ணபிரானுக்குமேகங்கள் வலஞ்செய்யப்பெற்ற அரண்மனையும் காணத்தக்க அலங்காரங்களும் பொருந்தச் செய்து யுத்தத்திலே வலிமைபெற்றராஜவர்க்கமும் பந்துக்களும் வணங்க நந்தியாவர்த்தமாலையணிந்த புயத்தையுடைய துரியோதனராஜன் எழுந்திராமல் பொன்னாற் செய்யப்பட்ட ஆசனத்திலிருந்தான். எ-று. [எஉ]

தொல்ப கீரதி மைந்தனுந் துரோணனுஞ் சுதனும்
வில்வி தூரனுங் கிருபனு முதலிய வேந்தர்
மல்கு மூவிரு பத்துநூறுயிர மகிபர்
செல்வ நாயகர்க் கியோசனை யிரண்டெதிர் சென்றார்.

[எ-து.] அப்போது நெடுங்காலமாயிருக்கின்ற கங்காபுத்திரராகிய வீஷ்மாசாரியரும், துரோணாசாரியரும், அசுவத்தாமாவும், வில்லிலேவல்லவனான விதுரராஜனும், கிருபாசாரியரும் இவர்கள் முதலிய அரசர்களும் நெருங்கிய அறுபத்துநூறாயிரம் மன்னமண்டலீகரும் இகபரலோகங்களுக்கு தலைவனாகிய ஸ்ரீகிருஷ்ணதேவரை இரண்டுயோசனை தூரத்திலே போய் எதிர்கொண்டார்கள். எ-று. [எ௩]

வந்து வந்திரு மருங்கினு மன்னவர் வணங்கப்
பைந்து ழாய்முடிப்பர மனுங் கண்மலர் பரப்பி

யந்த மாநகர் புகுந்தபி னரசனிற் புகாமற்
புந்தி கூரருள் விதுரன்வாழ் வளமனை புகுந்தான்.

(எ-து.) வந்துவந்து இரண்டுபக்கத்திலும் அரசர்கள் பணியப் பசிய துளபமாலையணிந்த கிரீடத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவரும் அவர்களைப் பார்த்துக்கிருபைசெய்து அஸ்தினாபுரத்துக்கு வந்தபின்பு துரியோதன ராஜன் அரண்மனைக்குப் போகாமல் அறிவுமிகுந்த கருணையையுடைய விதுரராஜன் வாழ்கின்ற வளத்தையுடைய அரண்மனையிலே எழுந்தருளினார். எ-று. (எச)

வேந்தர் யாரையும் விடைகொடுத் தகன்றபின் விமலன்
வாய்ந்த மாளிகை நடுவணோர் மண்டபங் குறுகி
யாய்ந்த வல்லவர் நவமணி யழுத்திய வரியே
றேந்து மாசன மிடப்பொலிந் ததன்மிசை யிருந்தான்.

(எ-து.) எதிர்கொண்டுவந்த அரசர்களுக்கெல்லாம் விடைகொடுத்து அவர்கள்போனபின்பு ஸ்ரீகிருஷ்ணதேவர்பொருந்திய உப்பரிகையினடுவே ஒரு மண்டபத்திற்போய்ச் சாஸ்திரசிற்பங்களை ஆராய்ச்சிசெய்த வல்லவர்களாலே நவரத்தின மழுத்திய சிங்கந்தாங்குகின்ற ஆசனங்கொடுக்க அதன் மேலேபிரகாசத்துடனே எழுந்தருளியிருந்தார். எ-று. (எரு)

இருந்து வந்தரு ளிறைவனை யிறைஞ்சின னிறைஞ்சிப்
பெருந்து வந்தனைப் பிறப்பையு மிறப்பையும் பிரித்தான்
மருந்து வந்தனை யமரருக் கருளிய மாயோன்
விருந்து வந்தன னென்றுள முருகிய விதுரன்.

(எ-து.) இப்படி வந்திருந்த கிருஷ்ணதேவரை வணங்கினான்; வணங்கி நீக்கக்கூடாத பெரிதாகிய சனனமரணங்களை நீக்கினான் தேவாமிர்தத்தை வந்தனைசெய்த தேவர்களுக்குத் திருப்பாற்கடலைக்கடைந்து கொடுத்தருளிய நாராயணமூர்த்தி தன் வீட்டுக்கு விருந்தாக வந்தாரென்று மனமுருகிய விதுரனவன். எ-று. (எசா)

கோடு கொண்டகைக் குரிசிலை யலர்ந்தகோ கனகக்
காடு கண்டெனக் கண்டுதன் கண்ணிணை களியாத்
தோடு கொண்டதார் விதுரனிப் பிறப்பையுந் தொலைத்தான்
வீடு கண்டவர்க் கியம்பவும் வேண்டுமோ வேண்டா.

(எ-து.) சங்கேந்திய திருக்கரத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவரிடத்திலே மலர்ந்திருக்கின்ற கர்சரணாதி யவயவமாகிய தாமரைமலர்க்காட்டைக் கண்ட வண்டுகள்போல் தன்னுடைய கண்களிரண்டுங் களிப்பையடைந்து இதழைக்கொண்ட பூமாலையணிந்த விதுரன் இந்தப் பிறப்பையும் நீக்கி

ஞன் மோக்ஷவீட்டை யறிந்தவர்களுக்குச் சொல்லவும் வேண்டுமோ வேண்டா. எ-று. (எஎ)

உள்ளி ஞனுளார்ந் துள்ளமு முருகினு னெழுந்து
துள்ளி ஞன்விழுந் திணையடி சூடினுன் றுயரைத்
தள்ளி ஞன்மலர்த் தடக்கையாற் றத்துவ வமுதை
யள்ளி ஞனெனக் கண்களா லருந்தினு னளியோன்

(எ-து) நினைத்தான், நினைத்து மனமுருகினுன், எழுந்திருந்து துள்ளினுன், கீழேவிழுந்து இரண்டு பாதங்களையுஞ் சிரசிலே சூடினுன், துன்பத்தை நீக்கினுன், தாமரை மலர்போன்ற விசாலமாகிய கைகளால் தத்துவாமிர்தத்தை அள்ளினவ னென்னும்படி கண்களால் பகவானழகை யுண்டான் விதுரன். எ-று. (எஅ)

முன்ன மேதுயின் றருளிய முதுபயோ ததியோ
பன்ன காதிபப் பாயலோ பச்சையா லிலையோ
சொன்ன நால்வகைச் சுருதியோ கருதிநீ யெய்தற்
கென்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடி லென்றுன்.

(எ-து.) முன்னமே நித்திரை செய்தருளிய பழைய பாற்கடலோ, சேஷசயனமோ, பசியவடபத்திரமோ, சொல்லிய நாலுவேதங்களோ, நினைத்து நீர் வருவதற்குமுன் என்ன தவத்தைச்செய்தது இந்தச்சிறுகுடிசை யென்றுன் விதுரன். எ-று. (எகூ)

மும்மை யாகிய புவனங்க ளனைத்துமுன் முதல்வ
னெம்மை யாளுடை நாயகன் விருந்தினுக் கிசைந்தா
னம்மை யென்றன னறுநூ றுயிர மடையர்
தம்மை நோக்கின னவர்களும் விரைவுடன் சமைத்தார்.

(எ-து.) மூன்றுகிய புவனங்களையெல்லா முண்டருளிய முதல்வராய் எம்மை ஆளாகவுடைய ஸ்ரீகிருஷ்ணபகவான் விருந்துக்குச் சம்மதித்தாரென்று ஆச்சரியப்பட்டனன், அப்போது அறுநூறுயிரஞ் சமையற்காரரைப் பார்த்தான் அவர்களும் சீக்கிரத்திலே சமைத்தார்கள். எ-று. (அ௦)

வந்த கொற்றவேல் வரிசிலை யவர்க்கும்வா ளவர்க்குங்
கந்த டர்ப்பன கரிக்கும்வெங் கவனவாம் பரிக்கு
மைந்து பத்துநா றுயிர மரசர்க்கு மெவர்க்கு
மிந்திரர்க்கு மெய்தாவமு தெனும்படி யியற்றி.

(எ-து.) ஸ்ரீகிருஷ்ணபகவானுடனே வந்த வெற்றியையுடைய வேல் வரிந்த வில் வாள் முதலிய ஆயுதத்தை யுடையவர்களுக்கும் கட்டுத்தறியைப் பொருந்தினவாகிய யானைகளுக்கும் வெவ்விய வேகத்தையுடைய

தாவுகின்ற குதிரைகளுக்கும் ஐம்பதுலக்ஷம் அரசர்களுக்கும் மற்று முள்ள வர்களுக்கும் இந்திரனுக்கும் கிடையாத அமிர்தமென்று சொல்லும்படி சமைத்தார்கள். எ-று. (௮௧)

அமைத்த வாசநன் னீர்கொடு மஞ்சன மாடிச்
சமைத்த பல்கறி யடிசிறன் விருப்பினு லருந்தி
யுமைக்கு நாயக னிரவொழித் தருளினு னுதவ
விமைப்பி லாரமு தருந்திய வியல்பென விருந்தான்.

(எ-து.) வாசனைகட்டிய நீரைக்கொண்டு ஸ்நானஞ்செய்து சமைக்கப் பெற்ற அநேக விதமாகிய கறி யமுதுகளையும் அன்னங்களையும் தன்னு டைய விருப்பினுற் புசித்து உமாதேவிக்கு நாயகனுகிய உருத்திரனது இரத்தலை யொழித்தருளிய மகாவிஷ்ணு கொடுக்கத் தேவர்க ளமிர்தத்தை யுண்ட தன்மையென்று சொல்லும்படியா யிருந்தான். எ-று. ௮௨

வாச நீரும்வண் சுண்ணமு முறைமுறை வழங்கிப்
பூசுறுந்தொழிற் பூசினுர் சூடினுர் புனைந்தார்
வீசு சாமர மிரட்டவெண் மதிக்குடை நிழற்றக்
கேச வன்மணிக் கேசரித் தவிசிடைக் கிளர்ந்தான்.

(எ-து.) வாசனையுடைய பன்னீரும் வளத்தையுடைய பச்சைக் கருப் பூரங்களும் கிரமப்படிகொடுத்துப் பூசுகின்ற தொழிலையுடைய சந்தன முதலியவையும் பூசினுர்கள், மலர்முதலியவைகளைச் சூட்டினுர்கள், ஆப ரண முதலியவைகளை அலங்கரித்தார்கள், வீசுகின்ற சாமரங்க ளிரட்ட வெள்ளிய சந்திரவட்டக்குடை நிழலைச்செய்ய ஸ்ரீகிருஷ்ணபகவான் இரத் தினங்களாற் பதிக்கப்பட்ட சிங்காசனத்திலே எழுந்தருளியிருந்தார். எ-று

ஞான கஞ்சுக விதுரன்வாழ் மனையினு யகனும்
போன கம்புரி வுடனுகர்ந் திருந்தவப் பொழுதிற்
ருனு மேருவுக் கப்புறத் தவ்வமு தருந்தப்
பானு வும்பெருங் குடதிசைப் பரவையிற் படிந்தான்.

(எ-து.) தத்துவஞானமாகிய சீராவைத் தரித்த விதுரமகாராஜன் வாழ் கின்ற திருமனையில் ஸ்ரீகிருஷ்ணபகவான் அறுசுவையுண்டியும் அன்பு டனே புசித்திருந்த சமையத்திலே தானும் மேருமலைக் கப்புறத்தி லிருக் கின்ற அமிர்தத்தைப் புசிக்கச் சூரியனும் பெரிய மேற்றிசைக் கடலிலே மூழ்கினுன். எ-று. [௮௪]

கருதி யந்தணர் யாவருந் தங்கடன் கழிப்பச்
சுருதி யென்னும்வெஞ் சாபமே லம்புகை தொடுத்துப்
பருதி தன்பெரும் பகைவர்மேல் விடுத்தலிற் பரந்த
குருதி யாமென நிவந்தெழச் சிவந்தது குடபால்.

(எ-து.) அப்போது பிராமணர்களெல்லாரும் மாலைப்பொழுதிலே தாங்கள்செய்யும் மாலைக்கடனைக் கழிக்க நினைத்து வேதமென்கிற வெவ்விய வில்லின்மேல் நீராகிய பாணத்தைக் கையாற் றெடுத்துச் சூரியனுடைய பெரிய சத்துருக்களின்மேல் விட்டபடியால் பரவிய உதிரமென்று சொல்லும்படி மிகவுஞ் சிவந்தது மேற்றிசை. எ-று. (அரு)

தரங்க வாரிதிப் புறத்தெதிர் மலைந்தவெஞ் சமரி
லுரங்கொள் கூர்நெடும் படைகளா லவுணர்த முடலிற்
றுரங்க மேழுடைக் கடவுளு நிரைநிரை துணித்த
கரங்கள் போன்றன கரைதொறும் வளர்துகிர்க் காடு.

(எ-து.) அலைகளையுடைய சமுத்திரத்துக் கப்புறத்தே எதிரே பொருகின்ற வெவ்வியயுத்தத்திலே வலிமையைக்கொண்ட கூர்மைபொருந்திய நெடிய ஆயுதங்களால் அசுரருடைய தேகத்திலே ஏழு குதிரையுடைய சூரியனும் வரிசை வரிசையாகத் துணித்த கைகள்போலு மிருந்தன கரைகள்தோறும் வளர்கின்ற பவளக்காடு. எ-று. (அசு)

நீதி யிற்புகல் பகலெலா நீரர மகளிர்
மீது றைத்தெழும் வெவ்வெயில் படாவகை விரித்துப்
போது புக்கதென் றினம்படச் சுருக்கிய பூம்பட்
டாத பத்திரம் போன்றன தாமரை யடவி.

(எ-து.) நீதியினாற் சொல்லுகின்ற பகற்பொழுதெல்லாம் நீரரமகளிர்கள் தங்கள் மேலே பட்டு விழுகின்ற வெவ்விய வெய்யில்படாதவிதம் விரித்துப் பொழுது போயிற்றென்று ஒன்றாகச்சுருக்கிய அழகிய பட்டுக்குடைகள் போன்றன அங்கேமலர்ந்த தாமரைக்காடு. எ-று (அஎ)

கலந்து மங்கல முழவுவெண் சங்கொடு கரங்க
மிலைந்த பூங்குழல் வனிதையர் மெய்விளக் கெடுப்பக்
கலந்த தாமரைத் தடமெலாங் குவிந்தது கண்டு
மலர்ந்த தாமரை போன்றது மாநகர் வட்டம்

(எ-து.) மங்கலப்பேரிகைகள் வெள்ளிய சங்கங்களோடுங்கூடிச் சப்திக்க மலர்மாலைகளைத் தரித்த கூந்தலையுடைய மங்கையர்கள் மெய்யாகிய விளக்குகளெடுக்கக் கலந்திருக்கின்ற தாமரைமலர்கள் தடாகங்களனைத்தினுங் குவிந்ததைக்கண்டு மலர்ந்திருக்கின்ற தாமரைமலரை யொத்தது பெரிய அஸ்தினபுரத்தினுடைய வட்டம். எ-று. (அஅ)

உரக புங்கவன் மணிமுடி யொப்பன தீப
மிரும ருங்கினு மாயிர மாயிர மேந்த
வரிசு மந்தபே ராசனத் தழகுட னிருந்த
புரவ லன்றனைப் புண்ணிய விதுரனும் போற்றி.

(எ-து.) ஆதிசேடனுடைய ஆயிரமணிமுடிகளை யொப்பனவாக தீபங்களை இரண்டு பக்கத்திலு மிரண்டாயிரமேந்தச் சிங்கத்தினாற் சுமக்கப்பட்ட பெரிய ஆசனத்திலே அழகுடன் எழுந்தருளியிருந்த ஸ்ரீகிருஷ்ண பகவானைப் புண்ணியத்தையுடைய விதுரராசனும் வணங்கி. எ-று. (அக)

பொங்க ராவணை பொலிவறப் போந்துபின் பொதுவர்
தங்கள் பாடியில் வளர்ந்துமா மருதிடைத் தவழ்ந்து
கங்கை மானதி கால்வழி கருணையங் கடலே
யிங்கு நீதனித் தெழுந்தவா றுரைத்தரு ளென்றான்.

(எ-து.) பொலிவினையுடைய சேஷசயனமானது பொலிவுநீங்க வந்து பின்பு ஆயர்பாடியில்வளர்ந்து மகத்தாகிய மருதமரத்திடத்திற் றவழ்ந்து கங்காநதி திருவடியிலே பெருகப்பெற்ற கிருபைக்கடலே! இவ்விடத்திலே நீர் தனித்தெழுந்தருளியவாறு அனுக்கிரகம் பண்ணுமென்றான் விதுரன் எ-று. (கூ0)

தோட்டு வந்துசெந் தேனுகர் சுரும்புசூழ் தொடையாய்
காட்டு வந்துமுன் றிரிந்துதங் கடவநாட் கழித்து
நாட்டு வந்தபே ரைவர்க்கு நல்குரு நாடு
கேட்டு வந்தன மென்றனன் விதுரனுங் கேட்டான்.

(எ-து.) பூவிதழிலே வந்து சிவந்த தேனைப்புசிக்கின்ற வண்டுகள்சூழ்ந்த மாலையையுடையவிதுரனே! காட்டிலே முன்னே சந்தோஷமாய்த் திரிந்து தங்களுக்குச் செல்லவேண்டிய நாளைக்கழித்து நாட்டிலே வந்திருக்கிற பஞ்சபாண்டவர்களுக்கு நல்ல குருநாட்டைக் கேட்கவந்தோமென்று அருளிச்செய்தார் அதை விதுரனுங் கேட்டான். எ-று. (கூக)

முழக்கி னானுயர் முரசுயர்த் தவன்றனக் குரிமை
வழக்கி னாலறிந் தடலரவுயர்த்தகோன் வழங்கான்
சழக்கி லிருதிசையினு முரசெழுச் சமரி
லுழக்கி னலல துனார்வனோ வென்றவ னுரைத்தான்.

(எ-து.) சத்தத்திலுயர்ந்த முரசக்கொடியுயர்த்த தருமபுத்திரமகாராசனுக்கு உரிய பாகத்தை முன்னோர்கள் வழக்கத்தினாலறிந்து வலிமையுள்ள சர்ப்பக்கொடியுயர்த்த துரியோதனன் கொடுக்கமாட்டான் குற்றமில்லாத எட்டுத்திக்கிலும்பேரிகைசப்திக்க யுத்தத்திலே கலக்கினாலல்லாமல் அறிவானோவென்று சொன்னான் விதுரராசன். எ-று. கூஉ

வாளை வாவியி லுகண்டெழ வளரிளங் கமுகின்
பாளை வாயளி முரன்றெழும் பழநநா டுடையான்
நாளை வாழ்வவர்க் களித்தில னெனிலெதிர் நடந்து
மூளை வாய்புக முடிப்பம்வெம் போரென மொழிந்தான்.

(எ-து.) வாளைமீன்கள் தடாகத்திற் குதித்தெழும்ப வளருகின்ற இளங் கமுகின் பாளையினிடத்திலே வண்டுகள் சத்தித்து எழுகின்ற வயல்கள் சூழ்ந்த நாட்டையுடைய துரியோதனன் நாளை அவர்கள் வாழ்வாகிய பங் கைக் கொடாமற் போனனேயானல் எதிர்போய் மூளையானது வாயிலே புகும்படி யுத்தஞ்செய்து முடிப்போமென்ருர் ஸ்ரீகிருஷ்ணபகவான். எ-று

விரைந்து பாய்பரி மன்னவ ரிதம்பட மெலிவுற்
றிரந்து வேண்டினுங் கிளைஞருக் கொருபொரு ளீயார்
பரந்த போரினி லெதிர்த்தவர் படப்படப் பகழி
துரந்த போதவர்க் குதவுவர் சொன்னவையெல்லாம்.

(எ-து.) சீக்கிரத்திலே தாவுகின்ற குதிரைகளையுடைய அரசர்கள் இத முண்டாகும்படி வாடி இரந்து வேண்டிக்கொண்டாலும் பந்துக்களுக்கு ஒருபொருளையுங் கொடுக்கமாட்டார்கள் பரவிய யுத்தத்திலே எதிர்த்த வர்களெல்லாம் சாகும்படி பாணங்களைப் பிரயோகம் பண்ணின் மாத்திரத் திலே சொன்னவைகளை யெல்லாம் அவர்களுக்குக் கொடுப்பார்கள். எ-று.

என்று பாரினி லியற்கையும் விதுரனுக் கியம்பி
வென்று போர்கெழு நேமியான் விடை கொடுத் தருளி
குன்று போர்புயக் காவலர் கொடுந்துடி கறங்க
மன்ற லுண்மலர்ப் பாயலின் மீதுகண் வளர்ந்தான்.

(எ-து.) இப்படியென்று உலகத்தினுடைய இயற்கையும், விதுரராசனுக் குச் சொல்லி யுத்தத்திலே ஜெயித்து விளங்கிய சக்கரத்தையுடைய ஸ்ரீகிரு ஷ்ணபகவான் செலவுகொடுத்து மலைபோலுந் தோளையுடைய காவலர்கள் பறைகளை முழக்க வாசனைபொருந்திய அன்றலர்ந்த புஷ்பசயனத்தின் மேல் நித்திரைசெய்தார். எ-று. [கூரு]

குளிரு மாமதி முகத்தொளிர் குமுதவாய் முல்லைத்
தளவ வாணகை பரப்பியே சததள மலர்க்கை
யளவி லேகுவித் தளியொடு மகன்றிலா மையினல்
களிகொ டோள்விலைக் கணிகையைப் போன்றதக் கங்குல்.

[எ-து] குளிருகின்ற பெரிய சந்திரனகிய முகத்தினிடத்தே விளங்கு கின்ற செவ்வல்லியாகிய வாயையும் முல்லையரும்பாகிய ஒளியையுமுடைய பற்களையுங் காட்டித் தாமரைமலராகிய கைகளை யளவாகக்குவித்து அளி யுடனே மலர்ந்திராமையினலே களிப்பைக்கொண்ட தோளைவிற்கின்ற வேசியைப்போன்றது அந்தராத்திரி. எ-று. [கூசு]

அளைந்த வாரிருட் டதல்பொரு தொருபுடை யண்டம்
பிளந்ததா மெனக் கரும்படாம் பீறிய தென்ன

வளைந்த வேழ்கடல் வற்றமேல் வடவையின்முகத்தீக்
கிளர்ந்த தாமெனக் கிளர்ந்தன விரவியின் கிரணம்.

[எ-து.] அலையப்பெற்ற நிறைந்த விருளாகிய சமுத்திரத்தைத் தாங்க மாட்டாமல் ஒருபக்கத்து அண்டம் பிளந்ததாமென்று சொல்லவும் கரிய வஸதிரங் கிழிந்ததென்னவும் வளைந்திருக்கின்ற ஏழுசமுத்திரமும் வற்றிப் போக மேலிருக்கின்ற வடவாமுகாக்கினி பிரகாசித்ததென்று சொல்லவும் விளங்கின சூரியகிரணம். எ-று. [கூஎ]

இகலும் வாளர வுயர்த்தவ னிருந்ததொல் பதியி
லகில நாயக னொருதனி நடந்தவா றறிந்து
மகர வாரிதி யகன்றுமா மருங்குற வளைந்த
திகிரி போலவந் தெழுந்தன னிரவிகீழ்த் திசையில்.

[எ-து.] பகைகொண்ட ஒளியையுடைய சர்ப்பக்கொடியையு யர்த்த துரி யோதனனிருந்த பழைய அஸ்தினபுரத்திலே லோகநாயகராகிய ஸ்ரீகிரு ஷ்ணபகவான் ஒப்பற்ற தனியேவந்தது தெரிந்து மகரமீனையுடைய சமுத் திரத்தைவிட்டு நீங்கிப் பக்கத்திலே வளைந்த சக்கரத்தைப்போல வந்து உதயமானன் சூரியன் கீழ்திசையில். எ-று. [கூஅ]

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சோதி வானநதி மைந்த னும்பழைய சுருதி யாலுயர் துரோணனு
மாதி யாகவுய ரரசரும் படியடுத்த மன்னவ ரநேகரும்
நீதி யாறுவகை யைந்து பத்தொடாறு பத்தொ ராயிரவர் நிருபருந்
தீதி லாததிற லக்கு ரோணிபதி னென்று பெற்றமிகு சேனையும்

[எ-து.] ஒளியையுடைய கங்காபுத்திரனாகிய வீஷ்மாசாரியரும் பழமை யாயுள்ள வேதத்தாலுயர்ந்த துரோணாசாரியர் முதலாக வுயர்ந்த ராசாக்க ளும் பூமியையாளுகின்ற அனேக ராசாக்களும் நீதியையுடைய மூன்று லட்சத்து அறுபத்தோராயிரம் நிருபர்களும் குற்றமற்ற வலியினையுடைய பதினோரக்குரோணியாகிய மிகுந்த சேனைகளும். எ-று. [கூகூ]

தொக்கவெண்கவரியால வட்டமிவை சொட்டை வாள்சுரிகை துகிலுடன், கைக்க ளாஞ்சிபல கொண்டு வாவிவரு கன்னி மங்கை யர்க ளனைவரும், மிக்க வேதியர்கள் வல்ல பல்கலைவி தத்தி லுள்ள வர்கள் யாவருந், தக்க தம்பியரும் வந்து சூழவுயர்தாணி மேனிரு பர் தம்பிரான்.

[எ-து.] கூட்டமாயுள்ள வெள்ளிய சாமரங்களும் ஆலவட்டங்களும் வளைதடியும் வாளும் உடைவாளும் வஸ்திரங்களும் கைகளிலே காளாஞ்சி கள் கொண்டு உலாவிவருகின்ற இளமையான மங்கையர்க ளனேகம்

பேரும் மிகுந்த பிராமணர்களும் அநேக கலைஞானங்களிலே வல்லமையுடையவர்கள் யாவர்களும் தகுதியுள்ள தம்பிமார்களும் வந்து சூழ்ந்து கொண்டிருக்க உயர்ந்த பூமியிலே அரசர்க்கரசனாகிய துரியோதனன். எ-று. [௧௦௦]

நிரைகதிர்க்கனக நீள்சுவர்ப்பவள வுத்தரத்திடைநிரைத்த வெண், பருமணிக்கிரண பற்பராகவயிரத்துளாமிசை பரப்பி வெண், டரளவர்க்கவயிடூரியப்புதிய கோமலப்பலகை தைத்துமா, மரகதத்தினெடு கோடி தூணிடையமைத்த மண்டபம ருங்கரோ.

[எ-து] வரிசையாகிய கிரணங்களையுடைய பொன்னினாற் செய்த நெடிய சுவரின்மேல் பவளத்தினால் உத்தரம் போட்டுஅதன்மேல் வரிசையாகப் பரப்பிய விளக்கமான பருத்த ரத்தினங்களாலும் கிரணங்களையுடைய மாணிக்கங்களாலும் வச்சிரங்களாலும் ஆகிய துலாம் வைத்து அதன்மேலே வெள்ளிய முத்து வர்க்கங்களைப்பரப்பி வைடூரியத்தால் புதியனவாகிய அழகையுடைய பலகை தைத்து மகத்தாகிய மரகதத்தினோடு கோடி தூண்களை இடையிலே அமைத்த மண்டபத்தி னருகில். எ-று. [ ]

முட்டநித்திலநிறைத்தபந்தரினசைத்த சீரிமுகத்ததாய் வட்டமெத்தைதொடமைத்தபீடமிசை வாசவன்கொலெனவைகினான், பட்டவர்த்தனருமகுடவர்த்தனரும் வந்துசேவடி பணிந்தபின், இட்டபொற்றவிசின் முறைமையாலினி திருக்கவென்றவரையேவியே.

[எ-து.] முட்டும்படியாய் முத்தினால் வரிசையாகச் செய்த பந்தரில் நகுதலைச் செய்த சிறந்த சிங்கமுகத்தை யுடையதாய் வட்டமாகிய மெத்தையைக் கொண்டு செய்த பீடத்தின்மேல் இந்திரனைப்போல விருந்தான் அப்போது பட்டவர்த்தனர்களும் மகுடவர்த்தனர்களும் சிவந்த பாதத்தை வணங்கினார்கள், பின்பு வரிசையா யிட்டிருக்கின்ற பொன்னாற் செய்த ஆசனத்தின் மேல் கிரமப்படி இனிதாக விருக்கக் கடவீரென்று அவரை யேவுதல் செய்தார். [௧௦௨]

காவன்மன்னவர் முகங்கடோறுமிரு கண்பரப்பியமர் கருதுவோர், ஏவலின்கண்வரு தூதனாமிடையனின்று நம்மவையிலெய்தினால், ஓவலின்றியெதிர் சென்றுகண்டுதொழு துறவுகூறிலினியுங்களூர், தீவலஞ்செயவடர்ப்பனென்றுநனி சீறினான் முறைமைமாறினான்.

[எ-து.] பூமியைக்காக்கின்ற ராஜாக்களுடைய முகங்களையெல்லாந் தன்னுடைய இரண்டு கண்களாற் பார்த்து நம்மோடு யுத்தஞ்செய்ய

நினைக்கும் பஞ்சபாண்டவர்களுடைய ஏவுகையினலே வருகின்ற தூதனுகிய இடையன் இன்று நம்முடைய சபையிலே வந்தால் ஒழிதலில்லாமல் எதிர் கொண்டு வணங்கி யிரவு கொண்டாடினல் இனி உங்களுரை நெருப்பு வலங் கொள்ளும்படியாய்க் கொளுத்தி விடுவேனென்று மிகவுஞ் சீறினன் முறைமைமாறினவனுகிய துரியோதனன். எ-று. (௧௦௩)

இந்த வண்ணமுரை செய்து மன்னரு மிராச ராசனு மிருக்கவே, தந்த வண்ணனுடன் வந்த வண்ணவொளி தங்கு கண்டுயிலுணர்ந்தபின், கந்த வண்ணமலர் கொண்டுகைதொழுது காலையிற் பல கடன்கழித், திந்த வண்ணமு னிருந்த பேரவையி லேயினு னிசைகொள் வேயினன்.

(எ-து.) இந்தப் பிரகாரஞ் சொல்லி அரசர்களும் அரசர்க் கரசனுகிய துரியோதனனு மிருக்க, வெள்ளை மேனியனுகிய பலபத்திரருடனே பிறந்த ஸ்ரீகிருஷ்ணபகவான் பிரகாசந் தங்கிய நித்திரை தெளிந்த பின்பு வாசனை பொருந்திய அழகிய மலர்களைக் கொண்டு பூசைசெய்து காலையிலே செய்யவேண்டிய கடன்களெல்லாஞ் செய்துமுடித்து முன்சொன்ன பிரகார மிகுந்த பெரிய சபைக்கு எழுந்தருளினர் இசையைக் கொண்ட மூங்கிற் குழலை யுடைய ஸ்ரீகிருஷ்ணபகவான். எ-று. (௧௦௪)

துன்னு கங்கைமக னுந்து ரோணனொடு சுதனுநீதிபுனை விதுரனும், பன்னர் மன்னனையொ ழிந்த மன்னவரும் வந்து சேவடி வணங்கினர், கன்னனுந்தலை கவிழ்ந்திருந்தன னழன்று ளஞ்சகுனி கருதினன், முன்ன நின்றவர்க ளிட்ட பீடமிசை மொய்து மாய் முகிலு மெய்தினன்.

(எ-து.) அச்சபையிலிருந்த வீஷ்மாசாரியரும், துரோணசாரியரும், அசுவத்தாமாவும், நீதியைத்தரித்த விதுரராஜனுந் துரியோதனனை யொழிந்த மற்ற அரசர்களும்வந்து சிவந்தபாதத்தை வணங்கினர்கள் அப்போது கர்னமகாராஜனும் தலையைக் கவிழ்ந்துகொண்டிருந்தான், சகுனி யுளமகிழ்ந்து வெப்பமாய் நினைத்திருந்தான், எதிரேயிருந்தவர்கள் இட்ட ஆசனத்தின்மேல் நெருங்கிய துளபமாலையையணிந்த மேகவண்ணனுகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் எழுந்தருளி யிருந்தார். எ-று. (௧௦௫)

முன்ன கங்குடைகவித்த காளமுகின் முன்னி ருந்தபின் முசங்கொடா, தென்ன கந்தனை யொழித்து நென்னலிடை யிந்த மாநகரி லெய்தியும், பொன்ன கங்கொள்புய விது ரனில்லிடை புகுந்த தென்கொலிது புகலெனு, பன்ன கந்தனை யுயர்ந்த கோவுமுரை பகர மாலுமெதிர் பகருவான்.

[எ-து] முன்னே கோவர்த்தனகிரியைக் குடையாகக்கவித்த கரிய மேகவண்ணனான ஸ்ரீகிருஷ்ணபகவான் எழுந்தருளிய பின்பு முகங்கொடாமல் என் வீட்டைவிட்டு நேற்றைப்பொழுது இந்தவூரில்வந்தும் வீரலட்சுமியைக் கொண்ட புயத்தையுடைய விதுரன் வீட்டிலே போனதென்ன இதனைச் சொல்லுமென்று சர்ப்பக்கொடியை யுயர்த்த துரியோதனராஜன் கேட்க ஸ்ரீகிருஷ்ணபகவான் அதற் கெதிருத்தரஞ் சொல்லுவார். எ-று. []

என்னி னின்னிலொருபேத மில்லையிது வென்னி னின்னிலது வென்னவே, மின்னின் முன்னிலகு விறனெ டும்படைகொள் விதுரன் வந்தெதிர் விளம்பினான், னுன்னி லின்னமுள தொன்று பஞ்சவருரைக்க வந்ததொரு தூதன்யா, னின்னி லின்னடிசி லுண்டு நின்னுடன் வெறுக்க வெண்ணுமது நீதியோ.

[எ-து.] என்வீடென்றும் உன் வீடென்றும் பேதமில்லை, இது என் வீடு அதுஉன்வீடென்றுசொன்னாலும் மின்னல்போலப் பிரகாசிக்கின்ற வெற்றியுள்ள நெடிய வில்லையுடைய விதுரராஜன் வந்து எதிரே விருந்து சொன்னான், அதல்லாமல் உன்னிடத்திலே இன்னமொரு காரியமுண்டு பஞ்ச பாண்டவர்கள் சொல்லைச் சொல்லவந்த ஒருதூதன் யான் உன்னிடத்தில் இனிமையுள்ள அன்னத்தையுண்டு உன்னோடுதானே வெறுக்க நினைப்பது நீதியோவென்றார் ஸ்ரீகிருஷ்ணபகவான். எ-று. [௧௦எ]

அரவ மல்கிய பதாகை யாய்மதி பமைச்ச ராயர சழிப்பினுங், குரவர் நல்லுரை மறுக்கி னும்பிலர் புரிந்த நன்றியது கொல்லினும் ஒருவர்வாழ்மனையி லுண்டுபுன் னுமவருடனழன்று பொரவுன்னினு, மிரவியுள்ளளவு மதிய முள்ளளவு மிவர்க ளேநரகி லெய்துவார்.

[எ-து.] சர்ப்பக்கொடியையுடைய துரியோதனனே! புத்தியையுடைய மந்திரிகளாயிருந்து இராசாங்கத்தை யழித்தாலும், ஆசிரியர் சொல்லைத் தடுத்தாலும், ஒருவர்செய்த உபகாரத்தை மறந்தாலும், ஒருவர் வீட்டிற் சாப்பிட்டு பின்பு அவருடன் பகைத்து யுத்தஞ்செய்தாலும் சூரிய சந்திரர்களுள்ள வரைக்கும் இவர்கள் நரகத்திலே யடைவார்கள். எ-று. [௧௦அ]

சீத நாண்மலர்ம டந்தை கேள்வனிவை செப்ப வுந்தெரிய தொப்பிலா, நாத நாயகன் முகத்தில் வைத்தவிரு நயன னாகிமிக நகைசெய்யாத், தூத னாகிவரு தன்மை சொல்லுகெனமன்னர் மன்னனிது சொன்னபின், வேத நாறுமல ருந்தி வண்டுளப விரைசெய் தாரவனு முரைசெய்தான்.

[எ-து.] குளிர்ச்சி பொருந்திய அன்றலர்ந்த தாமரை மலரிலிருக்கும் இலட்சுமி காந்தராகிய ஸ்ரீகிருஷ்ணபகவானை இந்த வார்த்தைகளைத் தெரியச் சொன்ன மாத்திரத்தில் ஒப்பில்லாத நாயகராகிய நாதனுடைய திரு

முகத்தில்வைத்த இரண்டு கைகளையுடையவனுகி மிகவும் நகைசெய்து தூதனுய்வந்த காரியத்தைச் சொல்லுமென்று துரியோதனன் சொன்ன பின்பு வேதங்கள் மணக்கின்ற தாமரை மலராகிய நாபியையும் வாசனை வீசுகின்ற துளப மாலையையு முடைய ஸ்ரீகிருஷ்ணபகவான் அருளிச்செய் தார். எ-று. [௧௦௯]

சூதி னுலர சிழந்து நின்றுணைவர் சொன்ன சொல்லும் வழு வாதும்பா, யேதி லார்களென நொந்து தன்னிழ லிழந்த கானினி டை யெய்துமே, தீதி லாவகை குறித்த நாள்பல கழித்து வந்தனர் செகத்தினிற், கோதி லாதகுரு குலம கீபர ருரிமை நண்பொடு கொடுத்திடே.

[எ-து.] உன் துணைவராகிய பஞ்சபாண்டவர்கள் சூதாடுகையினுலே இராச்சியபாரத்தை யிழந்து சொன்ன வார்த்தையையும் தப்பாமற்போய் அயலாரென்று சொல்லும்படி நொந்து குளிர்ந்த நிழலில்லாத காட்டினிடத்தே போயும் குற்றமில்லாதபடி குறித்தநாள் அநேகமுங் கழித்து வந்தார்கள் பூமியிலே குற்றமற்ற குருகுலத்திலே பிறந்த ராஜாவே! அவர்களுடைய உரிய பூமியைச் சிநேகத்தோடு கொடுப்பாயென்று பின்னுஞ் சொல்லுவார் ஸ்ரீகிருஷ்ணபகவான். எ-று. [௧௧௦

சொல்ல வாவுரக துவச நின்னுரிய துணைவர் தங்களை யழைத்துநீ, வல்ல வாறுசில நாட ளித்தவர்க டம்மு டன்கெழுமி வாழ்தியேல், நல்ல வாய்மைநிலை யுடையை யென்றரச நாடொறும் புகழ்வா நண்புகொண், டல்ல வாமென மறுத்தி யேலறமு மாண்மையும் புகழு மல்லவே.

[எ-து.] சொல்லை விரும்புகின்ற சர்ப்பக்கொடிபடைத்த துரியோதன மகாராஜாவே! உனக்கு உரிமையுள்ள வுடன் பிறந்தவர்களை அழைத்துக் கூடியமட்டில் நீ சிலநாடு கொடுத்து அவர்களுடன் கூடி வாழ்வையே யானுல் நல்ல சத்தியத்தையு நிலைமையையு முடையானென்று ராஜாக்கள் சிநேகித்து நாள்தோறும் புகழ்ச்சி செய்வார்கள். அப்படி யல்லவென்று மறுத்தியேயானுல் அது தருமமும் சௌரியமும் கீர்த்தியு மல்ல. எ-று. []

என்று கேசவ னியம்ப வங்கெதி ரிராச ராசனு மியம்புவா
னன்று சூதுபொரு துரிமை யாவையு மிழந்து போயினர்களைவருக்
கின்று நீவிரகின் மீன வுங்கவர வெண்ணி னுலவரி லெனியனே
சென்று கானையவ ரின்ன முந்திரிவ துறுதி யென்றுநனி சீறியே.

[எ-து] இப்படி யென்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்ல அங்கே எதிரில் இராஜாதி ராஜனுகிய துரியோதனராஜன் சொல்லுவான் அன்று சூதாடித் தீங்களுரிமை யெல்லாம் இழந்துபோனவர்களாகிய பஞ்சபாண்

டவர்களுக்கு இன்று நீர் உபாயத்தினாலே மறுபடியுங் கிரகிக்க நினைத்தால் அவர்களைப்போல் நானும் எளியவனோ அவர்கள் காட்டுக்குப்போய் இன்னமுந் திரிவது உறுதியென்று மிகவுஞ்சீறி. எ-று. (கக௨)

நீவெ றுக்கிலெ னிருந்த மன்னவர் திகைக்கி லென்பல நினைக்கிலென், மேவரு கைக்கிலே னுரைத்த வுண்மைமொழி பொய்த்ததென்றமரர் புகலிலென், பூவம லர்த்தொடைய லைவரென்னுடன் வெறுத்து வெஞ்சமலர் விளைக்கிலென், ஈயி ருக்குமிட மெனினு மிப்புவியில் யான வர்க்கரசு மினிகொடேன்.

(எ-து.) நீ வெறுத்தா லென்ன, இந்த ராஜாக்கள் திகைத்தா லென்ன, பலவாறாக நினைத்தாலென்ன, போய்ச் சிறித்தாலென்ன, சொல்லிய சத்திய வசனம் பொய்த்துப் போனதென்று தேவர்கள் சொன்னாலென்ன, புட்ப மாலையைத் தரிக்கின்ற பஞ்சபாண்டவர் என்னுடனே வெறுத்து வெவ்விய யுத்தஞ் செய்தா லென்ன, ஈயிருக்கும் அவ்வள விடமானாலும் இந்தப்பூமியிலே யான் அவர்களுக்கு அரசாட்சி கொடுக்க மாட்டேனென்றான் துரியோதனன். எ-று. (கக௩)

கார்வ ழங்குரு மெனச்சி னத்தினொடு கண்ணி லான்மதலை கழறவும், பார்வ ழங்கநினை வில்லை யாகிலவர் பதிக ளாயினும் வழங்குவாய், தார்வ ழங்குதட மார்பவெண்ணவ்வை தாமு மன்னவன் மறுக்கவந், தூர்வழங்குகென வுற்றி ரந்தனனிவ் வுலகெலா முதவு முந்தியான்.

(எ-து. மேகம் முழங்கின்ற இடியைப்போல் கோபத்தோடு திருதராட்டிரனுடைய பிள்ளையாகிய துரியோதனன் சொன்னபோது பூமியைக் கொடுக்க உனக்கு மனமில்லாமற் போனால் அவர்களூர்களையாவது கொடுப்பாய் நந்தியாவர்த்த மாலையணிந்த மார்பனே யென்று சொல்ல அவைகளையுந் துரியோதனன் மறுக்க ஐந்தூராவதுகொடுப்பா யென்று இரந்து கேட்டார் இந்தவுலகத்தை யெல்லாந் தரப்பட்ட நாபிக்கமலத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணபகவான். எ-று. [ககச]

மாட ளிக்குல நெருங்கு பைந்துளப மாலை யாய்மகர வேலைசூழ், நாட ளித்திடவு மைந்து பேருடைய நகர ளித்திடவும் வேண்டுமோ, காட ளிக்கவத னிடைதெ ரிந்தொழில் வரந்து போயிலர்கள் காணவோர், வீட ளிக்கினும் வெறுப்ப ரோவிதனை விடுக வென்றெதிர் விளம்பினான்.

(எ-து.] பக்கங்களிலே வண்டின் கூட்டங்கள் நெருங்கப்பெற்ற பசிய துளபமாலையணிந்த ஸ்ரீகிருஷ்ணபகவானே! மகரமீன்களையுடைய சமுத்

திரம்சூழ்ந்த நாட்டைக் கொடுக்கவும் ஐந்துபேருடைய நகரைக் கொடுக்கவும் வேண்டுமோ நான் காட்டைக் கொடுக்க அதிலேதிரிந்து அகமிழந்து போன பஞ்சபாண்டவர்கள் இப்போது காணும்படி ஒருவீடு கொடுத்தாலும் வெறுப்பார்களோ இதனை விடக்கடவீரென்று எதிரே சொன்னான் துரியோதனன். எ-று. [ககரு]

தந்தை காதலுறு தன்மை கண்டிளைய தாய்ப யந்தவிரு தம்பியர்க், கிந்த வாழ்வுமர சுங்கொ டுத்தவனு நின்கு லத்தொருவ னிங்குளான், முந்த மாநில மனைத்தி னுக்குமுயர் முறைமை யானுரிய வரசருக், கைந்து மாநகரு நீகொடாதொழியி லென்ன தாகுமுன் தரசியல்.

(எ-து.) தன்னுடைய தகப்பனுராசைவைத்த தன்மையாய்ப் பார்த்துச் சிறியதாய்பெற்ற இரண்டு தம்பிமார்களுக்கு இந்தவாழ்வும் அரசாட்சியுங் கொடுத்த வீஷ்மாசாரியரும் உன்குலத்திலே யொருவர் இங்கே யிருக்கின்றார் பழைமையாயுள்ள மகத்தாகிய பூமிக்கெல்லாம் உயர்ந்தமுறைமையாலே உரிமைபெற்ற பாண்டவர்க்கு ஐந்து நகரமானாலும் நீகொடாதொழிந்தாயானால் உன்னரசாட்சி என்ன பிரயோசனத்தை யுடையதாகுமென்றார் ஸ்ரீகிருஷ்ணபகவான். எ-று. [ககசு]

ஒருகு லத்தினி லிரண்டு மன்னவ ருடன்பி றந்துரிமை யெய்தினு, லிருதி றத்தவரு மொக்க வாழ்வுறுத லெக்கு லத்தினு மியற்கையே, பொருகு லக்களிறு வளர்தி சைக்கண்மிகு புகழ்ப ரப்பியெழு புவிபெறுங், குருகு லத்தவரி யற்கை நன்றென மொழிந்தனன் கரிய கோவலன்.

(எ-து.) ஒருகுலத்தி லிரண்டு ராசர்களுடனே பிறந்து உரிமையையடைந்தால் இரண்டு திறத்தோறும் ஒக்கவாழ்வை யடைவது எந்த குலத்திற்கும் சுபாவமாகும் பொருகின்ற அஷ்டகஜங்கள் வளரப்பட்ட திக்குகளிடத்தில் மிகுந்த கீர்த்தியைப் பரப்பி ஏழுலோகத்தையும் பெற்ற குருகுலத்தாருடைய இயல்பு நன்றாயிருக்கின்றதென்று சொன்னார் நீலவண்ணரான ஸ்ரீகிருஷ்ணபகவான். எ-று. [ககள]

பேர ராவணை துறந்த மாயனிவை பேச வன்பினொடு பின்னையுஞ், சீர ராவினை யுயர்த்த கோவும்விழி தீயே னும்படி செயிர்த்துளே, போர ராநிருபன் மணிநெ டுஞ்சுடிகை யாயி ரங்கொடு பொருந்தபார், வீர ரானவர தல்ல வோவுரிமைவேண்டு மோவென விளம்பினன்.

(எ-து.) பெரிய சர்ப்பசயனத்தை விட்டுத்துறந்த ஸ்ரீகிருஷ்ணபகவான் இவைகளைச் சொல்ல வன்மையுடனே பின்னையுஞ் சிறந்தசர்ப்பக்கொடியை

யுயர்த்த துரியோதனனும் கண்கள் நெருப்பென்று சொல்லும்படி உள்ளே கோபித்துப் போர்செய்கின்ற சர்ப்பராசனுகிய ஆதிசேடனுல் மணிகளை யுடைய நெடிய ஆயிரம் உச்சியைக்கொண்டு சுமக்கப்பட்ட பூமி சுத்தவீர ருடைய தல்லவோ அவருக்கு உரிமையும் வேண்டுமோ வென்ருன். எ-று.

பொய்வ ளர்ந்தமொழி மன்னன் மற்றிவை புகன்ற பின்புபுற வலியினு, லைவர் தங்க ளரசுங் கொடாமலடலாண்மைகொண்டெதி ரடர்த்தியேல், மெய்வி ளங்கவரு குருநிலத்தினிடை வந்து வெஞ்ச மர் விளைக்கவே, கைவ ழங்குகென நின்ற தூணிடை யறைந்து ரைக்குமிவை காவலன்.

(எ-து.) அபத்தம் பேசுகின்ற துரியோதனன் இவை சொன்னபின்பு புஜபலத்தினுலே பஞ்சபாண்டவர்களுடைய இராசாங்கத்தையுங் கொடா மல் மிகுந்த வலிமைகொண்டு யுத்தஞ் செய்வாயாகில் உண்மை விளங்க வருகின்ற குருக்ஷேத்திரத்திலே வந்து வெவ்விய யுத்தஞ் செய்வதற்குச் சம்மதித்துக் கைதட்டிக் கொடுவென்று ஸ்ரீகிருஷ்ணபகவான் கேட்க எதிரேயிருந்த தூணிலே யறைந்து சொல்லுவான் துரியோதனன். எ-று.

புன்பி றப்புடைய பொதுவர் தங்களொடு புறவி லானிரை புரந்திடு, முன்பி றப்புமுர லோடு கோவிய ருணைப்பி ணித்ததுமற ந்துநீ, மன்பி றப்பிலுயர் குருகு லத்தவர்தம் வாய்மைதானுமொரு மாசிலா, வென்பி றப்புமுண ராம லோசபையி லிந்த வாசகமியம் பினுய்.

(எ-து.) இழிந்த பிறப்பையுடைய இடையர்களோடு காட்டினிடத்தில் பசுக்கூட்டங்களை மேய்க்கும் உம்முடைய பிறப்பையும் இடைச்சிகள் உம்மை உரலுடனே கட்டியதையும் நீர்மறந்துவிட்டு இராசகுலத்திலுயர்ந்த குருகுல வரசர்களுடைய சத்தியத்தையும் ஒரு களங்கமுமில்லாத என் னுடைய பிறப்பையும் அறியாமலல்லவா சபையிலே இந்தவார்த்தை சொன்னு யென்ருன் துரியோதனன். எ-று. [கஉ௦]

ஏவி லங்குசிலை யைவர் வந்தணுகில் யான மர்ந்தெளி திருப்ப ணே, கோவி லுங்குபொர வஞ்சுமோ கரட குஞ்ச ரங்கள்பகை கொண்டதால், மேவி லங்குமுன் மலர்ந்த கையறைய வேண்டு மென்பதுநின் மேன்மையோ, நாவி லங்குமென வெண்ணி யோ மிகவு நன்று நன்றரசர் நியாயமே

[எ-து.] பிரகாசிக்கின்ற அம்பையும் வில்லையுமுடைய பஞ்சபாண்ட வர்கள் வந்தால் யான்வருந்தி எளிதாக விருப்பேனே மதம்பொழிகின்ற யானைகள் பகைகொண்டதினுல் சிங்கம் பொருதற்குப் பய்ப்படுமோ

யுத்தத்துக்கு வருவதானல் முன்னே கைப்போட்டுக் கொடுக்க வேண்டு மென்பது உமக்கு மேன்மையோ இப்படி கேட்டது என்னுடைய நாவா னது தப்புமென்று நினைத்தோ மிகவும் நல்லது நல்லது அரசருடைய நியாயமென்றான் துரியோதனன். எ-று. (கஉக)

அளிவ ருங்குழல் பிடித்து மன்னவையி லவ ருக்குமுரி யாளொரு
னெளிவ ருந்துகி லுரிந்த போதரு கிருந்து கண்டவர்க ளல்லவோ
துளிவ ரும்புனல் பரிந்தருந்தியிடுசோறு தின்றுயிர்சுமந்துகொண்
டொளிவ ரும்படி யிருந்த பாவியரு மின்று மானநிலை யுணர்வரோ.

(எ-து.) ஐந்துபேருக்கு முரியவளாகிய திரௌபதியை இராசசபை யிலே வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலைப்பிடித்து நான் எளிதாகத் துகி லுரிந்த பேர்து அருகே யிருந்து பார்த்தவர்க ளல்லவோ துளியாக வரு கின்ற நீரைவிரும்பி யுண்டு சோற்றைத் தின்று உயிரைச் சுமந்துகொண்டு பிரகாச முண்டாகும்படி யிருந்த பாவிகளாகிய பாண்டவர்களும் இன்று அபிமான நிலையை யறிவார்களோ வென்றான் துரியோதனன். எ-று. ()

அன்னை யானவரு மிருவு ராமுத லளித்த தந்தையர்க ளைவ
ராம், பின்னை யாசைகொடு குருகு லத்துரிமை பெறுவ ராமொரு
பிறப்பிலா, மின்னை யாமுடியி லவ ரும்பரிவி னெடுத னித்தனி
விரும்புவா, ரென்னை யாமவரொ டொருகு லத்தரச ரென்ப தாண்
மையிது வென்கொலோ.

(எ-து.) மாதர்களிருவராக முன்னே பெற்ற பிதாக்களைந்துபேராம் பின்பு ஆசைகொண்டு குருகுலத்தா ரென்று முறையைப் பெருவார்களாம் ஒருபிறப்பினு மில்லாதவ ளாகிய ஒருத்தியை ஆ-ஆ! கிரீட மில்லாத ஐந்து பேரும் அன்புடனே தனித்தனி யிச்சிப்பார்கள். யாம் அவரோடு ஒரு குலத்து ராசாக்க ளென்பது என்ன ஆண்மை இதுஎன்னவென்றான் துரி யோதனன். எ-று. [கஉ௩]

ஞால முற்றமுடையவனு ரைத்திட நகைத்து வண்டுவரை
நாதனு, மால முற்றுமிவ னினைவெ னப்பெரி தறிந்து பேரவை
யகன்றுபோய், கோல முற்றசிலை விதுரன் வாழ்வுபெறு கோயில்
சென்று நனி குறுகினன், சீல மற்றவர் சினந்த போதுமொரு தீதி
லாதவர் செயிர்ப்பரோ.

[எ-து] உலக முழுதையு முடைய துரியோதனன் இதுசொல்லத் துவா ரகைக்கு அரசராகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் நகைசெய்து அவ னினைப்பெல் லாம் விஷமென்று நினைத்துப் பெரிய சபையை நீங்கிப்போய் அழகிய வில்லையுடைய விதுரன் வாழ்கின்ற அரண்மனைக்குப் போனர். நற்குண மில்லாதவர்கள் கோபித்தபோதிலும் ஒரு குற்ற மில்லாதவர்கள் கோபிப் பாரோ. எ-று. [கஉ௪]

கரிந்து மாலைசரு காக வும்புதிய கமல வாண்முகம் வியர்க்க வுந், திருந்து கண்ணிணை சிவக்க வுங்கொடிய செய்ய வாயிதழ் துடிக்கவு, மிருந்த பேரவையி னெடிது யிர்த்திடு மிராச ராசனவ னுக்கிவன், விருந்து செய்தவுற வென்கொ லென்றரச ரெதிர்வி தூரனை விளம்புவான்.

[எ-து.] அப்போது பூமாலைகள் கருகிச் சருகாகவும் புதிய தாமரைமலர் போன்ற முகம் வியர்க்கவும் திருத்த மாகிய கண்க ளிரண்டுஞ் சிவக்கவும் கெடிய சிவந்த வாயிதழ்கள் துடிக்கவும் தானிருந்த சபையிலே மிகவும் பெருமூச்சு விடுகின்ற இராசராசனாகிய துரியோதனன் அந்த ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கு இவன் விருந்து செய்த உறவென்ன வென்று அரசருக் கெதிரே விதுரனைப் பேசுவான். எ-று. [கஉரு]

வன்பி னாலவனி வெளவ வென்றனது மனையி லுண்டிபை மறுத்தவன், றன்ப தாதியொடு மினித ருந்தும்வகை தன்னி லின்னமுதியற்றினு, னென்பி தாவொடு பிறந்து மின்றளவு மென்கை யோதன மருந்தியு, மன்பு தானுடைய னல்ல னென்பகை தனக்கு முற்றபகை யல்லவோ.

[எ-து] வலிமையினாலே பூமியைக் கிரகிக்கவேண்டுமென்று நினைத்து என்வீட்டுப் போசனத்தைநீக்கின ஸ்ரீகிருஷ்ணபகவான் தன்னுடையசேனைகளோடும் இனிதாகப் புசிக்கும்படி விதுரன் தன்வீட்டிலே இனிமையுள்ள அமுது செய்வித்தான் என் தகப்பனோடு பிறந்தும் இன்றளவும் என்கையன்னத்தைச் சாப்பிட்டும் என்னிடத்திலே எள்ளளவும் அன்பில்லாதவனாயிருந்தான் எனக்குவந்த பகையாளி தனக்கும்வந்த பகையாளி யல்லவோ வென்றான் துரியோதனன். எ-று. [கஉசு]

முதல்வி லைந்தொருவ னுடனி சைந்தபொருள் பற்றி யின்புற முயங்கினு, மதிக மென்றபொரு ளொருவன் வேறுதரி னவனையேயொழிய வறிவரோ, பொதும டந்தையர் தமக்கு மண்ணிலிது புதுமை யல்லவவர் புதல்வனும், விதுர னென்றவனொடுறவு கொண்டதோர் வியப்பை யென்சொலி வெறுப்பதே.

(எ-து) வேசையர் முன்னே ஒருவன் கொடுத்த திரவியத்தைப்பற்றி அவனுடன் இன்பங்கொண்டு கூடினாலும் மற்றொருவன் அதிக திரவியத்தைச் கொடுப்பானேயாகில் அவனைத்தவிர வேறொருவரை அறிவார்களோ பூமியிலே அவர்களுக்கு இது புதுமையல்ல ஆகையால் அப்படிப்பட்டவள் புத்திரனாகிய விதுரனென்றவனொடுறவுகொண்ட வதிசயத்தை நான் என்னசொல்லி வெறுப்பதென்றான் துரியோதனன். எ-று. (கஉஎ

இன்ன வாறிவ னுரைத்த போதவ னெழுந்தி ருந்துவசை யென்னைநீ, சொன்ன வாய்குருதி சோர வாள்கொடு துளைத்து நின்முடி துணிப்பன்யான், மன்ன ரானவரில் குருகுலத்தொருவன் மைந்த னுருயிரை வௌவினு, னென்ன வானவர் நகைப்ப ரேயெனை யுரைத்த நாவுடனிருத்தியோ.

(எ-து.) இந்தப்பிரகாரம் துரியோதனன் சொன்னபோது அந்த விதுர னெழுந்து என்னைக் குற்றஞ் சொன்னவாயிலே ரத்தம் ஒழுக வாளாயுதங் கொண்டு துளைத்து உன்தலையை வெட்டுவேன் ஆனல் அரசர்களில் குருகுலராசன் ஒருவன் பிள்ளையுயிரைக் கொன்முனென்று தேவர்கள் நகைப்பார்களே அல்லாவிட்டால் என்னை வசைசொன்ன நாவுடனே யிருப்பையோவென்று பின்னுஞ்சொல்லுவான். எ-று. (கஉஅ)

ஈண்டவர்க்குதவி யாய தூதென விசைப்ப வர்க்குலக மெங்கணும், நீண்டவர்க்குதவி யாயினேனென நினைத்து நீயெனையடர்த்தியே, மாண்டவர்க்குதவி யாய பேரறமு மிசையு மாண்மையும் வளர்த்திடும், பாண்டவர்குதவி யாகி லென்னை முடிமன்ன ரானவர் பழிப்பரோ.

(எ-து.) இவ்வீடத்திலே பஞ்சபாண்டவர்களுக்கு உதவியாகிய தூதனென்று சொல்லப்பட்டவராயும் உலகமெல்லாம் வளர்ந்தவராயு மிருக்கும் ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு விருந்துசெய்து உபகாரமாயினேனென்று நினைத்து என்னைநீ உதாசினம்பேசிக் கோபித்தாயே மாட்சிமையையுடைய பெரிய தபோதனர்க்கும் முனிவருக்கு முதவியாகிய பெரிய தருமமும் கீர்த்தியும் சௌரியமும் வளர்ந்திடுகின்ற பஞ்சபாண்டவர்க்கு உபகாரியானல் என்னைக் கிரீடந்தரித்த அரசரானவர்கள் பழிப்பாரோவென்று பின்னுஞ் சொல்லுவான் விதுரராஜன். எ-று. (கஉகூ)

சொல்லி ரண்டு பகரே னினிச்சமரி னின்று வெங்கணை தொடேனென், வில்லி ரண்டினு முயர்ந்த வில்லதனை வேறி ரண்டுபட வெட்டினுன், மல்லி ரண்டினையு மிருவ ராகிமுன் மலைந்த காளமுகில் வந்துதன், னில்லி ரண்டுதினம் வைகு தற்குலகி லெண்ணிலாததவ மெய்தினுன்.

(எ-து.) இரண்டுசொற் சொல்லுவேன் இனி யுத்தத்திலே நின்று வெவ்வியபாணந் தொடுத்திடேனென்று சிவன் விஷ்ணுவென்று மிரண்டுபேர் வில்லினு முயர்ந்த தன்னுடைய வில்லை இரண்டு துண்டாக வெட்டினுன் முன்னாலே கஞ்சனல் விடப்பட்ட இரண்டு மல்லரையும் பலபத்திரரும் ஸ்ரீகிருஷ்ணபகவானுமாகவந்து வென்ற மகாவிஷ்ணு தன்வீட்டில்இரண்டு

நாள் விருந்துண்டிருப்பதற்கு உலகத்தில் எண்ணில்லாத தவத்தைப் பெற்றிருந்த விதுரராஜன். எ-று. (கங௦)

அந்த வில்லினை முறித்த வில்லிதன தால யம்புகுதவச்சுதன், றந்த வில்லுமரன் வில்லு மொப்பதொரு தாம வில்லினை முறிப் பதே, முந்தும் வில்லியரி லெண்ணும் வில்லுடைய விசயன் வந்தமரின் முடுகினு, லெந்த வில்லி யெதிர்நிற்க வல்லனினி யென்று காவலரி ரங்கினர்.

(எ-து.) அந்தவில்லை ஒடித்துப்போட்ட விதுரன் தன்னுடைய அரண்மனைக்குப்போக அப்போது மகாவிஷ்ணுவினது வில்லும் உருத்திரனது வில்லும் ஒப்பதாகிய வெற்றிமாலையையணிந்த வில்லை முறிப்பதென்ன வில்வீரரில் முன்னே எண்ணத்தக்க வில்லையுடைய அர்ச்சுனன் வந்து யுத்தத்திலே ஆரம்பித்தால் இனி எந்தவில்லையுடையவன் அவனெதிரே நிற்கவல்லவனென்று இரங்கினர்கள் அரசர்களெல்லாம். எ-று. (கங௧)

கார னைத்தும் விடுதாரை யென்னபல கணைக ளேவியமர் கருதும்வில், வீரனைப் பழுதுரைத்த நீபகையை யெங்ஙனே தணியே வெல்லுவாய், பார னைத்துமினி யைவ ராளும்வகை பண்ணு வித்தனை யழிந்ததுன், பேர னைத்து மெனவுள் ளழிந்துசில பேசினு னுயர் பிதாமகன்.

(எ-து.) மேகமெல்லாம் விடப்பட்ட தாரையைப்போலே அநேக பாணங்களையேவி யுத்தஞ்செய்யும் வில்லையுடைய விதுரனைப் பழுதுசொன்ன நீ பகையை எப்படி அடங்கச்செயிப்பாய் உலகமெல்லாம் இனி பஞ்சபாண்டவர்க ளாளும்படி செய்வித்தாய் உன்பேரெல்லாம் இன்றோடழிந்ததென்று மனநொந்து சிலபேச்சுகள் பேசினர் பீஸ்மாசாரியார். எ-று. (கங௨)

பிதாம கன்பரிவுடன் முனிந்துசில பேச நாசமுறு பேசினன், விதார மார்ப னுயர்விதுர னல்லதுவில் வல்ல வீரர்பிற ரில்லையோ, வுதார சீலனுய ரங்கர் கோன்வரிவி லொன்றுமே யமையு முற்றெழும், பதாதி யோடமரி லைவ ரும்பட மலைந்தி டப்பர ணிபாடவே.

(எ-து.) இப்படி பீஸ்மாசாரி அன்புடனே கோபித்துச் சிலவார்த்தைகள் பேசத் துரியோதனனனவன் பார்த்து விசாலமாகிய மார்பையுடைய உயர்ந்த விதுரனல்லாமல் வில்லிலேவல்ல வீரர் பிறரொருவரு மில்லையோ மிகுந்தெழுகின்ற சேனைகளோடு யுத்தத்திலே ஐவருமிறக்கும்படி யுத்தஞ் செய்யவும் பரணிபாடவும் உதாரகுணத்தையுடைய உயர்ந்த கர்னன் வில்லொன்றுமே போதுமென்றான். எ-று. (கஙந)

நீயி ருக்கநெடு விற்கை யாசிரிய னவனி ருக்கநிக ரற்றவன், சேயி ருக்கவிறன் மன்ன ரிப்படி திரண்டிருக்க வெதிர்சென்றுநீள்,

வேயிருக்குமித ழிடைய னுக்குநல் விருந்து செய்தவன் வெறுக்கி லென், போயிருக்கிலென் முறிக்கிலென் சிலை மலைந்துநம்மொடெ வர் போர்செய்வார்.

(எ-து.) பீஷ்மாசாரியராகிய நீயிருக்கத் துரோணாச்சாரியரிருக்க நிகரில்லாத அவர்குமாரன் அசுவத்தாமா விருக்க வெற்றியையுடைய அரசர்கள் இப்படி திரண்டிருக்க நீண்ட மூங்கிற்குழலை வாயிலேவைத்து இசைபாடுகின்ற இடையனுக்கு எதிர்கொண்டுபோய் அழைத்து நல்ல விருந்திட்ட விதுரன் வெறுத்தாலென்ன போயிருந்தாலென்ன வில்லையொடித்தாலென்ன வெற்றிமாலையைச்சூடி நம்மோடு ஆர் போர்செய்வார்களென்றான் துரியோதனன். எ-று. (கா௩௪)

என்று கூற விறலங்கர் பூபதியும் யானிருக்க விகல் விசயனைச் சென்று சீறி யுயிர்கொள்ள வல்லவர்கள் யாவரென்று நனி செப்புவீர், கன்றி னால்விள வெறிந்த கள்வனிவ னின்று தேர்தனி கடாவினும், அன்று போரினிடை காண லாகுமென தாடல் வெஞ்சிலையி னாண்மையே.

[எ-து.] இப்படித் துரியோதனன் சொல்லக்கேட்ட கர்னமகாராஜன் சொல்லுவான் யானொருவனிருக்கப் பகைகொள்ளும் அர்ச்சுனனை அடுத்துச்சீறி உயிரைக்கொள்ள வல்லவர் யாரென்று சொல்லுவீர்கள் கன்றினாலே விளாம்பழத்தை யுதிர்த்த திருடனாகிய கோபால கிருஷ்ணனே யிருந்து அவனுக்கு ரதசாரத்தியஞ் செய்தாலும். அன்று ரதத்திலே என் வில்லினுடைய ஆண்மையைக் காணலாமென்று பின்னுஞ் சொல்லுவான் எ-று. (கா௩௫)

அம்பரத்தவர் சினந்து சீறினுமொ ரம்பி லேயழிவர் திண்ணம்யான், வெம்பணிப் பகழி யேவி லாவியுடன் மீளுவா னமரில் விசயனோ, விம்பரிற் புகல விருத ளத்தினு மெனக்குநே ரொருவ ரில்லையென், றும்பர் கற்பகமு நாண வாண்மையி லுயர்ந்த வீரனிவை யுரைசெய்தான்.

(எ-து.) தேவர்கள் கோபஞ்செய்து சீறினாலும் ஒரு அஸ்திரத்தினாலழிந்துபோவார்கள் இது சத்தியமாம் யான் வெப்பத்தையுடைய நாகாஸ்திரத்தை யேவினனேயானால் அர்ச்சுனன் யுத்தத்திலே உயிரோடு திரும்புவானோ இரண்டு திறத்துச் சேனைகளிலும் இவ்வுலகத்தில் எனக்கு நிகராகியவர்க ளொருவரு மில்லையென்று சொன்னான் தேவலோகத்திலிருக்கும் கற்பகவிருக்ஷமும் நாணும்படிக் கொடையினா லுயர்ந்த கர்ன்மகாராஜன் எ-று. [கா௩௬]

திசை யனைத்தையும் வளைந்த தானவரை யிரவி வந்தவொரு திசையின்வாய், நிசி யெனப் பொருது வானவர்க் கரசளித்துவந்த விற னீர்மையான், விசை யனுக்குநிகர் நீகொலோ கடவுள் வெண் மதிக்கு நிகர் வெள்ளியோ, அசைவில் விற்றொழிலும் வல்லையோ வெனவொ ரசைவி லாதவ னரற்றினன்.

(எ-து.) எட்டுத்திசையிலுஞ் சூழ்ந்துகொண்ட அவுணர்களைச் சூரிய னுதயமாகிய திக்கிலே கெடுகின்ற இருளைப்போல யுத்தஞ்செய்து தேவர் களுக்கு அரசுகொடுத்துவந்த வெற்றியையுடைய அர்ச்சுனனுக்கு நீயொப் போ தெய்வத்தன்மையுள்ள வெள்ளிய சந்திரனுக்குச் சுக்கிரன் ஒப்பாகு மோ அசைவில்லாத வில்யுத்தத்திலும் வல்லமையுடையவனோ வென்று ஒருதளர்ச்சியுமில்லாத பீஷ்மாசாரியர் சொல்லினர். எ-று. [கஙஎ]

அவன்மொ ழிந்தமொழி தன்செ விப்படலு மருகி ருந்தமு தருந்திநீ, யிவனுடன்சிலர் பகைக்கின் மற்றவர்தமிசையு மாண்மை யுமி யம்பினைப், புவன மொன்றுபடவரினு மென்றனொடு பொருவ ராகினெதிர் பொரவிடாய், சிவனு மென்கணையை யஞ்சு மென்று நனி சீறினு னிரவி சிறுவனே.

(எ-து.) அந்த பீக்ஷ்மாசாரியார் சொன்னசொல் காதிலே பட்ட மாத் திரத்தில் சமபந்தியிலே யிருந்து அன்னத்தை யுண்டு நீர் துரியோதன னுடன் சிலபேர் பகைத்தால் அவர்களுடைய கீர்த்தியையும் வல்லமையை யும் எடுத்துப்பேசினீர் திரிலோகத்தாரும் ஒன்றாய்க்கூடிவந்தாலும் என் னோடு யுத்தம் பண்ணுவார்களோ ஆனால் விட்டுப்பாரும் ஈசுரனும் என் னுடைய பாணத்துக்குப் பயப்படுவானென்று மிகவுஞ் சீறினன் சூரியன் புதல்வனான கர்னமகாராசன். எ-று. [கஙஅ]

இரவி மைந்தனொடு கங்கை மைந்தனொரு வீர வாய்மையுமி சைத்திலன், பொரவ றிந்திடுது மன்று வெஞ்சமரி லென்றெ ழுந்து நனி போயினன், அரவ வெங்கொடியுயர்த்த கோவுமிகவரசருக்கு விடை யருளினன், விரவு பைந்துளப மாலை யான்விதுரன் மனையி னுற்றது விளம்புவாம்.

(எ-து.) அப்படிச்சொல்லிய சூரியன் புதல்வனான கர்னனுடனே கங்கா புத்திரனான பீஷ்மாசாரியர் ஒருவீர வார்த்தையுஞ் சொல்லவில்லை ஏனெ னில் அன்று வெவ்விய யுத்தத்தில் சண்டைபண்ணும் போது தெரிந்து கொள்ளுவோ மென்றுபோனான் அப்போது சர்ப்பக்கொடிபடைத்த துரி யோதனனும் வலிமையுள்ள அரசர்களுக்கெல்லாஞ் செலவுகொடுத்து விட் டான் முன்பு பசிய துளபமாலை யணிந்த ஸ்ரீகிருஷ்ணதேவர் விதுரன் அரண்மனைக் கெழுந்தருளியதைச் சொல்லுவாம். எ-று. (கஙகூ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொருசிலை முறித்த வீரன் கோயிலிற் புகுந்து நேமிக்
குருசிலை வணங்கி யாங்க ணிருப்பவக் குரிசி னோக்கி
யிருசிலை யுண்டென் றிந்த விருநிலத் தியம்பு வில்லி
லொருசிலை முறித்த சீற்ற மென்கொலோ வுரைநீ யென்றான்.

(எ-து.) விதுரமகாராஜனனவன் அரண்மனையிற் புகுந்து சக்கிராயுதத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணபகவானை வணங்கி அங்கேயிருக்க அவர்பார்த்து இரண்டு விற்களுண்டென்று இந்தப் பெரிய பூமியிலே சொல்லப்பட்ட விற்களில் அர்ச்சுனன் வில்லிருக்க இன்னொரு வில்லை ஒடித்த கோபத்திற்குக் காரணம்யாதோ சொல்லென்றார். எ-று. (௧௪௦)

ஆவது கருதா னாகி லமைச்சர்சொற் கேளா னாகில்
வீவது குறியா னாகில் விளைவது முணரா னாகில்
நாவது காவா னாகி லவனுக்கா நடந்து போரிற்
சாவது பழுதென் றன்றோ சகத்துளார் சாற்று கின்றார்

(எ-து.) ஒருவன் தனக்கு ஆகவேண்டிய காரியத்தை நினையானாகில் மந்திரிகள் வார்த்தையைக் கேளானாகில் கெடுவது நினையானாகில் விளைவதை யறியானாகில் நாவைக் காப்பாற்றானாகில் அவனுக்காகப்போய் யுத்தத்திற் சாவது பழுதென்றல்லவா பூலோகத்திலுள்ளவர்கள் சொல்லுகிறார்கள். எ-று. (௧௪௧)

செல்வம்வந் துற்ற காலைத் தெய்வமுஞ் சிறிது பேணார்
சொல்வன வறிந்து சொல்லார் சுற்றமுந் துணையு நோக்கார்
வெல்வதே நினைவ தல்லால் வெம்பகை வலிதென் றெண்ணார்
வல்வினை விளைவு மோரார் மண்ணின்மேல் வாழு மாந்தர்.

(எ-து.) செல்வம்வந்து சேர்ந்தகாலத்தில் தெய்வத்தையும் கொஞ்சமாவது வணங்கார் சொல்லவேண்டியவைகளை அறிந்து சொல்லமாட்டார் பந்துவையுஞ் சினேகிதரையும் பாரார்கள் செயிக்கிறதே நினைக்கிறதல்லாமல் நமக்குப் பகைவர் வலிமையுடையவரென்று நினையார் தீவினை விளைவதும் பாரார் பூமியிலே வாழ்கின்ற மனிதரென்றான் விதுரராஜன். எ-று

நினைக்கவுந் தொழவு மெட்டா நீயெழுந் தருளப் பெற்றுந்
தனக்கிது தகுதியென்று தமருடன் வாழ வெண்ணான்.
மனக்கடுங் கனலி னன்றன் மதத்தின லுரைத்த புன்சொல்
எனக்கிசை யாமல் யானு மிருஞ்சிலை யிறுத்த தென்றான்.

(எ-து.) நினைக்கவுந் தொழவும் எட்டாத நீரே பிரத்தியக்ஷத்தில் எழுந்தருளப் பெற்றிருந்தும் தனக்கு இது தக்கதென்று ஞாதிகளுடன் வாழ்

தற்கு ஆலோசியான் மனத்திலிருக்கும் கோபாக்கினியையுடைய துரியோதனன் கர்வத்தினுற் சொல்லிய அற்பவார்த்தை எனக்குப் பொருந்தாமல் யானும் பெரிய வில்லை ஒடித்தேனென்ருன் விதுரராஜன். எ-று. (கசங)

பார்த்னு மகிழ்ந்து நோக்கி மாசுண முயர்ந்த கோமான்
போயருஞ் சேனை யோடும் போர்க்களங் குறுகும் போது
நீயவ னருகி னில்லா தொழிகுவில் னேய மைந்தர்
தாயமுஞ் செல்வ முற்றுந் தரணியும் பெறுவ ரென்ருன்.

(எ-து.) அப்போது ஸ்ரீகிருஷ்ணபகவான் மகிழ்ந்து விதுரனைப்பார்த்துத் துரியோதனன் சேனையுடனே யுத்தகளத்துக்கு வரும்போது நீ அவனிடத்தி லில்லாமல் நீங்கினுல் உன்னுடைய நேயத்தையுடைய குந்திமாதேவி புத்திரராகிய பாண்டவர்கள் தங்கள் பங்கும் பாக்கியமும் பூமியும் பெறுவார்களென்ருர். எ-று. (கசச)

ஏற்றிய நறுநெய் வீசி யிந்தனை மடுக்கி னுலும்
காற்றுவந் துருத போது கடுங்கன லுதவா தன்றோ
நீற்றணி நிமல னன்ன நின்கைவில் லிற்ற தாகிற்
சீற்றவே லரசன் சேனை தென்புல மடைத றிண்ணம்.

(எ-து) அதிகமாகிய நல்லநெய்யையிட்டு விறகை யடுக்கினுலுங் காற்று வந்து சேராதபோது கடிய அக்கினி மூளாதல்லவா பரமசிவனுக்குச் சமானமாகிய உன்கைவில் லொடிந்ததாலுல் கோபத்தையுடைய வேலாயுதமேந்திய துரியோதனன் சேனைகள் யமலோகத்தை யடைவது சத்தியம் எ-று. (கசரு)

பன்னிய பனுவல் கேள்விப் பயனுகர் மனத்தி ஞனை
மன்னவன் மொழிந்த வெல்லாம் பொறுத்தியென் றருளி மாயோன்
அந்நகர் தன்னில் வண்மை யழகரு ளாண்மை பேசுங்
கன்னனைப் பயந்த காதற் கன்னிதன் கோயில் புக்கான்.

(எ-து.) பன்னப்பட்ட நூல்களின் கேள்விப்பயன் அறிந்தமனமுடைய விதுரராஜனைத் துரியோதனன் சொல்லிய பேச்செல்லாம் பொருக்கக்கடவையென்று சொல்லி ஸ்ரீகிருஷ்ணபகவான் அந்நகரத்திலே கொடையையும் அழகையும் அருளையும் ஆண்மையையுமுடைய கர்னனைப்பெற்ற ஆசையுள்ள குந்திமாதேவியினுடைய வீட்டுக்குப்போனுர். எ-று. [கசசு]

மண்டல மதிய மன்ன மாசறு முகத்தி னுளுந்
திண்டிறன் மருகன் றன்னைச் சென்றெதிர் கொண்டு கண்டு
வெண்டிரை மகர வேலை விரிபுனன் முகந்து தோன்றுங்
கொண்டலை மகிழ்ந்து காணுங் குளிர்பசுந் தோகை போன்ருள்.

[எ-து.] பூலோக சந்திரன்போல குற்றமற்ற முகத்தையுடைய குந்திமா தேவியும் மிகுந்த வலிமையுள்ள மருமகனுகிய ஸ்ரீகிருஷ்ணரை எதிர்கொண்டு வெள்ளிய அலைகளையும் மகரமீன்களையுமுடைய சமுத்திரத்தினது விரிந்த ஜலத்தையுண்டு வருகின்ற மேகத்தை மகிழ்ந்து பார்க்கின்ற குளிர்ந்த பசியமயிலை யொத்தாள். எ-று. [கசஎ]

பானுறை யில்லில் வந்த தென்னமா தவமென் றேத்திக்
கானுறை மைந்தர் தம்மைக் கண்டனள் போல வாகித்
தேனுறை துளவி னுன்றன் செய்யமா முகத்தை நோக்கி
வானுறை புரிசை மூதூர் வந்ததென் னருளி யென்ருள்.

(எ-து.) நானிருக்கும்படியாகிய வீட்டிலெழுந்தருளியது என்ன மகாதவமென்று வணங்கிக் காட்டிலேயிருக்கின்ற பிள்ளைகளைக் கண்டவள்போல மனமகிழ்ந்து தேன் பெருகின்ற துளபமாலையணிந்த ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய திருமுகத்தைப்பார்த்து ஆகாயமளாவிய மதிலையுடைய இவ்வூருக்கு வந்தகாரியமென்ன அருளிச்செய்யுமென்ருள் குந்திமாதேவி. எ-று.

நின்பெரும் புதல்வர் சொல்ல நெடும்புன னாடு வேண்டி
வன்பணி யுயர்த்த கோமான் மனக்கருத் தறிய வந்தேன்
றென்புல வேந்தன் வெஃகச் செருத்தொழில் புரிவ னென்ரு
னென்பல சொல்லி நாளை யெதிர்க்கவே யிசைந்தே னென்ருன்.

(எ-து.) உன்னுடைய பெருமைபொருந்திய குமாரர்கள்சொல்ல நெடிய நீர்வளத்தையுடைய நாட்டைவேண்டித் துரியோதனனுடைய உள்ளக் கருத்தை யறியும்படி வந்தேன் தென்திசையிலிருக்கின்ற கூற்றவன் உயிர்களை விரும்பியுண்ண யுத்தஞ்செய்வதற்குச் சம்மதித்தான் அவனுடன் பலவார்த்தைகள் பேசி என்னபிரயோசனம் நாளை யுத்தஞ்செய்யும்படி சம்மதித்து வந்தேனென்ருர் ஸ்ரீகிருஷ்ணபகவான். எ-று. (கசகூ)

என்றலுங் குந்தி சால விரங்கின ளெதிர்த்த போரில்
வென்றிடு வார்க ளாரோ விதியினு லமர்க்க ளத்திற்
கொன்றிடு வார்க ளாரோ வென்றுளம் புலர்ந்து நொந்தாள்
அன்றவ டன்னைத் தேற்றி யாழியா னுரைக்க லுற்ருன்.

(எ-து.) இப்படியென்று சொன்னமாத்திரத்திலே குந்திமாதேவி மிகவும் இரக்கமுற்றவளாய் எதிர்த்துச்செய்கின்ற யுத்தத்திலே செயிப்பவர்கள் யாரோ விதியினுல் யுத்தகளத்திலே யிறப்பவர்கள் யாவரோவென்று மனம் வாடி வருந்தினுள் அன்று அவளுக்குத் தேறுதலைச்சொல்லி ஸ்ரீகிருஷ்ண பகவான் சொல்லத்தொடங்கினுர். எ-று. (கநிம)

தன்மைநா னுரைக்கக் கேணின் றந்தைதன் மனையி னீயுங்
கன்னியா யிருந்து வாழுங் காலையோர் முனிவன் வந்து

சொன்னமந் திரமோ ரைந்தி னென்றில் வெஞ் சுடரோன் றன்னை
முன்னினை யவனு மன்று வந்துநின் முன்பு நின்றான்.

(எ-து.) அந்தத் தன்மையை நான் சொல்லக்கேட்பாய் உன்தகப்பன் வீட்டிலே நீ கன்னிகையாயிருந்து வாழுங்காலத்தில் தூருவாசமுனிவர் வந்து அனுக்கிரகஞ்செய்த ஐந்து மந்திரங்களில் ஒரு மந்திரத்தால் சூரியனை நினைத்தாய் அவனும்வந்து நின்னெதிரே நின்றான். எ-று. (கருக)

கதிரவ னருளி னாலோர் கணத்திடைக் காதல் கூர
மதலையங் கொருவன் றன்னைப் பயந்தபின் வடுவென் றஞ்சி
மிதவையம் பேழை தன்னிற் பொதிந்துநீ விடவப் போதந்
நதியமு மகவைக் கங்கை நதியிடைப் படுத்த தன்றே.

[எ-து.) இப்படிக்குவந்த சூரியனது கிருபையினாலே ஒரு க்ஷணத்திலே உனக்கு ஆசை அதிகரிக்க அங்கே ஒருபிள்ளையைப் பெற்றபின்பு குற்றமென்று நினைத்து நீரிலே மிதக்கப்பட்ட பெட்டியிலே குழந்தையை வைத்து நீஆற்றிலே விட்டாய். அப்போது அந்த ஆறு கங்கையிலே கொண்டுபோய் விட்டது. எ-று. (கருஉ)

காதனின் புதல்வன் றன்னைக் கண்ணிலா வரசன் பொற்றேர்ச்
சூதன்வந் தெடுத்துக் கொண்டு சுதனென வளர்த்த காலை
ஆதவ னிவனை யாருங் கன்னனென் றழைக்க வென்றான்
றாதையும் விசும்பிற் சொன்ன நாமமே தக்க தென்றான்.

(எ-து.) அப்பெட்டியிலேவைத்து நதியில்விட்ட ஆசையுள்ள உன்பிள்ளையைத் திருதராட்டிரனுடைய தேர்ப்பாகன் வந்தெடுத்துக் கொண்டு போய்ப் பிள்ளையாக வளர்த்த காலத்தில்சூரியன் இவனை எவர்களும் கர்னனென்று அழையுங்களென்று சொன்னான் அவன் தகப்பனும் அசரீரியாய்ச் சொல்லிய நாமதேயமே தகுதியானதென்று சொன்னான். எ-று ()

பண்புடைக் குமரன் கற்ற படைத்தொழில் பலவுங் கண்டு
நண்புடை யுரிமை யெல்லா நல்கிமா முடியுஞ் சூட்டி
வண்பணி யுயர்த்த கோமான் வாழ்வவற் களித்தான் மற்றைத்
திண்பரித் தேர்வல் லோரி லவனையார் செயிக்க வல்லார்.

(எ-து.) குணத்தையுடைய அந்தப்பிள்ளை கற்றிருந்த ஆயுதத்தொழில் அநேகமும்பார்த்து சிநேகமுடைய உரிமையை எல்லாங் கொடுத்து கிரீடமுந்தரித்து துரியோதனனானவன் செல்வத்தையுங் கொடுத்தான் வலிமையுள்ள புரவிகள் பூட்டிய இரதங்களையுடைய அரசரில் அந்தக் கர்னனை செயிக்க வல்லவர் யாரென்றார் ஸ்ரீகிருஷ்ணபகவான். எ-று. [கருச)

அந்தநின் மைந்தன் றானே யருஞ்சிலை விசயனோடும்
வந்தெதிர் மலைய நின்றா னுறவுமற் றறிய மாட்டான்.

சிந்தையி லையந் தீர விதனைநீ தெளியச் சொல்லி
கொந்தவி ழலங்க லானைக் கூட்டுக விரைவி னென்றான்.

(எ-து.) உன் பிள்ளையாகிய அந்தக் கர்னன் வில்லிலே வல்லவனாகிய அர்ச்சுனனோடுவந்து யுத்தஞ்செய்ய விருக்கிறான் தனக்குத் தம்பியென்றறி யான் மனத்திலிருக்குஞ் சந்தேகந்தீர இச்செய்தியை நீ தெளியும்படி சொல்லிக் கர்னனைச் சீக்கிரத்தில் ஒன்றாகக் கூட்டிவைப்பா யென்றார் ஸ்ரீகிருஷ்ணபகவான். எ-று. [கருரு]

தம்பிய ரைந்து பேருந் தனித்தனி யேவல் செய்ய
வம்பவி ழலங்க லோடு மாமணி மகுடஞ் சூட்டி
யம்புவி முழுது நீயேயாளலாம் வருக வென்றா
லும்பர்கா வனைய கையா னுனதுசொன் மறுத்தா னாகில்.

(எ-து.) தம்பிமா ரைந்துபேரும் வெவ்வேறு ஏவற்பணிசெய்ய வாசனை வீசுகின்ற மாலையுடனே ரத்தினம்பதித்த முடிசூட்டிக்கொண்டு பூமிமுழு தும் நீயேயாளலாம் வாவென்று சொன்னால் தெய்வலோகத்தி லிருக்கும் பஞ்சதருவுக்குச் சமானமாகிய தியாகத்தைத்தருங் கையையுடைய கர்னன் சம்மதிப்பான் அப்படிச் சம்மதியாமல் மறுத்தானாகில். எ-று. [கருசு]

எரியமு தருந்தக் கான மெரித்தநா ளகன்று போன
வரவினை யங்கர் கோமா னாயுத மாகக் கொண்டான்
வரிசிலை விசயன் றன்மேல் மறுகணை தொடுக்கா வண்ண
மொருவரம் வேண்டு கென்றா னுற்றவர்க் குறுதி செய்வான்.

(எ-து.) அக்கினி புசிக்கும்படி காண்டாவனந் தகித்தநாளில் நீங்கிய சர்ப்பத்தைக் கர்னன் அம்பாக்கிக் கொண்டான் வரிந்த வில்லையுடைய அர்ச்சுனன்மேல் ஒருகணையேயன்றி மறுகணை தொடுக்காதவிதம் ஒருவர மாத்திரம் வேண்டி வாக்கிக்கொள்வாயென்றார் அடுத்தவர்களுக்கு உறுதி செய்யும் ஸ்ரீகிருஷ்ணபகவான். எ-று. (கருஎ)

மன்றலந் தெரியல் வெய்யோன் மதலையென் மைந்த னென்ப
தன்றெனக் குரைத்தா யாகிலவனுட லணுக வொட்டேன்
சென்றுயி ரொழிக்கு மாறு செருவினை விளைத்துப் பின்னை
யின்றெனக் குரைத்தா யையா வென்னினைந் தென்செய் தாயே.

(எ-து.) வாசமுள்ள மாலையணிந்த சூரியன் புதல்வனாகிய கர்னன் என் பிள்ளையென்பது அன்றே யெனக்குச் சொன்னீரானால் அந்தத் துரியோ தனனுடனே சேரவொட்டேன் யுத்தகளத்துக்குப்போய் உயிரை ஒழிக் கும்படி யுத்தத்தை மூட்டிவிட்டுப் பின்பு இன்று எனக்குச்சொன்னை யையனே என்னநினைத்து என்ன செய்தாயென்றாள் குந்திதேவி. எ-று. (கருஅ)

காண்பட்ட கனலிற் பாயுங் கடுங்கணை விலக்க வெண்ணில்
வான்பட்ட புரவித் தேரோன் மகன்படு மகவான் மைந்தன்
றான்பட்டு முடியுஞ் சென்று தடாதினி யிருந்தே னாகில்
யான்பட்ட கொடுமை நன்றென் றென்பட்டா ளிரங்கி வீழ்ந்தாள்.

(எ-து.) காண்டாவனத்து அக்கினியிலிருந்துவந்து வேகத்தை யுடைய சர்ப்பக்கணையை விலக்க நினைத்தேனேயானால் சூரியன்புதல்வனாகிய கர்னன் இறந்துவிடுவான் நான்போய் அதைவிலக்காமல் விடுவேனேயானால் இந்திரன்புதல்வனாகிய அர்ச்சுனன் இறந்து விடுவான். யான் படுகின்ற கொடுமை நன்றாயிருக்கின்றதென்று என்னபாடுபட்டாள் இரக்கமுற்று வீழ்ந்தாள் குந்திமா தேவி. எ.று. (கரு௯)

தேக்குந்தி யகிலுஞ் சாந்துஞ் சிந்துநீர் நதிசூழ் செல்வக்
கோக்குந்தி யரசன் பாவை குலைந்தலுங் கொடுமை கண்டு
மீக்குந்தி யுறிக டோறும் வெண்ணெயுந் தயிறு முண்ட
வாக்குந்தி மலரோன் பின்னு மனத்தளர் வகற்றினானே.

(எ-து.) தேக்கு அகில் சந்தனமுதலிய மரங்களைத் தள்ளிக்கொண்டு செல்லுகின்ற நீரையுடைய சிந்துநதிசூழ்ந்த குந்திதேசத்து அரசன் புத்திரியானவள் குலைகுலைந்து அழுகின்ற கொடுமையைப்பார்த்து மேலே எட்டிஉரிகளிலெல்லாம் வெண்ணெயுந் தயிரும் உண்ட வாயையும் நாபிக்கமலத்தையுமுடைய ஸ்ரீகிருஷ்ணபகவான் மறுபடியும் மனத்தளர்ச்சியை நீக்கினார். எ-று. (கசூ0)

பைவருந் தலைக ளைந்து படைத்தபன் னகமே போல
வைவரு மடித னன்றோ வங்கர்கோன் மடித னன்றோ
வுய்வருஞ் சமரி லாவி யொருவர்போ யொருவ ருய்யார்
நைவருந் துயர மாற்றி நடப்பதே கரும மென்றான்.

(எ-து.) படத்தையுடைய ஐந்து தலைகளைப் படைத்துள்ள ஒரு சர்ப்பம் போலப்பஞ்சபாண்டவர்களும் இறத்தல் நல்லதோ அங்கதேசத்திற் கதிபதியாகிய கர்னனொருவன் இறப்பது நல்லதோ பிழைத்தற்கரிய யுத்தத்தில் ஐந்துபேர்களுக்குள்ளே ஒருவரிறந்து மற்றவர்களி ருக்கமாட்டார்கள் ஆகையால் நைதற்குவருகின்ற துக்கத்தை நீக்கிக்கொண்டுபோவதே காரியமென்றார் ஸ்ரீகிருஷிணபகவான். எ-று. (கசூக)

காளமா முகிலின் மேனிக்கரியநா யகனுந் தேற்றி
மீளமா தவத்தின் மிக்க விதுரன்வாழ் மனையி னெய்த
வாளமால் வரையில் வெய்யோன் குறுகினன் வருணன் றிக்கி
னீளமால் யானை நெற்றி நிரைத்தசெந் திலதம் போன்றே.

(எ-து.) கரிய மேகவண்ணரான ஸ்ரீகிருஷ்ணபகவானுந் தேறுதல் சொல்லி மறுபடியும் மகத்தாகிய தவத்திலேமிகுந்த விதுரன் வாழ்கின்ற அரண்மனைக்குப்போக அப்போது சக்கரவாளகிரியிலே சூரியன் அஸ்தமயமானன் மேற்குத்திசையி லிருக்கின்ற பெரிய யானையினுடைய நெற்றியிலிட்ட சிந்தூரப்பொட்டுப்போல். எ-று. (கசுஉ)

நாற்றிசை யுலகு தன்னி னான்மறை யுணர்ந்தோர் யாரும்
போற்றிசை மாலை யென்னும் பொற்புடையணங்கு வைக
மாற்றிசை விலாத செம்பொன் மண்டபந் தன்னி லாதி
மேற்றிசைக் கடவு ளிட்ட வெயின்மணிப் பீடம்போன்றான்.

(எ-து.) நான்குதிசையுள்ள உலகத்தில் வேதப்பிராமணர்கள் யாவரும் போற்றுகின்ற கீர்த்தியையுடைய மாலைப்பொழு தென்னும் அழகுள்ள மங்கையானவளிருக்க நிகரற்ற மாற்றுள்ள செம்பொன்னாற்செய்த மண்டபத்தில் சூரியன் வருணனாலிடப்பட்ட ஒளியையுடைய இரத்தினபீடத்தை யொத்தான். எ-று. [கசுங]

கொண்டமென் சிறைவண் டென்னுங் கொழுநருக்கிடங்கொடாமல்
முண்டகக் குலத்து மாதர் முகங்குவித் தூடி நிற்பக்
கண்டெதிர் கொண்டு காதற் கயிரவக் கணிகை மாதர்
வண்டுறை நின்று தங்கள் வாய்மலர்ந் தழைக்க லுற்றார்.

(எ-து.) மெல்லிய சிறகைக்கொண்ட வண்டுகளென்னும் நாயகருக்கு இடங்கொடாமல் தாமரைக் கூட்டமாகிய மங்கையர்கள் மலராகிய முகத்தைக் குவித்துக்கொண்டு கோபித்துநிற்கப் பார்த்து அல்லிகளாகிய தாசிகள் எதிர்கொண்டு வளத்தையுடைய நீர்த்துறையிலிருந்து தங்கள் வாயைத் திறந்துஅழைக்கின்றார்கள். எ-று. [கசுச]

கானெலா மலர்ந்த முல்லைக் ககனமீ தெழுந்த தென்ன
வானெலாம் வயங்கு தாரை நிரைநிரை மலர்ந்து தோன்ற
வேனிலான் விருவின் வைத்த வெள்ளிவெண் கும்பமென்னத்
தூநிரை மதியம் வந்து குணதிசைத் தோன்றிற் றம்மா.

[எ-து] காடெல்லாமலர்ந்த முல்லைகள் ஆகாயத்தின்மேலும் எழுந்ததென்று சொல்லும்படி அவ்வாகாயத்தில் பிரகாசம்பொருந்திய தாரைகள் கும்புகும்பாய் பரவித்தோன்ற மன்மதனுடைய உச்சவத்தில் வைத்த வெள்ளியாற்செய்த சுவேதகும்பமென்று சொல்லப் பரிசுத்தமாகிய கிரணத்தையுடைய சந்திரனானவன் கிழக்குத்திசையில் உதயமாயிற்று. எ-று.

தூவிய நிலவு தோன்றத் துணைவரைப் பிரிந்தோர் கண்கள்
காவியு மாம்ப லும்பைங் கருவிள மலரும் போன்ற

மேவிய மகளிர் கண்கள் மீனெறி பரவையேழுந்
தாவிய வுழையுங் காதற் சகோரமும் போன்ற மாதோ.

(எ-து.) பரிசுத்தமாகிய இயலையுடைய சந்திரனுதயமாகப் புருஷனை நீங்கின மங்கையருடைய கண்க்ள் நீலோற்பல மலரையும் அல்லிமலரையும் காக்கணமலரையும் ஒத்தன புருஷரைக்கூடிய மங்கையருடைய கண்கள் மீனை வீசுகின்ற ஏழுசமுத்திரத்தையும் தாவுகின்ற மானையும் ஆசையையுடைய சகோரபட்சியையும் ஒத்திருந்தன. எ-று. [கசுசு]

அரவிய லல்கு லாரு மகிழ்நரு மன்பு கூர
விரவிய வமளி யெய்தி வீதிமா நகரமெங்கும்
பரவையி னிமிர்ந்த வோதை யமர்ந்தபின் பரித்தேர் வேந்த
னிரவிடை சூழ்ந்த வண்ண மின்னதென் றியம்பு கின்றாம்.

(எ-து.) பாம்பின் படம்போலும் நிதம்பத்தையுடைய மங்கையர்களும் புருஷர்களும் அன்புசிறக்கச் சப்பிரக்கூடமஞ்சத்தை யடைந்து வீதிகளையுடைய பட்டணமெல்லாஞ் சமுத்திரம்போல முழங்கு முழக்கம் அடங்கியபின்பு அர்த்தராத்திரியிலே துரியோதனன் ஆலோசனை செய்தது இன்னதென்று சொல்லுவோம். (எ-று.) [கசுஎ]

தந்தையும் தம்பிமாருங் கன்னனுஞ் சகுனி தானுஞ்
சிந்தையிற் றெளிந்த கல்விச் செழுமதி யமைச்சர் தாமு
முந்தர வுயர்த்த கோமானேவலால் முழுது மெண்ணி
மந்திர மிருப்பான் வந்தோர் மண்டபங் குறுகி னாரே.

(எ-து.) தகப்பனாகிய திருதராட்டிரனும் தம்பிமார்களும் கர்னனும் சகுனியும் மனதிலே யாராய்ந்து தெளிவாக வறிந்த கல்விநிறைந்த செழுமையுள்ள புத்தியையுடைய மந்திரிகளும் சர்ப்பக்கொடியுயர்ந்த துரியோதன ராஜன் ஏவலாலே முழுதும் ஆலோசனைசெய்யும் பொருட்டு ஒரு மண்டபத்திலே வந்திருந்தார்கள். எ-று. [கசுஅ]

தீதறு மதிவல் லோரைச் செழுமதிக் குடையா னோக்கிப்
பாதக வனத்திற் போன பாண்டவர் தம்மை யீண்டு
மேதக வழைத்து நாடு வேண்டுமி னென்று மூட்டும்
யாதவன் றனித்து வந்தா னென்செய்வ தியம்பு மென்றான்

(எ-து.) குற்றமற்ற மந்திரிகளைச் செழுமையுள்ள சந்திரவட்டக் குடையையுடைய துரியோதனன் பார்த்துக் கொடுமையாகிய காட்டுக்குப்போன பஞ்சபாண்டவரை இங்கே மேன்மையாக அழைத்து உங்கள் நாட்டைக் கேளுங்களென்று மூட்டிவிட்ட கோபாலகிருஷ்ணன் தனித்துவந்தான் அதற்கு நாமென்ன செய்வது சொல்லுமென்றான். எ-று. [கசுகூ]

பொரும்படை மைந்தன் கூறத் தந்தையும் பொருந்தச் சொல்வா
னரும்புலி வலேயிற் பட்டால் விடுவரோ வெயின ராஞேர்
வரம்பில்வெஞ் சேனை யோடும் வளைந்துநீ மாயன் றன்னைக்
கரும்பொழு தகலு முன்னே கொல்வதே கரும மென்ருன்.

(எ-து.) யுத்தஞ்செய்கின்ற சேனைகளையுடைய துரியோதனன் கேட்கத் தகப்பனுகிய திருதராட்டிரனுந் பொருந்தும்படி சொல்லுவான் அருமையாகிய புலியானது வலையிலே யகப்பட்டால் வேடரானவர்கள் விட்டு விடுவார்களோ அளவில்லாத வெவ்விய சேனையோடு நீ வளைந்துகொண்டு கோபாலகிருஷ்ணனை இராத்திரியானது நீங்குமுன்னே கொன்றுபோடுவதே நல்லகாரியமென்ருன். எ-று. [கஎ0]

கண்ணிலா னுரைத்த மாற்றங் கேட்டலுங் காவ லோரின்
மண்ணிலா ரிதற்கு முன்பு தூதரை வளைந்து கொன்ரு
ரெண்ணிலா விந்த வண்ண மெவ்வழி க்கேற்ற தென்று
வெண்ணிலா முறுவல் செய்து விகர்னனும் விளம்ப லுற்ருன்.

[எ-து.] கண்ணில்லாத திருதராட்டிரன் சொன்ன பேச்சைக் கேட்டவளவில் இராசாக்களில் பூமியிலே எவர்கள் இதற்குமுன்னே தூதர்களை வளைந்து கொன்றவர்கள் எண்ணிக்கையில்லாத இந்தவிதம் எந்தவழிக்கு ஏற்றதென்று வெள்ளிய நிலாவைப்போற் சிரித்துச் சொல்லத்தொடங்கினுன் விகர்னன். எ-று. [கஎக]

மூத்தவ ரிளையோர் வேத முனிவரர் பிணியின் மிக்கோர்
தோத்திர மொழிவோர் மாதர் தூதரென் றிவரைக் கொல்லப்
பர்த்திபர் தமக்கு வேறு பாவமற் றிதனி னில்லை
பூத்தெரி தொடையாய் பின்னு நரகினும் புகுவ ரென்ருன்.

[எ-து.] மூத்தவர்கள் இளையவர்கள் வேதப்பிராமணர்கள் மிகுந்த நோயாளிகள் துதிசெய்பவர்கள் மங்கையர்கள் தூதர்களென்று சொல்லப்பட்ட இவர்களைக் கொல்லென்ருல் அரசர்களுக்கு இதைவிடவேறே பாவமில்லை பூவிற்ருெடுத்த மாலையணிந்த அரசனே அவர்கள் பின்னும் நரகத்திற் புகுவார். எ-று. [கஎஉ]

பழிப்புடைப் பகைஞ ரேனுந் தன்பெரும் பதியில் வந்தா
லழிவுறக் கோறல் பாவ மாண்மையு மல்ல வென்பார்
கழிகடற் சேனை சூழக் கங்குலின் வளைந்திட் டாலு
மெழிலுடைக் கொண்டல் வண்ண னகப்படா னெவர்க்குமென் (ருன்.

[எ-து.] பழியையுடைய சத்துருக்களானுலும் தன்னுடைய பெரிய ஊரில் வந்தால் அழிவையடைய அவர்களைக்சொல்லுதல் பாவம் வலிமையு

மல்லவென்று சொல்லுவார்கள் மிகுந்த கடல்போன்ற சேனைகள்சூழ இராத்திரியிலே வளைந்துகொண்டாலும் அழகுபொருந்திய மேகவண்ண ரான ஸ்ரீகிருஷ்ணபகவான் ஒருவருக்கும் அகப்படாரென்றான் விகர்னன் எ-று. (கஎங

வெம்புய வலியான் மாதை விரிதுகி லுரிந்த வீரன்
தம்பியை முனிந்து சீறித் தமையனை நோக்கிச் சொல்வான்
வம்பவி ழலங்கன் மார்பா மந்தண முரைக்க லுற்று
லிம்பர்மற் றியாது சொல்ல விளைஞரை யழைத்ததென்றான்.

[எ-து.] வெவ்விய புஜபலத்தினாலே திரௌபதியைத் துகிலுரிந்த துர்ச்சாதனனானவன் தம்பியைப்பார்த்துக் கோபித்துத் தமையனைப்பார்த்துச் சொல்லுவான் வாசனைபொருந்திய மாலையையணிந்த மார்பனே ரகசியம் பேசத்தொடங்கினால் இவ்விடத்திலே சிறியோர்களை யழைத்தது என்ன காரியஞ்சொல்ல என்றான். எ-று. (கஎச)

அதிரதர் முதலாயுள்ள வவனிபர் வளைந்து நிற்ப
வெதிர்முகி றவழுங் கோயி லெரியினை யெங்கு மூட்டி
விதுர னு மவனுஞ் சேர வெந்திட மலைவ தல்லால்
மதிபிறி தில்லை யின்னே வல்விரைந் தெழுமி னென்றான்.

(எ-து.) அதிரதர் முதலாகிய அரசர்களெல்லாரும் சூழ்ந்திருக்க மேகந் தவழ்கின்ற அரண்மனையிலே நெருப்பைமூட்டிவிட்டு விதுரனுங் கோபால கிருஷ்ணனுஞ்சேர வெந்துபோகும்படி செய்வதல்லாமல் வேறே யோசனை யில்லை சீக்கிரத்திற் புறப்படுமென்றான் துர்ச்சாதனன். எ-று. [கஎரு]

செங்கதி ரெழுந்து சீறிற் செறியிருணிற்ப துண்டோ
விங்கவ னிருந்த வில்லி லெரியிட வேண் டுமோதான்
வெங்கணை யொன்றி னுமேல் விளிந்திட வென்று மீள்வேன்
கங்குலி னெழுமி னென்று கன்னனு மகன்று சொன்னான்.

[எ-து.] சூரியன் கிரணங்களைவீசிப் புறப்பட்டானேயானால் உலகங்களை மூடியஇருளானது நிற்குமோ இவனிருந்த வீட்டிலே நெருப்புப் போட வேண்டுமோ வெவ்விய பாணமொன்றினாலே சாகும்படிசெய்து மீள்வேன் இப்பொழுதுதானே புறப்படுங்களென்று கோபித்துச்சொன்னான் கர்ன மகாராசன். எ-று. (கஎசு)

பதிப்பெயர்ந் தேகி நாளைப் பகைவரைக் கூடு மாகில்
விதிப்பய னென்ன நம்மை வெஞ்சமர் வெல்ல வொட்டான்
மதிப்பதென் வேறு கள்ள மாயனை மனையிற் கோலிச்
சதிப்பதே கருமமென்று சகுனியும் பின்னுஞ் சொல்வான்.

(எ-து.) இந்தவூரை விட்டுப்போய் நாளை நம்முடைய பகையாளிகளுடனே கூடுவானேயானால் தடுக்கக்கூடாத விதிப்பயனைப்போல நம்மை வெவ்விய யுத்தத்திலே செயிக்கவொட்டான் வேறே யோசிக்கவேண்டியதென்ன கோபாலகிருஷ்ணனை வீட்டிலேவைத்து வஞ்சிப்பதே காரியமென்று சகுனியானவன் பின்னுஞ்சொல்லுவான். எ-று. (கஎஎ)

கொல்லுவ தியற்கை யன்று குழிபறித் தரக்க ரோடு
மல்லரை யிருத்தி மேலோ ராசனம் வகுத்து நாளை
யெல்லிடை யழைத்து வீழ்வித் தியலரும் விலங்கு பூட்டித்
தொல்லருஞ் சிறையில் வைத்த றாதருக் குரிமை யென்றான்.

[எ-து.] கொல்வது இயற்கையல்ல குழிவெட்டி இராட்சதர்களுடனே மல்லர்களையும் உள்ளேவைத்து மேலே ஒரு ஆசனஞ்செய்து நாளைராத்திரியிலே யழைத்து அதிலே விழும்படிச்செய்து அரியவிலங்குபூட்டி அரிய சிறையிலே வைப்பது தூதருக்கு இயற்கையென்று சொன்னான் சகுனி எ-று. [கஎஅ]

மாதுல னுரைத்த மாற்ற மருகனுமிசைந்து கங்குற்
போதிடை யனேக மல்லர் வருகெனப் புகன்று தானும்
நீதியி னிருந்து தாழ நிலவறை சமைத்த பின்ன
ராதிநூ றுயி ரம்பே ரரக்கரை யதனுள் வைத்தான்.

[எ-து] மாமனாகிய சகுனிசொன்ன சொல்லுக்கு துரியோதனனும் இசைந்துகேட்டு ராத்திரியிலே அனேகமல்லரை வரச்சொல்லித் தானுமிருந்துகொண்டு நிலவறை யுண்டாக்கி அதிலே முன்னே நூறுயிரம் அரக்கரை வைத்தான். எ-று. [கஎகூ]

மல்லர்பப் பரவர் தம்மை மற்றதி னிரட்டி வைத்தான்
வில்லுடை வீரர் தம்மை வேறதி னிரட்டி வைத்தான்
பல்படை வல்லோர் தம்மைப் பதின்மடங் கதனில் வைத்தா
னல்லிலோர் கடிகை தன்னி லறிவனை யழைக்கவென்றே.

(எ-து.) மல்லரையும் பப்பரவரையும் அதற் கிரட்டிப்பு வைத்தான் வில்வீரரை அதற்கிரட்டிப்பு வைத்தான் ஆயுதத்திலே வல்லவர்கள் பலபேரை அவரிற் பத்துமடங்கு அதிலே வைத்தான் ராத்திரியிலே ஒருநாளிகையில் அறிவையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவரை அழைக்கவேண்டுமென்றான். எ-று.

பெரும்பில வறையை வேயின் பிளப்பினு னிறைத்து மூடி
யரும்பெறன் மணிக ளாலோ ராசன மதன்மேலாக்கிச்
சுரும்பமர் மாலை தூக்கித் தொழிலுடை விமான மேற்றி
வரம்பிலா வென்றி வேலான் மாறிலா வண்ணஞ்செய்தான்.

(எ-து.) பெரிய பிலத்துவாரத்தினுடைய அறையை மூங்கில் பிளப்பினால் நிறைத்து மூடிவிட்டு பெறுதற்கரிய ரத்தினங்களாலே ஒரு ஆசனம் அதன்மேலுண்டாக்கி வண்டுகள் மொய்க்கின்ற பூமாலைதொங்கக் கட்டிச் சித்திரவிமானமொன்று மேலேவைத்து அனேகம் வெற்றியைத்தரித்த வேலையுடைய துரியோதனன் மாறுபாடுதெரியாதவிதஞ்செய்தான். எறு []

அடியவர் மனத்தி லுள்ள வாரிருட் கங்கு றீர்க்கு
நெடியவ னிருக்க வென்று நிலவறை வீரகிற் செய்த
கடியவ னியற்கைக் கஞ்சிக் கங்குலுங் கடிதிற் போகப்
படியவர் துயிலும் போகப் பரிதியு முதயஞ் செய்தான்

(எ-து.) அடியவர்களுடைய மனதிலேயுள்ள நிறைந்த அஞ்ஞானவிருளை நீக்குகின்ற ஸ்ரீகிருஷ்ணபகவான் இருக்கவேண்டுமென்று உபாயமாய் நிலவறைசெய்த கடியவனாகிய துரியோதனனுடைய குணத்துக்குப் பயந்து இராப்பொழுதுஞ் சீக்கிரத்திலே நீங்கிப் பூமியிலுள்ளவர்கள் நித்திரையும் நீங்கச் சூரியனுதயஞ்செய்தான். எ-று. [கஅஉ]

சிறந்தரு சுடிகை நாகத் திரண்மணி பலவுஞ் சிந்தி
நிரந்தர மருவி வீழு நிறந்திக ழுதயக் குன்றில்
பரந்தெழு மருக்கன் சூழ்ந்த படரிருட் கங்குல் கண்டு
புரந்தரன் கோயி லிட்ட பொங்கொளித் தீபம்போன்றான்.

(எ-து.) சர்ப்பத்தினுடைய உச்சியிலிருக்கின்ற திரட்சியையுடைய அநேக மணிகளுஞ் சிதறி எப்போதும் அருவிகளொழுகுகின்ற நிறத்தையுடைய உதயகிரியிலே பரவியெழுகின்ற சூரியன் எப்படி இருக்கின்றானென்னில் இருள்சூழ்ந்த இராத்திரியைக்கண்டு இந்திரனானவன் தன் அரண்மனைக்கிட்ட மிகுந்த ஒளியையுடைய தீபத்தை யொத்தான். எ-று. [கஅ௩]

தொடர்ந்தொளி ருதய ராகத் தோடுற நெருங்கி மேன்மே
லடர்ந்தரி பரந்த காம னாகம வேதம் பாடத்
தடங்கயன் மலைந்து லாவுந் தாமரை முகமுங் காதல்
மடந்தையர் முகமுஞ் சேர மணம்பெற மலர்ந்த மாதோ.

(எ-து.) தொடர்ச்சிகொண்டு பிரகாசிக்கின்ற உதயராகத்துடனே நெருங்கி மேலுமேலும் வண்டுகள்பரவி மன்மதனுடைய ஆகமவேதங்களைப்பாடத் தடாகத்திலே சேற்கண்டைகள் சண்டையிட்டு உலாவுகின்ற தாமரை முகையினுடைய முகமும் ஆசையையுடைய மாதர்களுடைய முகமும் ஒருங்குசேர மணம்பெறும்படி மலர்ந்தன. எ-று. [கஅச]

இருந்துயி லுணர்ந்த வேந்தர் யாவரு மிரவிற் சற்றும்
வருந்துயி லிலாத கண்ணன் வாழ்பெருங் கோயில் புக்கார்

பெருந்துயி லனந்த போகப் பேரணை துறந்த மாலும்
அருந்துயி லெழுந்து காலை யருங்கடன் முறையுஞ் செய்தான்.

(எ-து.) பெரிய நித்திரைநீங்கிய அரசர்களெல்லாஞ் சற்றுகிலும் நித்திரையில்லாத ஸ்ரீகிருஷ்ணபகவான் வாழ்கின்ற பெரிய கோயிலுக்குப் போனார்களப்போது சேஷசயனத்திலே அரிதுயில் நீங்கிய மகாவிஷ்ணுவும் அரிய நித்திரைநீக்கிக் காலையிற்செய்யுங் கடன்களெல்லாஞ் செய்தார் எ-று. (௧அ௫)

மாதவ னிருந்த கோயில் வந்தடி வணங்கி மன்னன்
தூதுவ ராழி யங்கைத் தோன்றலே துளப மாலே
யாதவ குலத்தோ ரேறே யெழுந்தருள் கென்று னின்றெம்
மேதக வரச னென்றார் முகுந்தனும் விரைவின் சென்றான்.

[எ-து.] இப்படி ஸ்ரீகிருஷ்ணபகவா னிருந்த அரண்மனையில் துரியோதனன் விடுத்த தூதர்கள்வந்து அவர் பாதத்தில் வணங்கிச் சக்கராயுதத்தையுடைய அரசனே துளபமாலையணிந்த மார்பனே யாதவ குலத்தோருக்கு ஒரு ஆண்சிங்கமே எங்களரசன் உம்மை யழைத்துக்கொண்டு வரச்சொன்னானென்றார்கள் அதுகேட்டு ஸ்ரீகிருஷ்ணபகவானும் சீக்கிரத்திற் போனார். எ-று. (௧அ௬)

கந்தடு களிற்று வேந்தன் கண்ணிலா வரசுங் கங்கை
மைந்தனு முதலா யுள்ள மன்னரு மதிவல் லோருந்
தந்திர வகையு மேனை யிளைஞருந் தன்னைச் சூழ
விந்திர னிருக்கை யன்ன கோயிலூ டினிதி ருந்தான்.

[எ-து.] கட்டுத்தறியை யடுகின்ற யானையையுடைய துரியோதனராசன் திருதராட்டிரனும் பீஷ்மாசாரியார் முதலாகிய அரசர்களும் மந்திரிகளும் தந்திரிகளும் மற்றதம்பிமார்களுந் தன்னைச்சூழ இந்திரனுடைய அரசிருக்கைபோன்ற கோயிலிலே இனிதாகவிருந்தான். எ-று. (௧அ௭)

நாமவே லரச ரோடு நால்வகைச் சேனை யோடு
மாமுகில் வண்ணன் வந்தா னென்றனர் வரவு கேட்டு
வீமலர்த் தொடையி னானும் வேத்திரத் தவரை நோக்கித்
தாமரைத் தடங்கண் மாயன் றன்னையே விடுமி னென்றான்.

[எ-து.] அச்சத்தைத் தருகின்ற வேலாயுதத்தையுடைய அரசர்களோடும் ரதகஜதுரக பதாதிகளாகிய நால்வகைச்சேனையோடும் மேகவண்ணரான ஸ்ரீகிருஷ்ணபகவான் வந்தாரென்று சொன்னார்கள் அதுகேட்டு புஷ்பமாலையணிந்த துரியோதனனும் பிரம்பையுடைய சேவகரைப் பார்த்துத் தாமரை மலர்போன்ற விசாலமாகிய கண்களையுடைய அந்தக் கிருஷ்ணனை மாத்திரம் விடுங்களென்று சொன்னான். எ-று. (௧அ௮)

தன்பெருஞ் சேனை நிறகத் தண்டுழா யலங்க லானு
மின்புற நகைத்து வேந்த ரிருந்தபே ரவையி னெய்த
மின்புணர் துவச நாக விடநிகர் மனத்தி னானும்
அன்பொடு திகிரி யானை யதன்மிசை யிருக்க வென்றான்.

(எ-து.) தன்னுடைய பெரிய சேனைகளெல்லா மிருக்கத் துளபமாலையை யணிந்த ஸ்ரீகிருஷ்ணபகவானும் இன்பம் பொருந்தப் புன்சிரிப்புக் கொண்டு அரசர்களிருந்த பெரியசபைக்குப்போகப் பிரகாசமுள்ள சர்ப்பக் கொடியையும் விஷத்துக்குச்சமானமாகிய மனத்தையுடைய துரியோதனனும் அன்புடனே ஸ்ரீகிருஷ்ணபகவானை அதன்மேலே யிருப்பீரென்றான். எ-று. [௧௮௯]

வேறு

இறைவ னெழிற்கதிர் மணிக ளழுத்திய தவிசி னிருத்தலுமே
நெறுநெ றெனக்கொடு நிலவறை யிற்புக நெடியவ னப்பொழுதே
மறலி யெனத்தகு நிருப னியற்றிய விரகை மனத்துணரா
முறுகு சினத்தொடு மடிய தலத்துற முடிக ளனத்துறவே.

(எ-து.) ஸ்ரீகிருஷ்ணபகவான் கிரணங்களையுடைய இரத்தினங்களைப் பதித்த ஆசனத்திலிருந்த வளவிலே நெறு நெறுவென்று கொடிய நிலவறையிலே அதுபுக அவர் அப்போது கூற்றுவனென்று சொல்லத்தக்க துரியோதனன்செய்த சூதை மனத்திலேயறிந்து மிகுந்த கோபத்துடனே பாதங்கள பதாளத்திலே பொருந்த சிரம் ஆகாயத்திலே பொருந்த. எ-று. [ ]

அஞ்சின மஞ்சின மென்று விரைந்துய ரண்டர் பணிந்திடவுந்
துஞ்சின மின்றென வன்பணி யின்கிளை துன்ப முழந்திடவும்
வஞ்ச மனங்கொடு வஞ்சக னின்றிடு வஞ்சனை நன்றிதென
நெஞ்சில் வெகுண்டல கொண்டு படும்படி நின்று நிமிர்ந்தனனே.

(எ-து.) பயந்தோம் பயந்தோமென்று சீக்கிரத்தில் உயர்ந்த தேவர்கள் வணங்கவும் இன்று இறந்தோமென்று சர்ப்பக்கூட்டங்கள் துன்பப்படவும் வஞ்சக மனத்தைக்கொண்டு துரியோதனன் இன்று செய்த இந்த வஞ்சகம் நன்றாயிருக்கின்றதென்று மனத்திலே கோபித்து உலகமெல்லாம் ஒன்று படும்படி நின்று உயர்ந்தார் ஸ்ரீகிருஷ்ணபகவான். எ-று. [௧௯௧]

மல்ல ரரக்கர் குலத்தொடு பப்பரர் வாளினர் வேலினர்போர்
வில்லின ரிப்படி துற்ற நிலத்திரை மேவிய தீயரெலாந்
தொல்லை யிடிக்கயர் வுற்றுயி ரற்றுற சுடிகைய தாமெனவே
கல்லென வுட்கினர் தத்தமு டற்பல கால்கொ டுதைத்திடவே

(எ-து.) மல்லர்கள் ராட்சதர்கள் பப்பரர்கள் வாளையுடையவர் வேலையுடையவர் பொருகின்ற வில்லையுடையவர் இப்படி பூமியிலே வெட்டிய

நிலவறையிலேயிருந்த சுத்தவீரர்களெல்லாம் இடிக்குப்பயந்தும் வருத்தமடைந்து உயிரற்றிருந்த சிரத்தையுடைய சர்ப்பங்களைப்போலக் கல்லென்னு மோசையுடனே யஞ்சினர்கள் தங்கள்தங்கள் தேகத்திலே பலகால்களைக்கொண்டு உதைத்திட. எ-று. (௧௧௨)

அற்புத பங்கய நற்பதமுந்த வினக் குழியின் புடையே
சர்ப்பத லந்தொறு மற்றுவிழுந்தன தத்தநெடுந் தலைபோய்
முற்பவ னன்பொடு முக்குவடுந் துணிபட்டு முடங்கிய பொன்
வெற்பன நின்றனர் வெற்றுட லங்கொடு விற்படை கொண்டவரே

(எ-து.) அழகிய தாமரை மலர்போன்ற நல்லபாதத்தினு லுதைத்தலினுல் அந்தக்குழியி னிடத்திலே நாகலோகந்தோறும் அற்றுவிழுந்த தம்முடைய நெடிய தலைகளெல்லாம்போய் முன் வாயுபகவான் போர்செய்ய மூன்று சிகரமுந் துணிப்பட்டுவளைந்த பொன்மலைபோல் நின்றார்கள் வெற்றுத்தேகங்கொண்டு விற்படைகொண்ட சுத்தவீரர்கள். எ-று. (௧௧௩)

மேல்வலி யுற்றெதிர் வீசியெ ழிற்கரு மேகநிறத் திருமால்
கால்விசை யிற்பட மோதுத லிற்பொரு காமர்புயத் துணைபோய்
நீலநி றக்கவின் வாசவன் வச்சிர நீள்படை யிற்சிறகிர்
மால்வரை யொத்தனர் வாகைபெ றக்கதிர் வாள்களெடுத்தவரே.

[எ-து.] அழகிய கரிய மேகவண்ணராகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் மேலே வலிமைகொண்டு எதிரேவீசி கால்விசையினுலே படும்படி மோதுதலினுலே பொருகின்ற அழகிய புயங்களிரண்டும்போய் நீலநிறத்தையுடைய அழகிய இந்திரனுடைய வச்சிராயுதத்தினுலே சிறுகறுப்புண்ட பெரிய மலைகளையொத்தார்கள் வெற்றிபெறும்படி வாளாயுதங்களையெடுத்த சுத்தவீரர்கள் எ-று. (௧௧௪)

வெயில்விடு பைந்தலை யமளி மிசைத்துயில் விபுதர்களுக் கரியோன்
பயிலவு தைத்தலி னவர்களு ரத்திடை பதமலர் பட்டுருவா
மயில்கட விக்கட வுளர்பகை யைக்கதிர் மகுடமு ருக்கியவேள்
அயில்கொடு குத்திய நெடுவரை யொத்தன ரயில்களெ டுத்தவரே.

[எ-து.] ஒளியுள்ள சிரோன்மணியையுடைய ஆதிசேடன்மேல் நித்திரை செய்கின்ற தேவர்களுக்கரிய ஸ்ரீகிருஷணபகவான் உதைத்தபடியால் அவர்கள் மார்பிலே பாதங்கள்பட்டு ஊடுருவி மயில்வாகனத்தைச்செலுத்தி தேவர்கள் பகையாகிய சூரபதுமன் முதலிய அசுரர்களைச் சங்கரித்த சுப்பிரமணியசுவாமி வேலாயுதங்கொண்டு குத்திய நெடிய கிரௌஞ்சகிரியையொத்தார்கள் வேலாயுதங்க ளெடுத்தவீரர்கள்.எ-று (௧௧௫)

மின்சூடி கைப்புய கங்கள்வெ ருக்கொளும் வெங்கருடக் கொடியோ
வன்பத பத்மந கங்கொடெ டுத்துயர் வன்கக னத்திடலால் [ன்

முன்புவ னத்திடை வந்துக விக்கிறை மொய்ம்புண ரப்புகல்போ
தென்புமலைக்குறு கண்பைய டுத்தன ரெஞ்சிய பப்பரரே.

[எ-து.] மின்னுகின்ற ரத்னம் விளங்கிய உச்சியையுடைய சர்ப்பங்கள் அஞ்சுகின்ற வெவ்விய கருடக்கொடியோனாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் தம்முடைய பாததாமரையி லிருக்கும் நகத்தைக்கொண்டு எடுத்து உயர்ந்த ஆகாயத்திலே யெறிதலால் முன்காட்டிலேவந்து சுக்கிரீவன் வலுமையை யறியச் சொன்னபோது ஸ்ரீராமரால் துந்துபி யெலும்புமலை என்னபாடு பட்டதோ அதையடுத்தார்கள் வலிமை குறைந்த பப்பரர். எ-று. (௧௬௬)

மைந்துப டைத்துயர் பஞ்சவர் சொற்படி வந்தம லர்க்கழலா
லுந்தி யுதைத்துட லம்புதை யப்பில மொன்றியொ ளித்திடலா
லந்தணன் முற்பகல் வந்துபு டைத்திட வஞ்சிநி லத்திடைவீழ்
விந்தமொ டொத்தனர் வன்குழி யிற்றிகழ் வெங்கண ரக்கருமே

(எ-து.) வலிமைபடைத்து உயர்ந்த பஞ்சபாண்டவர் சொற்படி தூது வந்த மலர்போன்ற பாதத்தினால் தள்ளியுதைத்து தேகம்புதயப் பிலத் துவாரத்திலே ஒன்றி ஒளித்திடும்படி செய்ததாலே அகஸ்தியமுனிவர் முன்னாளிலே வந்து தள்ளப்பயந்து பூமியிலே வீழ்ந்த விந்தகிரியை யொத்தனர் நிலவறையிலே அகப்பட்ட வெவ்விய கண்களையுடைய இராட்சதர்கள். எ-று. (௧௬௭)

அந்தவி டத்தெறி பம்பர மொத்துட லஞ்சுழ லச்சுழலக்
குந்தியு றித்தயி ருண்டவர் பொற்கழல் கொண்டு சுழற்றுதலால்
முந்தம ரர்க்கமு தந்தர மைக்கடன் முன்சுழ லச்சுழலும்
மந்தர மொத்தனர் குந்தமெ டுத்தெதிர் வந்தும லைத்தவரே.

(எ-து.) அந்த நிலவறையிலே யெறிகின்ற பம்பரத்தையொத்துத் தேகஞ் சுழலச் சுழலக் குந்தியிருந்து உறியிலிருந்த தயிரையுண்ட ஸ்ரீகிருஷ்ண பகவான் பொன்போன்ற பாதத்தைக்கொண்டு சுழற்றுகையினாலே முன்னே தேவர்களுக்கு அமுதுகொடுக்கச் சமுத்திரமானது சுழலச் சுழலு கின்ற மந்தரகிரியை யொத்தார்கள் எறியீட்டி யெடுத்து எதிரேவந்து யுத்தஞ்செய்த சுத்தவீரர்கள். எ-று. (௧௬௮)

முட்டிய தொல்குரு திக்கடன் மல்கலின் முட்டிகொள் பல்விரலா
னெட்டுட லம்வகிர் பட்டதி னுள்விழ நித்தர்செய் தொல்வினையான்
மட்டற வல்விற லுற்றெதிர் செல்கவி மைக்கட லெல்லையிலே
விட்டென கல்வரை யொத்தனர் வெல்கழ லெக்குல மல்லருமே.

(எ-து.) அந்த நிலவறையை முட்டப்பெற்ற ரத்தசமுத்திரம் நிறைந்தபடியால் முட்டிக்கொள்ளுகின்ற பலவிரல்களினாலே நெடிய தேகம் பிளவு

பட்டு அதினுள்ளேவிழ ஸ்ரீகிருஷ்ணபகவான் செய்தசெய்கையினாலே அளவற்ற வலுமைகொண்டு எதிரிட்டுச் சென்ற வானரங்கள் கரியகடலிலேயிட்ட பர்வதங்களை யொத்தனர் வெல்லுகின்ற வீரக்கழலையணிந்த கூட்டமாகிய எவ்வித மல்லர்களும். எ-று. [கககூ]

எப்புவி நிற்பன வெக்கிரி நிற்பன வெக்கட னிற்பனவென்
றிப்புவ னத்துயிர் முற்றுமயக்குற வுட்கினரெத் திமையோர்
மைப்புய லொத்தொளிர் பச்சைநி றத்தினன் வர்க்கம லர்க்கழலா
லொப்புற மட்குழி யுற்றவ ரைப்பட வொத்திமி தித்தலுமே.

(எ-து.) இனி எந்தப்பூமிகள் நிற்கும் எந்த மலைகள் நிற்கும் எந்தக்கடல்கள் நிற்குமென்று இந்தப்பூமியிலுள்ள உயிர்முழுவதும்மயக்கத்தையடைய தேவர்கள் அஞ்சியிளைத்தார்கள் கரியமேகத்தை யொத்து விளங்கிய ஸ்ரீகிருஷ்ணதேவர் அனேகமலர்போன்றதிருவடிகளால் ஒப்பில்லாமல் நிலவறையி லிருந்தவரை படும்படி ஒத்தி மிதித்தலால் எ-று. [உ00]

கொண்டன்மு ழக்கென வம்புவி யைக்கடல் கொண்டெழு தற்கெதிருஞ், சண்டமு ழக்கென வன்பவ னக்கிளை தந்தமு ழக்கென்வே, வண்டின மொய்த்தொழு வண்டுள பத்தொடை வண்டுவ ரைத்திருமா, லண்ட முகட்டுற நின்று சிரித்தன னங்கணெருப் பெழவே.

[எ-து.] மேகமுழக்கமென்று சொல்லவும் பூமியைக் கடல்கொண்டு எழுதற்கு எதிரும் வேகத்தையுடைய முழக்கமென்று சொல்லவும் வண்டுகள்மொய்த்தெழுகின்ற வளத்தையுடைய துளபமாலையையணிந்த துவாரகைக்கு அரசராகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் அண்டமுகடளாவநின்று அழகிய கண்ணில் நெருப்பெழச் சிரித்தார். எ-று. (உ0க)

ஒன்றுப டக்கட லம்புமு கப்பன வும்பர்கு லத்துருவஞ்
சென்றுமு றிப்பன வெண்டிசை யிற்குல சிந்துர மெற்றுவவெண்
குன்றமு டைப்பன பைம்பொனி றக்கிரி கொண்டுதி ரிப்பனவா
லன்றுத னித்தனி நின்று மலைத்தரு ளங்கைகள் பற்பலவே.

[எ-து.] அப்போது வெவ்வேறு யுத்தஞ்செய்தபலகைகளிலேசிலகைகள் சமுத்திர நீரையெல்லாம் ஒன்றுபடும்படி மொள்ளுஞ், சிலகைகள் தெய்வலோகத்திலிருக்கும் பஞ்சதருக்களையும் போய்முறிக்குஞ், சிலகைகள் எட்டுத்திக்கிலும்போய் அட்டகஜங்களையும் தள்ளுஞ், சிலகைகள் அட்டகுல பர்வதங்களையும் உடைக்குஞ், சிலகைகள் மகமேருவைச்சுற்றும். எ-று.

துகிரிதழ் வைத்துநல் வளைகண் முழங்கின தொடர்சில கைத்தலமே
யகிலம்வெ ருக்கொள வரிமழு வெற்றின வவைசில கைத்தலமே,

புகலும்வ டிக்கணை யுவணமெ டுத்தன பொருசில கைத்தலமே
திகழ்விசை யத்தொடு சிலைகள்கு னிப்பன சிலசில கைத்தலமே

(எ-து.) சிலகைகள் பவளம்போன்ற வாயிலே சங்குகளை வைத்து முழக்கஞ் செய்தன சிலகைகள் பூலோக மஞ்சும்படி எரிகின்ற மழுவாயுதங்களை எறிந்தன சிலகைகள் கொல்லுகின்ற கருடாஸ்திரங்களை எடுத்தன சிலகைகள் ஜயத்துடனே வில்லுகளைக் குனிப்பன சிலகைகள். எ-று. (௨௦௩)

வெங்கணை யத்திரள் குந்திர ரப்படை வெம்புமு லக்கைகள்போர்
பொங்கிய வச்சிர முந்துக லப்பைகள் புன்கமு வர்க்கமுமே
யெங்கும லைத்தெழு செஞ்சுரி கைத்திர டண்ட மெனப்பலபேர்
தங்கிய சக்கர பந்தித ரித்தன தண்பல கைத்தலமே.

[எ-து.] வெவ்விய வளைதடிகள் கைவேல் கள்வெம்பச்செய்யும் உலக்கைகள் போரைமிகச் செய்கின்ற வச்சிராயுதங்கள் எறிகின்ற கலப்பைகள் சூலவர்க்கங்கள் எவ்விடத்தும் போர்செய்தெழுகின்ற உடைவாள்கள் தண்டாயுதங்கள் பலபேர்தங்கிய சக்கிரபந்திகளாகிய இவைகளைத்தரித்திருந்தன அனேகங் கைகள். எ-று. (௨௦௪

மேலெழு மங்கதிர் வாளுறை போம்படி வீசுவ வான்படையே
தோலின மேந்தின நீள்கவ ணேந்தின சோரிகள் சோர்ந்திடவே
ஞாலமெ லாம்பொரு தோமரம் வாங்கின நாவொரு மூன்றெனலாஞ்
சூலமொ டோங்கின பாசமொ டோங்கின சூழ்சில பூங்கரமே.

[எ-து.] சிலகைகள் மேலே எழுகின்ற அழகிய கிரணங்களையுடைய வாளாயுதங்களை உறைபோகும்படி வீசுதல்செய்தன சிலகைகள்கேடயங்களேந்தின சிலகைகள் நெடியகவண்களேந்தின சிலகைகள் உதிரமொழுகப் பூமிமுழுவதையும் பொருகின்ற பெருங்கண்கள் கொண்டன சிலகைகள் நாக்குகள் மூன்றென்னப்பட்ட சூலங்களோ டுயர்ந்தன சிலகைகள் பாசங்களோடுயர்ந்தன. எ-று. (௨௦௫

சிலசில கைத்தல மடுகழ லிற்பல செறிகழல் கட்டினவே
சிலசில கைத்தல மறுகுபு யத்திடை செறிதொடை யிட்டனவே
சிலசில கைத்தல் மணிகொளு ரத்திடை பணிகடி ருத்தினவே
சிலசில கைத்தலம் விரல்கொடு சுட்டின செறுநர் திகைத்திடவே.

[எ-து.] சிலசிலகைகள் கொல்லுகின்ற பாதங்களிலே வீரக்கழல்களைக் கட்டின சிலசிலகைகள் புயங்களிலே மலர் மாலைகளிட்டன சிலசிலகைகள் அழகினைக்கொண்ட மார்பிலே ஆபரணங்களைத் திருத்தன சிலசிலகைகள் சத்துருக்கள் திகைக்கும்படி விரல்களைக்கொண்டு சுட்டிக்காண்பித்தன. எ-று. (௨௦௬)

மாயிரு ஞாலமெ லாம்வெளி யாயொளிர் மரகத சோபையுறப்
போயிரு பாலும் வளைந்து வளைந்தெதிர் பொருமுனை வெம்படை
டாயிர மாயிர மங்கை புறப்பட வண்டரு மாதவரும் [யோ
பாயிர நான்மறை பாடி வியந்து பணிந்து புகழ்ந்தனரே.

[எ-து.] மகத்தாகிய பெரியபூமிகயெல்லாம் வெளியாய் விளங்குகின்றமர கதத்தின் பிரகாசம்பொருந்த இரண்டுபக்கத்திலும்போய் வளைந்து வளைந்து எதிரே பொருகின்ற முனையையுடைய வெவ்விய ஆயுதத்துடன் இரண்டாயிர ங்கைகள் புறப்பட தேவர்களும் முனிவர்களும் ஆயிரமுள்ள நாலுவேதங்களைப்பாடி அதிசயித்துப் பணிந்து புகழ்ந்தார்கள். எ-று. ()

ஆரண னேயர னேபுவ னங்கள னைத்தையு மன்றுதவுங்
காரண னேகரு ணாகரனே கமலா சனி காதலனே
வாரண மேபொது வாயொரு பேரிட வந்தரு ளும்புயலே
நாரண னேமுனி யேன்முனி யேலென நாகர் பணிந்தனரே.

[எ-து.] பிரமதேவனே உருத்திரமூர்த்தியே புவனங்களை யெல்லாம் அன்றுஉதவிய மகாவிஷ்ணுவே! கிருபைக்கிடமானவனே இலட்சுமிக்குக் கணவனே! கஜேந்திரன் ஆதிமூலமே யென்று பொதுவா யொருபேரிட்டழைக்க நானே அப்பேருக்கு உடையவனென்றுவந்த மேகவண்ணனே நாராயணனே கோபியாதை கோபியாதை யென்று தேவர்கள் வணங்கினர்கள். எ-று. (உ0அ)

மாதவ னேமுனி யேலெமை யாளுடை வானவ னேமுனியேன்
யாதவ னேமுனி யேலித யத்தி லிருப்பவ னேமுனியே
லாதவ னேமுனி யேன்மதி வெங்கன லானவ னேமுனியே.
நீதவ னேமுனி யேன்முனி யேலென நின்று பணிந்தனரே.

[எ-து.] மாதவனே கோபியாதே எங்களை அடிமையாக வுடைய தேவனே கோபியாதை யாதவமரபில் வந்தவனே கோபியாதை அடியார்கள் மனதிலிருப்பவனே கோபியாதை சோமசூரியாக்கினியானவனே கோபியாதை நீதியையுடையவனே கோபியாதை கோபியாதையென்று நின்று பணிந்தார்கள். எ-று. (உ0க)

கங்கை மகன்கதி ரோன்மக னம்பிகை காதன் மகன்றனையர்
அங்கவை யின்கணி ருந்தந ராதிப ரமைய வெழுந்தடைவே
செங்கை குவித்த சிரத்தின ராயுணர் வொன்றிய சிந்தையரா
யெங்கள் பிழைத்தலை யின்று பொறுத்தரு ளென்று பணிந்தனரே.

(எ-து.) பீஷ்மாசாரி, கர்னன், திருதராட்டிரன், அவன்பிள்ளைகள் அங்கே சபையிலே யிருந்த ராசாக்களெல்லாம் எழுந்திருந்து சிரத்தின்மேற்

கைகளைக் கூப்பிக்கொண்டவர்களாய் அறிவு மிகுந்த மனமுடையவராய் நாங்கள் செய்த தப்பிதத்தை இன்று பொறுத்தருள்வாயென்று வணங்கினார்கள். எ-று. [உ௧0]

கண்ண பொறுத்தருள் வெண்ணெ யருந்திய கள்வ பொறுத் தருள்கார், வண்ண, பொறுத்தருள் வாம பொறுத்தருள் வரத பொறுத்தருணீ, திண்ண மனத்துணர் வொன்று மிலாதவர் செய்த பெரும்பிழையென், றண்ணன் மலர்க்கழல் சென்னியில் வைத்தெதி ரன்று துதித்தனரே.

(எ-து.) கண்ணனே பொறுத்தருள், ஆயர்பாடியில் வெண்ணெய் உண்ட கள்வனே பொறுத்தருள், மேகவண்ணனே பொறுத்தருள், வாமனே பொறுத்தருள், வரதனே பொறுத்தருள், சத்தியமாகமனத்திலே அறிவென தெவ்வளவு மில்லாத சிறியவர்கள்செய்த பெரும்பிழையென்று ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய தாமரைமலர் போன்ற பாதங்களைச் சிரத்திலே வைத்துக்கொண்டு எதிரே நின்று அன்று துதி செய்தார்கள். எ.று. (உ௧௧)

தேவரும் வாசவ னுந்திற லும்பர்க டேவனு நான்முகனும்
யாவரு மன்பினெ டாயிர நாமமு மெண்ணி யிறைஞ்சுதலான்
மூவரு மொன்றென நின்றரு ளுதனு முனிவுத விர்ந்தருளான்
மீவரு மண்ட முறுந்திரு மேனி யடங்கினன் மீளவுமே.

(எ-து.) முப்பத்து முக்கோடி தேவர்களும் இந்திரனும் திறலையுடைய தேவதேவனாகிய பிரமதேவனும் எல்லாரும் பக்தியுடனே ஆயிரந் திருநாமமும் தியானித்து வணங்கியபடியால் திரிமூர்த்திகளு மொன்றென்று சொல்லும்படி நின்ற ஸ்ரீகிருஷ்ணபகவானும்கோபம் நீங்கிக்கிருபைசெய்து உலகமெல்லாமாகிய திருமேனி மறுபடியு மடக்கினார். எ-று. (உ௧உ)

தன்னி லுயர்ந்தவர் யாருமிலா முகில் சதுர்மறை யின்படியே
யெந்நில முந்திரு வடியின் மறைந்திட விப்படி நின்றிடவும்
பின்னையு மஞ்சிய யர்ந்தில னெஞ்சு பெயர்ந்தில னாகமுமே
சென்னியி லுங்கரம் வைத்திலன் வண்புகழ் சிறிது மொழிந்திலனே.

(எ-து.) தனக்கு உயர்ந்தவர்கள் ஒருவருமில்லாத ஸ்ரீகிருஷ்ணபகவான் நான்கு வேதத்தின்படி எந்தபூமியுந் திருவடியிலே மறைந்திட இப்படி நிற்கவும் பின்னும் அஞ்சி மனத்தில் வருந்துகிலன் தேகமசைகிலன்சிரத்திலே கரங்களுங் கூப்புகிலன் வளத்தையுடைய அவர் கீர்த்தியைச் சிறிதுஞ் சொல்லுகிலன் துரியோதனன், எ-று. (உ௧௩)

தொல்லவை யின்கணி ருந்தந ராதிப துன்மதி யாலெனைநீ
கொல்ல நினைந்தது நன்றென வென்றிவை கூறின னெம்பெருமா

ஞெல்லையி னின்குல முற்று மடிந்திட வுற்றுமலைந் தொர்கணைத்
தெல்லையில் வெஞ்சமர் நூறுவன் யாவரு மேறுவர் வானுலகே.

[எ-து.] பழமையாயுள்ள இராசசபையிலேயிருந்த துரியோதனராசனே துற்புத்தியினால் நீ என்னைக் கொல்ல நினைத்தது நல்லதென்றுசொல்லி ஸ்ரீகிருஷ்ணபகவான் சீக்கிரத்தில் உன்குலமுழுவதும் மடியயுத்தஞ்செய்து ஒருகணநேரத்திற் கொல்லுவேன் அப்போது எல்லாரும் மேலுலகத்திலே ஏறுவாரென்று பின்னுஞ்சொல்லுவார். எ-று. [உகச]

அஞ்சின நின்னை யழித்திட நின்னுட னன்று பெருஞ்சமர்வாய்
வெஞ்சுட ராயுத மொன்று மெடுக்கில மென்று விளம்பியது
மெஞ்ச மலைந்தெதிர் வந்துயிர் கொள்ளுது மென்று தனித்தனியே
பஞ்சவர் கூறிய வெஞ்சின வாசக மும்பழு தாமெனவே.

[எ-து.] உன்னைக் கொல்லுவதற்கு அஞ்சினோம் உன்னுடனே அன்று பெரிய யுத்தத்திலே வெவ்விய கிரணத்தையுடைய ஆயுதமொன்றும்எடுக்க மாட்டோமென்று சொல்லியதும் பாண்டவர்கள் தாம்வந்து சண்டையிட்டு உயிரைக் கொல்லுகிறோமென்று தனித்தனியே சொல்லிய சபதமுள்ள பேச்சும் பழுதாமென்றல்லவோ. எ-று. [உகரு]

என்றுரை யாடிநெடுங்கடல் வண்ணனெ ழுந்தருளப் பிறகே
சென்றன ரெம்முடி மன்னவ ரும்பணி சேர்கொடி யோனையலா
னின்றுப சாரமு ரைத்தவர் தம்மை நிறுத்திய நந்தரமே
வன்றிற லங்கர் பிரானொடு கூறினன் மற்றொரு வாசகமே.

[எ-து,] இப்படிசொல்லி நெடியகடல் வண்ணரான ஸ்ரீகிருஷ்ணபகவான் எழுந்தருள பின்பு எந்த அரசர்களும் அவர்பின்னே போனார்கள் சர்ப்பக்கொடிபடைத்த அந்தத்துரியோதனனை யல்லாமல் நின்று உபசாரஞ் சொன்னபேர்களை நிறுத்தி பின்பு வலிமையுள்ள திறலையுடைய அங்க தேசத்துக்கு அதிபதியாகிய கர்னனுடன் ஒருவார்த்தை சொன்னார். எ-று.

வண்மையி னானுய ரங்கர் குலாதிப மதிகுலம் வாழ்வுறவந்
துண்மையி னானுயர் மன்னவ ரைவரு முன்னிலுனக் கிளையோர்
பெண்மையி னானுயர் குந்தி வயிற்றிடைப் பெருமையினா லிதயத்
திண்மையி னானுயர் நின்னையு மன்பொடு தினகர னல்கினனே.

[எ-து.] கொடையினாலுயர்ந்த கர்னமகாராசனே சந்திரவமிசம் வாழ வந்து உண்மையினாலுயர்ந்த பாண்டவ ரைந்துபேரும் நினைக்குமிடத்தில் உனக்கிளையவர்கள் பெண்மையினாலுயர்ந்த குந்திமாதேவி வயிற்றிலே பெருமையினாலும் மனவலியாலும் உயர்ந்த உன்னையும் அன்புடனே சூரியன் பெற்றான். எ-று. [உகஎ]

ஏயு நெடுங்கொடி முரசுடை யோனை யெழிற் றருமன் றரவே
வாயு வழங்கினன் வீமனை நல்கினன் விசயனை வாசவனும்
வாயு நிகழ்ந்திடு தேவமருத்துவ ரன்பொ டளித்தனர் செந்
தேயு வெனுந் திறனகு லனையுஞ்சக தேவனையும் பெரிதே.

[எ-து] நெடிய முரசக்கொடியுடைய தருமராசாவை அழகிய யமன் பெற்றான், வீமனை வாயுபகவான் பெற்றான், அர்ச்சுனனை தேவேந்திரன் பெற்றான், அக்கினியென்னுந் திறலையுடைய நகுலனையும் சகாதேவனையும் ஆயுள்வேதமறிந்த மருத்துவதேவர்கள் அன்புடனே பெற்றார்கள். எ-று. ()

அந்தணன் முன்றரு மந்திர மைந்தினி லறுவரையுங் கடவுட்
குந்தி பயந்தனள் யானினி யென்பல கூறுவதுங் களினீ
ரிந்தநிலம் பெறுவீர் தவிர்வீர் பெறவே றினியா ருரியார்
வந்தினி யும்பியர் தம்மொடு சேர்கென மாலு மொழிந்தனனே.

[எ-து.] தூர்வாசமுனிவ ரருளிய ஐந்துமந்திரத்திலே ஆறுபேரையும் தெய்வத்தன்மையுள்ள குந்திமாதேவி பெற்றனள் யான் பலபேச்சுச் சொல்லவேண்டிய தென்னவிருக்கிறது உங்களுக்குள்ளே நீங்கள் இந்தப் பூமியைப்பெற்றாலும் விட்டுவிட்டாலும் உங்களைவிட பெறுதற்கு வேறே எவர் உரிமையுள்ளவர்களாவார் இனிவந்து உன்னுடைய தம்பிமாரோடு சேரென்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணபகவான். எ-று. [உகக]

வேறு.

கன்றால் விளவின் கனியுகுத்துங் குழையா னிரையின் கணம ழைத்துங், குன்றான் மழையின் குலந்தடுத்துங் குலவுஞ் செல்வக் கோபாலா, வின்றாலெனது பிறப்புணர்ந்தே னென்றன் புருகி யெம் பியர்பாற், சென்றா லென்னை நீயறியச் செகத்தா ரென்றுஞ் சிறி யாரோ.

[எ-து.]பசுவின் கன்றினால் விளவின்பழத்தை யுதிர்த்தும் மூங்கிற் குழலால் பசுக்கூட்டங்களை யழைத்து கோவர்த்தனகிரியால் மேகஞ் சொரிந்த மழையைத் தடுத்தும் பிரகாசிக்கின்ற செல்வத்தையுடைய கோபாலகிருஷ்ணரே நீர் சொல்லுகையினாலே இன்று என்னுடைய பிறப்பை யறிந்தேனென்று அன்புருகி என் தம்பியரிடத்திற் போனால் என்னை நீயறிய உலகத்தார் எப்போதுஞ் சிறிக்கமாட்டார்களோ. எ-று. [உஉ0]

ஆரென் றறியத் தகாதவெனை யரசுமாக்கி முடி சூட்டிச்
சீருந் திறமுந் தனதுபெருந் திருவு மெனக்கே தெரிந்தளித்தான்
பாரின் றறிய நூற்றுவர்க்கும் பழிதீர் வென்றிப் பாண்டவர்க்கும்
போரென் றறிந்துஞ் செய்ந்நன்றி பொன்றா தவறிற் போவேனே

(எ-து.) இன்னுனென் றறியத்தகாத வென்னை அரசனுக்கிக் கிரீடந் தரித்துச் சிறப்பையுந் திறத்தையும் தனது பெரிய செல்வததையும் எனக்கே தெரிந்து கொடுத்தான் அதுவுமல்லாமல் இன்று பூமியெல்லா மறிய அந்தத் துரியோதனன் முதலிய நூற்றுவர்க்கும் குற்றமற்ற ஜெயத்தையுடைய பஞ்சபாண்டவர்க்கும் யுத்தம்வந்து நேரிட்டிருக்கிறதென்று அறிந்தும் ஒருவன்செய்த நன்றியைக் காப்பாற்ருத பேர்களைப்போல நான் போவேனே வென்ருன் கர்னமகாராஜன். எ-று. [உஉக]

இரவிக் குரிய திருமதலை யிவ்வா றுரைக்க விசைவண்டு
விரவிப் பயிலுந் துழாய்முடியோன் வேருேர் மொழியும்விளம்பாம
லுரவிற் றடந்தே ரூர்வோனை யேகென் றருளி யொருசார்வாப்
புரவித் தாம னின்ருனை வருகென் றழைத்துப் புகல்கின்ருன்.

[எ-து.] சூரியன்புதல்வனுகிய கர்னன் இப்படிசொல்ல வண்டுகளிசை பாடுகின்ற துளபமாலையணிந்த கிரீடத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணபகவான் மற்றொருசொல்லுஞ் சொல்லாமல் அவனைப் போவென் றனுப்பி ஒருபக்கத்திலே நின்ற அசுவத்தாமனை வாவென் றழைத்துச்சொல்வார். எ-று. [உஉஉ]

போயே கானம் பலதிரிந்தும் புகன்ற விரதம் பொய்யாம
லாயே வந்த பாண்டவர்க ளைந்தூர் வேண்ட மறுத்ததற்குச்
சேயே யனைய சிலைமுனிவன் சேயே நாளைச் செருக்களத்தி (னே
னீயே கரியென் றெடுத்துரைத்தா னெடியோன் றுளப முடியோ

(எ-து.) காடுகளெல்லாம்போய்த் திரிந்தும் சொன்னவிரதம் பொய்யாமல் செலுத்திவந்த பஞ்சபாண்டவர்கள் ஐந்தூராவது கேட்க, இல்லையென்று துரியோதனன் மறுத்ததற்கு முருகக்கடவுளையொத்த துரோணசாரி குமாரனுன அசுவத்தாமாவே நாளை யுத்தகளத்தில் நீயே சாட்சியென்று எடுத்துச்சொன்னுர் நெடியவனும் துளபமணிந்த முடியையுடையவனுமாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான். எ-று. (உஉங)

ஆனு வுனதாண் மைக்குநிக ரவனி தலத்தில் வேறுண்டோ
ஞானுதிபனே போர்க்களத்தி னுகக்கொடியோன் பணிந்துன்னைச்
சேனு பதியா கென்ருலுஞ் செலுத்தே னென்று நீமறுத்தி
யானு லுய்வ ரைவருமற் றவர்பா லினக்குமன்புண்டே

(எ-து.) நீங்காத உன்னுடைய வலுமைக்குச் சமானமாய் பூமியிலே யொருவருண்டோ ஞானத்துக் கதிபனே யுத்தகளத்திலே சர்ப்பக்கொடி படைத்த துரியோதனன் உன்னை வணங்கிச் சேனுதிபதியா யிருவென்று சொன்னுலும் நான் செலுத்தமாட்டேனென்று மறுத்தாயானுல் பஞ்சபாண்டவர்கள் பிழைப்பார்கள் அவர்களிடத்தில் உனக்கும் விசுவாசமுண்டே யென்ருர் ஸ்ரீகிருஷ்ணபகவான். எ-று. [உஉச]

ஆயோ தனத்தி லடலரியே யனையான் றன்னை யிவ்வாறு (த்தச்
மாயோ னுரைத்துத் தன்விரலின் மணியாழியை மண்ணிடை வீழ்
சேயோ னதனை யெடுத்தவன்றன் செங்கை கொடுக்க வாங்காமல்
தூயோ யூர்கோள் பரிதிதனைச் சூழ்ந்த தகல்வான் மீதென்றே.

[எ-து.] யுத்தத்திலே பெருமைபொருந்திய ஆண்சிங்கத்தை யொத்த அசுவத்தாமாவை இப்படி ஸ்ரீகிருஷ்ணபகவான் சொல்லி தமது விரலிலிருந்த ரத்தினம்பதித்த மோதிரத்தை பூமியிலே நழுகவிட்டார் அசுவத்தாமா அதனை எடுத்து அவர்கையிலே கொடுக்க வாங்காமல் பரிசுத்தமானவனே ஆகாயத்திலே சூரியனைப் பரிவேடம் சூழ்ந்ததென்றான். எ-று. ()

வரித்தா மரைக்கட் டிருநெடுமால் வான்வாய் நோக்க வரிவிறற்
கைப். பரித்தா மாவு மாழியுடன் பரிதிவடி வந் தனைப் பார்த்தான்,
கிரித்தாழ் கவிகைக் கருங்கள்வன் கிளர் நூன் முனிவன் மைந்தனை
யும், பிரித்தா னவனுஞ் சூளுற்றா னென்றா ரிந்தப்பே ரவையோர்.

[எ-து.[செந்தாமரை மலர்போன்ற கண்களையுடைய ஸ்ரீகிருஷ்ணபகவான் ஆகாயத்திலே பார்க்க நெடியவில்லைக் கையிலேயுடைய அசுவத்தாமாவும் மோதிரத்துடனே சூரியன் வடிவைப்பார்த்தான் கோவர்த்தனகிரியைக் குடையாகப்பிடித்த கள்வனாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் துரோணாசாரிகுமாரனாகிய அசுவத்தாமாவையும் பிரித்தான் அவனுஞ்சபதஞ்செய்து கொடுத்தானென்றார்கள் பெரிய சபையிலிருந்தவர்கள். எ-று. (௨௨௬)

தனிவந் தகலுந் தூதனைப்போய்த் தானே யணுகித் தடஞ்சாப
முனிவன் புதல்வன் மோதிரந்தொட் டருஞ்சூண் முன்னர் மொழி
கின்றா, னினிவந் துறவாய் நின்றாலு மெங்ஙனென் றெளிவ திவனை
யெனத். துனிவந் தரசர் முகநோக்கிச் சொன்னா னிடியே றன்னானே.

[எ-து.] தனியே வந்துபோகுந் தூதனிடத்தே தானே பலவந்தமாய்ப் போய். துரோணாசாரி குமாரனாகிய அசுவத்தாமா மோதிரத்தைத்தொட்டு அரியசபதம் எதிரே சொல்லுகின்றான் ஆகையால் இனிவந்து நம்முடனே சிநேகமாய் நின்றாலும் எப்படி இவனையோக்கியனென் றறிவதென்று கோபித்து ராசாக்களுடைய முகத்தைப்பார்த்துச் சொன்னான் இடியேற்றையொத்த துரியோதனன். எ-று. (௨௨௭)

துளியார் மதுவின் வலம்புரிந்தார்த் துரியோ தனன்றான்சொல்
லியது, மொளியா ரவையில் வாள்வேந்த ரொருவர்க் கொருவ ருரை
த்தனவுங், களியா னையினான் செவிப்படலுங் கலங்கிச் சித்த மிவ
ரென்னைத், தெளியா வண்ணம் பேதித்தான் றிருமா லென்றே
சிந்தித்தான்.

[எ-து.] துளிகள் நிறைந்த தேனையுடைய நத்தியாவர்த்த மாலையை யணிந்த துரியோதனராசன் சொல்லியதும் பிரகாசநிறைந்த சபையிலே வளாயுதத்தையுடைய அரசர்கள் ஒருவர்க்கொருவர் பேசியவைகளும் களிப்பினைக்கொண்ட யானைக்குச் சமானமாகிய அசுவத்தாமா காதிலே விழுந்தவளவில் மனங்கலங்கி இந்தச் சபையிலுள்ளவர்கள் என்னைத் தமக்கு அனுகூலனென்று தெரியாதவிதம் பேதப்படுத்தினர்கள் ஸ்ரீகிருஷ்ணபகவானென்று நினைத்தான். எ-று. [உஉஅ]

தண்ணந் துளப முடியோனுந் தனித்தங் கிருந்து தன்மனத்தி
லெண்ணம்பலித்ததெனமகிழ்ந்தேயிளையோன் றனக்கு விடைநல்கி
விண்ணின் றமரர் மிகத்துதிக்க விதுரன்மனையின் மேவியபின்
திண்ணங் கடவுட் குலவரசன் வருமா றறிந்து சிந்தித்தான்.

(எ-து.) குளிர்ந்த துளபமாலையை யணிந்த முடியையுடைய ஸ்ரீகிருஷ்ணபகவானும் தனிப்பட்டு அங்கே யிருந்து தன்மனதிலே நினைத்த எண்ணம் பலித்ததென்று சந்தோஷித்து அசுவத்தாமாவுக்கு செலவு கொடுத்துவிட்டு ஆகாசத்திலிருந்த தேவர்கள் மிகவுந் துதிசெய்ய விதுரன் அரண்மனைக்குப் போன பின்பு தேவர்கட்கரசனாகிய இந்திரன் வரும்படி தெரிந்து நினைத்தார். எ-று. [உஉகூ]

அந்தக் கணத்தில் வந்திறைஞ்சு மாகண் டலனை முகநோக்கிக்
கந்தத் துளப முடியோனுங் கண்ணுங் கருத்துங் களிகூரத்
தந்தத் தொழிலி னரிசுமந்த தவிசி னிடையே யுடனிருத்தி
முந்தக் கருத்தி னின்றதனை முடிப்பா னுபாய மொழிகின்றான்.

(எ-து.) அந்தட்சணத்திலே வந்து வணங்கிய இந்திரன்முகத்தைப் பார்த்து வாசனைபொருந்திய துளபமாலையையணிந்த முடியையுடைய ஸ்ரீகிருஷ்ணபகவானும் கண்ணுங் கருத்துங் களிப்பையடைந்து யானைத் தந்தங்களாற்செய்த சிங்காசனத்திலே உட்காரவைத்துக்கொண்டு தன் கருத்திலேயிருந்ததை முடிக்கும் பொருட்டு உபாயஞ்சொல்லுகிறார். எ-று.

கிரியின் சிறகை யரிபடையாய் கேண்மோ வாண்மைக்களமீதில்
வரிவெஞ் சிலைக்கை விசயனுக்கு மாறா முனிந்து வருகின்ற
வெரியுங் கனல்வாய் விடவரவொன் றிவனுக் குற்ற பகையான
வரியின் புதல்வன் றனக்கொருபே ரம்பா கியதா ரறியாதார்.

(எ-து.] மலைகளின் சிறகையறுத்த வச்சிராயுதத்தையுடைய இந்திரனே கேள் ஆண்மையாக யுத்தகளத்தில் நீண்ட வெவ்விய வில்லையுடைய அர்ச்சுனனுக்கு மாறாகக் கோபித்து வருகின்ற விஷநெருப்பை வீசுகின்ற வாயையுடைய விடசேடனென்கிற சர்ப்பமொன்று இவனுக்குப் பகையாகிய சூரியன் குமாரனான கர்னனுக்கு ஒருஅம்பாகியிருப்பதை அறியாதவர்கள் யார். எ-று. (உங௧)

கன்னன் விசயன் றனைக்கொல்லி ற்கடற்பார்முழு துங் கண்ணில்ல,
மன்னன் புதல்வன் றனக்கேயா மொழிந்தோர் யாரு மடிந்திடுவார்
முன்னஞ் சூதின் மொழிந்தபகை முடியா திருக்கி லவர்க்கல்ல
நின்னெஞ் சறிய யானறிய நின்க்கே வசையு நிலையாமே.

(எ-து.) கர்னன் அர்ச்சுனனைக் கொன்றால் சமுத்திரஞ் சூழ்ந்த பூமி முழுதும் திருதராட்டிரன் புத்திரனாகிய துரியோதனனுக்கே யாகும் மற்ற பேர் யாவரும் இறந்துவிடுவார்கள் சூதினாலேசொன்ன பகையை முடியா திருந்தால் அவர்களுக்குக் குற்றமில்லை உன்மனமறிய நானறிய உனக்கே குற்றம் நிலையாகுமென்றார் ஸ்ரீகிருஷ்ணபகவான். எ-று. [உஙஉ]

கவசங் கனக குண்டலமென் றிரண்டும் புனையிற் கற்பாந்தத்
திவசம்பொரினுங் கன்னனுயிர் செகுப்பார் மண்ணிற்சிலருண்டோ
வவசங் கிளைஞருறத்துணைவ ரற்றக்களத்தி லடலனுமத் (னே.
துவசம் படைத்தோன் படுந்துயரந் துணைவா வின்றே சொன்

(எ-து.) கவசம் சொர்ன்னகுண்டலமென்று சொல்லும் இரண்டுந் தரிப்பானேயானால் கற்பமுடிவுநாள் வரைக்கும் யுத்தஞ்செய்தாலும் கர்னனுயிரைப் போக்குவார் பூமியிலே சிலபேருண்டோ பந்துக்களெல்லாம் அவசப்பட உடன் பிறந்தவர்களழ யுத்தகளத்தில் அனுமக்கொடிபடைத்த அர்ச்சுனன்படுந் துயரத்தைத் துணைவனே இன்றே சொன்னேன். எ-று

வல்லார் வல்ல கலைஞருக்கு மறைநா லவர்க்குங் கடவுளர்க்கு
மில்லா தவர்க்கு முள்ளவர்க்குமிரந்தோர்தமக்குந் துறந்தவர்க்குஞ்
சொல்லா தவர்க்குஞ் சொல்பவர்க்குஞ் சூழுஞ் சமயாதிபர்களுக்கு
மல்லா தவர்க்குமிரவிமக னரிய தான மளிக்கின்றான்.

(எ-து.) மாட்டாதவர்களுக்கும் கலையிலே வல்லவராகிய வித்துவான்களுக்கும் வேதத்திலேவல்ல பிராமணர்களுக்கும் தேவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் உள்ளவர்களுக்கும் இரந்தவர்களுக்கும் துறந்தவர்களுக்கும் சொல்லாதவர்களுக்கும் சொல்லுகிறவர்களுக்கும் சமயங்களிலே விசேஷமானவர்களுக்கும் ஐயமில்லாதவர்களுக்கும் சூரியன் புத்திரனாகிய கர்னமகாராசன் அரியதானங் கொடுக்கின்றான். எ-று. [உஙச]

மைந்தற் குறுதி நீவேண்டில் வல்லோய் முனிவர் வடிவாகிச்
சந்தப் பனுவ லிசைமாலைத் தான கரனை விரைந்தெய்தி
யந்தக் கவச குண்டலங்க ளளிப்பா யென்றா லவனென்று
மிந்தப் புவியின் மறுத்தறியா னுயிரே யெனினு மீந்திடுவான்.

(எ-து.) உன்புத்திரனாகிய அர்ச்சுனனுக்கு நீ உறுதிசெய்யவேண்டினை யாகில், வல்லமையுள்ள இந்திரனே பிராமணருடைய வடிவங்கொண்டு

சந்தத்தையுடைய கவிமாலையைக்கொண்ட தானத்துக் கிடமாகிய கர்ன னிடத்திற்குச் சீக்கிரத்திற்போய் அந்தக் கவசகுண்டலங்களைத் தருவா யென்று கேட்டால் அவன் ஒன்றுவது இந்தப்பூமியிலே யில்லையென்று சொல்லரியான் உயிர்கேட்டாலுங் கொடுப்பான். எ-று. (உ௲௫)

இரண்டு மவன்பா னீகவரி லிருந்தே ரூர்ந்திப் படியரசர் (லார்
திரண்டு வரினும் வெஞ்சிலைக்கைத் திரண்டோள் விசய னெதிர்நில்
முரண்டு பொருவிற் கன்னனுந்தன் முன்னே யெய்தி முடிசிதறிப்
புரண்டு மடியுமென வணங்கிப் புத்தே ளரசன் போகின்றான்.

[எ-து.] அந்தகவசகுண்டலங்க ளிரண்டையும் நீ வாங்கிக்கொண்டா யானால் பெரிய தேரிலேறிக்கொண்டு இந்தப் பூமியிலுள்ள அரசர்கள் திரண்டுவந்தாலும் வெவ்விய வில்லைக் கையிலேயுடைய விஜயபலமுள்ள அர்ச்சுனன் முன்னே நிற்கமாட்டார்கள் மாறுபட்டுப் பொருகின்ற வில்லை யுடைய கர்னனும் அவன்முன்னேவந்து தலையருப்புண்டு மண்ணிற் புரண்டு மடிவானென்று ஸ்ரீகிருஷ்ணபகவான் சொல்ல அதுகேட்டு வணங்கிப் போகின்றான் தேவர்களுக்கரசனாகிய இந்திரன். எ-று. [உ௲௬]

வேறு.

தண்டுதா னெனக்கு னிந்துடலலமரத் தாளிணை தளர்ந்துதள் ளாடக், கண்டியா வருங்கை தரக்குடை யொன்று கைதனிற் கங் கைநீர் நுரையை, மொண்டுமே லுறச்சொரிந்ததா மெனநரை திரை யுடன் மூப்பொரு வடிவங், கொண்டதா மென வொருமுனி யாகி யக்கொற்றவன் வாயில்சென் றடைந்தான்.

(எ-து.) சிவிகையின் தண்டுபோலத் தேகம் வளைந்து சுழற்சியடையக் கைகள் தளர்ந்து தள்ளாட எவர்களும்பார்த்து கைகொடுக்கையிலே ஒரு குடையும் கங்கைநீரிலிருக்கு நுரையை மொண்டு மேலே சொரிந்ததாகு மென்று சொல்ல நரை திரைகளுடனே மூப்புத்தன்மையே ஒருவடிவங் கொண்டதாமென்று சொல்ல ஒருபிராமணவடிவாகிக் கர்னன் அரண் மனை வாசலிலே போனான் தேவேந்திரன். எ-று. (உ௲௭)

அடுத்த தானமும் பரிகிலு மிரவலர்க் கருளுடன் முற்பகலள வுங், கொடுத்து நாயகன் புகுந்தன னெனீ குறுக வென்றவன்கோ யிற், றடுத்த வாயிலோர் மீளவு முணர்த்தலிற் றலைவனுந் தருகென விரைவின், விடுத்த நான்மறை முனியைமுன் காணவே வேந்த னுந் தொழுதடி வீழ்ந்தான்.

(எ-து.) அடுத்திருக்கின்ற தானமும் யாசகமும் இரப்போர்க்குக் கிருபை யுடனே பதினைந்து நாளிகையளவுங் கொடுத்து கர்னமகாராசன் அரண்

மனைக்குப் போய்விட்டான் நாளையதினம் நீர் வாருமென்று அவன் அரண் மனையில் தடுத்த வாசற்காரர் மறுபடியுஞ் சொல்லுதலால் கர்னமகாராச னும் அவரை அழையுமென்று சொல்லச் சீக்கிரத்திலே அவரும்போக அவ ரைக் கண்டமாத்திரத்தில் கர்னனும் வணங்கினான். எ-று. [உ௬அ]

என்ன மாதவம் புரிந்தனன் பரிந்துநீ ரீண்டெழுந் தருளுதற் கென்று, பொன்னி னாசனத் திருத்திமெய் யருளுடன் பூசையு முறைமுறை புரிய, அன்ன வேதியன் றளர்ந்தவென் னடையினு லானதே பிற்பக லென்று, சொன்ன வேலையி னகைத்துனக் களிப் பனீ சொன்ன யாவையு மென்றான்

[எ-து.] என்ன தவஞ் செய்தேன் அன்புவைத்து நீர் இங்கே எழுந்தரு ளுதற்கென்று பொன்னினாற்செய்த ஆசனம்போட்டு அதிலிருந்த உண் மைப்பத்தியுடனே கிரமமாக பூசைசெய்ய அந்தப்பிராமணர் தளர்ச்சியை யுடைய என்னுடைய நடையினாலே இங்கேவர இரண்டு சாமத்திற்கு மேற்பட்டதென்று சொன்னபோது கர்னமகாராசன் நகைத்து நீ கேட்ட பொருளெல்லாம் உனக்குக் கொடுப்பேனென்றான். [உ௬௯]

அருத்தியீ தல்பொற்சுரர்தரு வினுக்குமற்றரிதுநீ யளித்தியோ வென்று, விருத்த வேதியன் மொழிந்திட நகைத்துநீ மெய்யுயிர் விழைந்திரந் தாலும், கருத்தி னோடுனக் களித்திலே னெனிலெதிர் கறுத்தவர் கண்ணிணை சிவப்ப, உரித்த போரினிற் புறந்தருநிருபர் போ யுறுபத முறுவனென் றுரைத்தான்.

(எ-து.) ஆசைப்பட்டவைகளைக் கொடுப்பதற்குப் பொன்மயமாகிய தெய்வலோகத்திலிருக்கும் பஞ்சதருவுக்கும் அருமையாகும் நீ கொடுப்பை யாவென்று அந்த விருத்தப்பிராமணன் சொல்லச் சிரித்து நீ உடலையும் உயிரையும் விரும்பி யாசித்தாலும் உள்ளன்புடனே உனக்குக் கொடாமற் போனேனேயானால் பகைவர் கண்கள் சிவக்க எதிர்த்துப் பொருகின்ற யுத்தகளத்திலே முதுகுகாட்டுகின்ற அரசர்க ளடையும் பதத்தை யா னடைவேனென்றான் கர்னமகாராசன். எ-று. (உ௭0)

வந்த வந்தணன் கவசகுண் டலங்களை வாங்கிநீ வழங்கெனக் கென்னத், தந்த னன்பெறு கெனவவன் வழங்கவிண் டலத்திலோர் தனி யசரீரி, யிந்தி ரன்றனை விரகினுன் மாயவ னேவினான்வழங்கனீ யெனலுஞ், சிந்தை யின்கணோர் கலக்கமற்றளித்தனன் செஞ்சுடர்த் தினகரன் சிறுவன்.

(எ-து.) வந்த பிராமணன் நீ தரிக்கின்ற கவசகுண்டலங்களை வாங்கிக் கொடுவென்று கேட்க இதோ கொடுத்தேன் கொள்வாயென்று கொடுக்க ஆகாயத்திலே ஒரு அசரீரிவாக்கு ஸ்ரீகிருஷ்ணபகவான் ஒரு உபாயத்தி

ஞலே இந்திரனை அனுப்பிவைத்தார் நீ கொடுக்கவேண்டாமென்று சொல்லவும் மனத்திலே ஒரு கலக்கமில்லாமற் கொடுத்தான் சூரியன் புதல்வனுகிய கர்னமகாராஜன். எ-று. (உசக)

அண்டர் யாவரு மலர்மழை பொழிந்தன ரந்தர துந்துமி யார்ப்பக், கொண்டல் வாகனன் கொண்டமெய் யொழிந்துதன் கோலமெய் யுடனெதிர் நின்ருன், கண்டு மாமன முருகியே களித்திடுங் கன்னனுக் கந்நெடுங் கடவுள், மண்டு போரினில் வயந்தரு மிதுவென மற்றொரு கொற்றவே லெடுத்தே.

(எ-து.) அப்போது தேவர்கள் யாவரும் புஷ்பமாரி பொழிந்தார் தெய்வதுந்துமிசத்திக்க மேகவாகனனுன இந்திரன் தான்கொண்ட விருத்தப் பிராமணவேடம் நீங்கித் தனது நிசரூபத்துடனே எதிர் நின்ருன் அதுகண்டு மனமுருகிச் சந்தோஷித்த கர்னமகாராசனுக்கு அந்த இந்திரன் மிகுந்த யுத்தத்திலே இது ஜெயத்தைக் கொடுக்குமென்று வெற்றியுள்ள வேலாயுதத்தை யெடுத்து. எ-று. (உசஉ)

வெலற் கருந்திறல் விசயன்மே லொழிந்துநீ வெஞ்சின மடங்கல்போ னெஞ்சிற், கலக்க மொன்றறப் பொருதிறல் புனைந்திடு கடோர்க்கசக் காளை தன் னுயிரே, யிலக்கு வந்தெதிர் மலைந்தபோ திதற்கென வேவென மறையையு மியம்பிச், சொலற் கரும்புகழ் சுரர்பதி கொடுப்பவத் தோன்றலுந் தொழுதுகைக் கொண்டான்.

(எ-து.) வெல்லுதற்கரிய திறலையுடைய அர்ச்சுனன்மேலே விடுவதை யொழித்து நீ வெவ்விய கோபத்தையுடைய சிங்கத்தைப்போல் நெஞ்சிலே ஒரு கலக்கமில்லாமல் போர்செய்கின்ற கடோர்க்கசனுடைய உயிரே இதற்கு லட்சியமாகும் அவன் வந்து உன்னை யெதிர்க்கும்போது இதை விடுவாயென்று வேதமந்திரமுஞ் சொல்லிச் சொல்லுதற்கரிய கீர்த்தியையுடைய இந்திரன்கொடுக்க அந்தக் கர்னனும் வணங்கிக் கையிலே வாங்கிக் கொண்டான். எ-று. (உசங)

நிரந்தரம்புகழ் நிலைபெறுங் கர்னனை நெஞ்சுற மகிழ்ந்தவ ணிருத்திப், புரந்த ரன்பசுந் தண்டுழா யணிந்திடும் புயல்வண னிருந்துழிப் போந்தே, யிரந்து சென்றுதான் மொழிந்தது மவ்வள வீந்ததும் மாங்கவற் கிசைத்தான், வரந்த ருந்திரு மாலதை வினவியவ் வாசவன் றனக்குரை வழங்கும்.

(எ-து.) எப்போதும் நிலைபெற்ற புகழுடைய கர்னமகாராசன் செய்கையைக்கண்டு மனமகிழ்ந்து அவனை அங்கே நிறுத்திவிட்டு இந்திரனைவன் பசிய குளிர்ந்த துளபமாலையையணிந்த மேகவண்ணரான ஸ்ரீகிருஷ்ண பகவானிருந்த இடத்திற்குப்போய்த் தான்போய்க் கேட்டதும் கர்னன்

கொடுத்ததும் அவருக்குச்சொன்னான் அப்போது வரத்தைத்தருகின்ற ஸ்ரீகிருஷ்ணபகவான் அதைக்கேட்டு அந்த இந்திரனுக்குச் சொல்லுவார். எ-று. (உசச)

உண்மை யாகவெஞ் சமர்முகத் தெறிபகை யொன்றும்வந் துடலுற வொட்டா, திண்மை யாலுயர் கவசகுண் டலங்களைச் சென்றிரந் தவற்கிவன் கொடுத்தா, னெண்மை யாயினுங் கிளைஞரே யேற்பினு மியல்பிலாப் புன்செல்வ ரீயார், வண்மை யாளர்தம் மாருயிர் மாற்றலர் கேட்பினு மறுக்கிலா ரென்றே.

(எ-து.) சத்தியமாக வெவ்விய யுத்தமுகத்திலே வீசுகின்ற ஆயுதங்களொன்றுந் தேகத்திலே படவொட்டாத உறுதியாலுயர்ந்த கவசகுண்டலங்களை இரந்த இந்திரனுக்கு அந்த கர்னன் கொடுத்தான் ஆகையால் எளிதாயிருந்தாலும் பந்துக்களே யேற்றாலும் இயற்கைகுணமில்லாத அற்பசெல்வத்தை யுடையவர்கள் கொடுக்கமாட்டார்கள் தியாகியானவர்கள் தம்முடைய உயிரைச் சத்துருக்கள் கேட்டாலும் இல்லையென்று மறுக்கமாட்டார்களென்று சொல்லினர். எ-று. [உசரு)

வாசவன் றனைவிடை கொடுத்ததன்பின் வந்தகா ரியந்தனை முடிப்பான், கேசவன் றனதா தைபொ டுதித்திடுங் கேண்மைகூர் தெரிவையைக் கிட்டித், தேசவன் றருங்குரி சில்பால் விரைவினிற் செல்கெனப் பயந்தசே யிழையும், பாசமுந் துற மாயவ னேவலாற் பாதபங் கயஞ்சிவப் பித்தாள்.

(எ-து.) தேவேந்திரனுக்குச் செலவுகொடுத்து அனுப்பிவிட்டுத் தான் வந்தகாரியத்தை நிறைவேற்றும்பொருட்டு ஸ்ரீகிருஷ்ணபகவான் தன் தகப்பனோடுபிறந்த உறவுமிகுந்த குந்திதேவியிடத்திற்குப்போய்ச் சூரியன் புதல்வனாகிய கர்னனிடத்திற்குச் சீக்கிரத்தில் போவென்றார் அவளும் அன்பானது தள்ள ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய ஏவுதலினாலே தன்னுடைய பாதஞ்சிவக்கப் போனாள். எ-று. (உசசு)

வந்து குந்திநின் கோயிலி னெய்தினள் வாயிலோ ருரைத்திட மைந்தன், முந்து மன்புடன் றொழுதெதிர் கொண்டுபோய் முறைமையா லாசனத் திருத்த, விந்து வின்கிர ணங்கள் கண்டுள மகிழ்ந் திரங்கிலன் கரைகடந்தேறிச், சிந்து வெண்டிரைச் சிந்துவொத் துருகிடுந் தெரிவையோ டுரைபல செப்பும்.

(எ-து.) குந்திமாதேவி உன்னரண்மலையில் வந்தாளென்று காவற்காரர் சொல்ல புத்திரனாகிய கர்னன் முந்திய அன்புடனே வணங்கி எதிர் கொண்டுபோய்க் கிரமப்படி ஆசனங்கொடுத்து அதிலே யிருக்கச்சொல்ல

அப்போது சந்திரகிரணங்களைக்கண்டு மனமகிழ்ந்து இரக்கமுற்று வண்மைபொருந்திய கரையைக்கடந்து அலையை வீசுகின்ற சமுத்திரத்தையொத்து மனமுருகும் அந்தத்தாயுடனே பலபேச்சுகள் பேசுவான் அந்தக் கர்னமகாராஜன். எ-று. [உசஎ]

அன்னை வந்ததென் னருந்தவப் பயனென வன்பினு லின்புற வணங்கி, யென்னை வந்தவா றியம்பென மற்றவ ளீன்றதா யானுனக் கென்று, முன்னை வந்தொரு மந்திரந் தவமுனி மொழிந்ததுங் கதிரவன் முகத்தாற், பின்னை வந்ததும் பேழையில் விடுத்ததும் பிழையிலா துரைத்திடக் கேட்டே.

(எ-து) தாயே நீ வந்தது யான்செய்த தவத்தின் பிரயோசன மென்று அன்பினாலே இன்பம்பொருந்த வணங்கி வந்தகாரியமென்ன வென்று கேட்க அவள் நான் உனக்குப் பெற்றதாயென்று, முன்னே தூர்வாசமுனி வந்து ஒருமந்திரஞ் சொன்னதும் சூரியனாலே நீ பிறந்ததும் உன்னைப் பெட்டியில் விடுத்ததும் பிழையில்லாமற் சொல்லக்கேட்டு. எ-று. (உசஅ)

மாயனார் விரகிது வென மனத்தினின் மதித்து வந்தளித்திடும் வள்ள, னீயநா ளெனைப் பயந்தவ ளென்னினுநின்மொழி நெஞ்சுறத் தேறேன், பேயனார் சில பேரறி வின்மையாற் பெற்றதா யெனக் கென வந்து, தூயநா கரிகத் துகிலா லவர் துன்பமுற் றென்புருவானார்.

(எ-து) இது ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய உபாயமென்று மனதிலே நினைத்து வேண்டியவைகளைக் கொடுக்கப்பட்ட தியாகியாகிய கர்னமகாராசன் நீ அந்தநாளிலே என்னைப்பெற்றவளென்று சொன்னாலும், உன் பேச்சை என் மனம்பொருந்தத் தெளியமாட்டேன் பேயையொத்த சில பேர் நல்ல அறிவில்லாமையால் என்னைப்பெற்ற தாய்மாரென்றுவந்து பரிசுத்தமாகிய நாகரீகமாயுள்ள ஒருவஸ்திரத்தால் அவர்களெல்லாந் துன்பப்பட்டு எலும்புருவானார்கள். எ-று. (உசகூ)

அடாது செய்தவர் படாது பட்டாரெனு மங்கர்கோ னருண்மொழி கேட்டுத், தடாத வன்புடைக் கெடாத தூய்மொழி பகர்தையலு மையலிற் றவிர்ந்து, படாந்த னைக்கொடு வாவென வருதலும் பயந்திலே னெனிலனை முனியென், றெடா விரித்தலைத் துடற்படப் போர்த்துமன் னீன்றதா யாமென விருந்தாள்.

(எ-து.) அடாதகாரியத்தைச் செய்து அவர்கள் படாதபாடும் பட்டார்களென்று சொல்லும் அங்கதேசாதிபதியாகிய கர்னமகாராசன் சொல்லக் கேட்டு தடுக்காத அன்பினையுடைய கெடாத பரிசுத்தமாகிய சொல்லைச்,

சொல்லிய குந்திமாதேவியும் மயக்கத்தினின்று நீங்கி அந்த வஸ்திரத்தைக் கொண்டுவாவென்று வாங்கி உன்னைப் பெறுதிருந்தேனேயானால் என்னைக் கோபியாயென்று அதை எடுத்து விரித்து உதறித் தேகமுழுவதும் போர்த்தும் அன்றுபெற்ற தாயென்று சொல்ல விருந்தாள். எ-று. (உ௫0)

இருந்த தாயுமங் கீன்றவள் போலவே யிருதடங் கொங்கை பால்சொறிந்தா, எருந்து பாலகன் போலவே யிளவலு மருந்தியே விதிவழி யகன்றான், புரிந்த வன்பொடு மறுகுறத் தழுவியே பொன்முடி யுச்சிமோந் தன்பாற், பரிந்து நானுமன் றூனை வளர்த் தெடுத்திடப் பாக்கியஞ் செய்திலே னென்றாள்.

[எ-து.] இப்படியிருந்த தாயும் அங்கே பெற்றவள்போலே பருத்த இரண்டு கொங்கைகளிலும் பால்சொரிய நின்றாள் அதைப் புசிக்கின்ற இளம் பிள்ளைபோலக் கர்னனும் புசித்து விதிவழி நீங்கினன் மிகுந்த அன்புடனே பக்கத்திலே பொருந்தத் தழுவி பொன்முடி யணியும் உச்சியை மோந்து அன்புடையவளாய்ப் பரிவுசெய்து நானும் அன்றுன்னை வளர்த்தெடுக்கப் பாக்கியஞ் செய்யவில்லை யென்றாள் குந்திமாதேவி. எ-று. [உ௫க]

வருகநீ மதலா யிளைஞரை வருநின் மலரடி யன்பினால் வணங்கி, யொருமையாய் மனமொத் தேவலை புரிய வொருதனிச் செய்யகோலோச்சி, அரசெலாம் வந்துன் கடைத்தலை வணங்கிட வாண்மையுஞ் செல்வமும் விளங்கக், குருகுலா திபர்க்குங் குரிசிலாய் வாழ்வு கூர்வதே கடனெனக் குறித்தாள்.

(எ-து.) புத்திரனே நீ வரக்கடவாய் உன்தம்பிமாராகிய பஞ்சபாண்டவரும் உன்னுடைய மலர்போன்ற பாதத்தைப் பத்தியினாலே வணங்கி ஒருமித்து மனமொத்து ஏவல்செய்ய ஒப்பற்ற செங்கோல் செலுத்தி இராசாக்களெல்லாம் வந்து உன்கடைவாயிற்படியில் நின்றுவணங்க ஆண்மையுஞ் செல்வமும் விளங்கக் குருகுலத்திலே யிருந்த அரசர்களுக்கெல்லாம் அரசனாகிய வாழ்வையடைவது முறையென்று சொன்னாள் குந்திமாதேவி எ-று. (உ௫உ]

பெற்றநீர் மகமேலன் பிலாமையோ வன்றிப் பெரும்பழி நாணியோ விடுத்தீர், அற்றைநாடொடங்கியென்னையின்றளவு மாருயிர்த் துணையெனக் கருதிக், கொற்றமா மகுடம் புனைந்தர சளித்துக் கூடவுண் டரியதம் பியருஞ், சுற்றமா னவரு மென்னடி வணங்கத் தோற்றமு மேற்றமு மளித்தான்.

(எ-து) என்னைப்பெற்ற நீர் பிள்ளையாசை யில்லாமையோ அல்லாமல் பெரியபழிக்கு நாணியோ விட்டுவிட்டீர் அன்றுதொடங்கி யின்றளவும் என்னை உயிர்துணையாக நினைத்து வெற்றியுள்ள பெருமை பொருந்திய

முடிசூட்டி அரசளித்துக் கூடவுண்டு தன்னுடைய அருமையாகிய தொண்ணூற்றொன்பது தம்பிமாரும் பந்துக்களும் என்னுடைய பாதத்தைவணங்கப் பிரகாசத்தையும் உயர்வையுங்கொடுத்தான். எ-று. (உருஙு)

மடந்தைபொற் றிருமே கலைமணி யுகவே மாசறத் திகழுமே காந்த, விடந்தனிற் புரிந்து நானயர்ந் திருக்க வெடுக்கவோ கோக்கவோ வென்றான், றிடம்படைத் திடுமி ராசரா சனுக்குச் செருமுனைச் சென்றுசெஞ் சோற்றுக், கடன்கழிப்பதுவே யெனக்கினிப் புகழுங் கருமமுந் தருமமு மென்றான்.

(எ-து.) குற்றமற்றுப் பிரகாசிக்கின்ற ஏகாந்தஸ்தானத்தில் அவன் மனைவியினுடைய பொன்னினாற்செய்த அழகிய மேகலைமணி யுதிரச்செய்து அவன் வருதலைக்கண்டு நான் வருத்தப்பட்டுக்கொண்டிருக்க அப்போது எனக்குத் திடஞ்சொல்லி அந்த மணிகளையெடுக்கவோ எடுத்துக்கோக்கவோ வென்றான் அப்படிப்பட்ட மெய்மை படைத்துள்ள அரசர்க்கரசனாகிய துரியோதனனுக்கு யுத்தமுகத்திற்போய்ச் செம்மையாகிய சோற்றுக்கடன் கழிப்பதுவே இனி எனக்குக் கீர்த்தியுந் தொழிலுந்தருமமுமென்றான் கர்னமகாராசன். எ-று. (உருச)

பின்னையும் பற்பன் மொழிந்தபின் பலவும் பேசிலென் பூசலோ விளைந்த, தின்னிவந் திங்ஙனென்னை நீ ரழைப்ப துண்மையா யுள்ளவா றுரைமி, னென்னமைந் தனுமிப் பரிசினா னுரைப்ப வின்றறத் துறந்தவன் னையிலும், அன்னைநெஞ் சழிந்தே யிருகணீர் சொரிய வலறிவாய் குழறிநொந் தழுதாள்

(எ-து.) மறுபடியும் அனேகவார்த்தைகள் பேசி இனிப் பலவார்த்தைகள்பேசி யாவதென்ன யுத்தம்விளைந்திருக்கின்றது என்னை இப்போது நீர் நினைத்துவந் தழைப்பது உண்மையாக உள்ளபடி சொல்லுமென்று கர்னமகாராசன் இத்தன்மையினாலே சொல்லப்பெற்று ஆற்றிலேவிட்ட அன்னையினும் மனமழிந்து இரண்டு கண்களிலும் நீர்சொரிய அலறி வாய்குழறி நொந்தழுதாள் குந்திமாதேவி. எ-று. (உருரு)

ஆண்டமா மகனு மிருகணீர் துடைத்தவ் வன்னையைப் பன்முறை தேற்றி, மூண்டவல் வினையின் பயனலா லியார்க்கு முயற்சியால் வருவதொன் றுண்டோ? வேண்டும்பா வையுமே தருகுவேனீரும் வேண்டிவே வேண்டிக்கே ளென்னப், பாண்டுவின் றிருவார் மனைவியு மதற்குப் பண்பினா லின்னன பணித்தாள்.

(எ-து.) கர்னனாகிய புத்திரனும் இரண்டுகண்களி னின்றும் வருகின்ற நீரைத் துடைத்து அந்தத் தாய்க்குப் பலதரந் தேறுதல்சொல்லி மூண்,

டிருக்கின்ற தீவினைப்பயனல்லாமல் யார்க்கும் முயர்ச்சியினலே வருகிற காரியமொன்றுண்டோ நீர் என்னை என்னகேட்கிறீரோ அவையெல்லாந் தருவேன் நீர் விரும்பியதைக் கேளுமென்று சொல்லப் பாண்டுமகாராசனுடைய மனைவியான குந்திமாதேவியும் அதற்கு இனிய குணத்தோடு இதுவேண்டுமென்று சொன்னாள். எ-று. (உருசு)

பார்த்தன் வெஞ்சமரி னின்னுடன் மலைந்தாற் பகைப்பெரும் பாந்தளம் பகழி, கோத்தலும் பிழைத்தான் மறித்துநீ விடுத்துக் கோறலென் றொருவரங் குறித்தாள், வாய்த்தமற் றவர்க ளிளைஞரென் றவரை மலையலென் றொருவரங் குறித்தாள்? மூத்தவன் காதலிளைஞர்தம் பொருட்டான் மொழிந்தவை கேட்டிவை மொழிந்தான்.

(எ-து) அர்ச்சுனன் வெவ்விய யுத்தத்தில் உன்னுடனே யுத்தஞ்செய்தால் பகையையுடைய நாகாஸ்திரத்தைக் கோத்துத் தொடுத்தவளவில் தப்பினால் இரண்டாந்தரமும் விட்டுக் கொல்லாதையென்று ஒருவரங் கேட்டாள், மற்ற பாண்டவர்களும் தம்பிமாரென்று அவருடனே போர் செய்யாதையென்று ஒருவரங்கேட்டாள் மூத்தவனாகிய கர்னன் தம்பிமார் பொருட்டுத் தாய்சொன்னவைகளைக்கேட்டு இவை சொல்லுவான். எ-று.)

தெறுகணை யொன்று தொடுக்கவு முனைந்து செருச்செய்வோன் சென்னியோ டிருந்தால், மறுகணை தொடுப்ப தாண்மையோ வலியோ மானமோ மன்னவர்க் கறமோ, வுறுகணை யொன்றே பார்த்தன்மேற் றொடுப்பே னொழிந்துளோ ருய்வரென் றுரைத்தான், தறுகணல் லவர்க்குந் தறுகணு னவர்க்குந் தண்ணளி நிறைந்தசெங் கண்ணான்

(எ-து.) கொல்லப்பட்ட பாணம் ஒன்று தொடுக்கவும், எதிரிட்டு யுத்தஞ் செய்வோன் சிரசுடனே தப்பியிருந்தால் மறுகணைதொடுப்ப தாண்மையோ வல்லமையோ மானமோ அரசர்களுக்குத் தருமமோ ஒருகணையே அர்ச்சுனன்மேல் விடுவேன் மற்றபேர் பிழைப்பார்களென்று சொன்னான் அவன் யாரென்று சொன்னால் நல்லவர்களுக்கும் பொல்லாதவர்களுக்கும் தண்ணிய கிருபைநிறைந்த சிவந்த கண்களையுடைய கர்னமகாராஜன். எ-று.

பெருவர மிரண்டும் பெற்றபின் றன்னைப் பெற்றதாயினைக் கரங் குவித்துத், தருவர மெனக்கு மிரண்டுள வுலகிற் சராசரங் களுக்கெலாந் தாயீர், வெருவரு மமரிற் பார்த்தனாலடியேன் வீழ்ந்தபோ தவனிப ரறிய, மருவரு முலைப்பா லெனக்களித் துன்றன் மகனெனும் வாய்மையு முரைப்பீர்.

(எ-து.) பெரியவர மிரண்டும் பெற்றபின்பு தன்னைப்பெற்ற தாயைக் கைகுவித்து வணங்கி நீரெனக்குத் தருகின்ற வரங்களிரண்டுண்டு உலகத்திலே சராசரங்களுக்கெல்லாந் தாயானவரே அஞ்சத்தக்க யுத்தகளத்தில் அர்ச்சுனனாலே நான் வீழ்ந்தபோது இவ்வுலகத்தை யாளும் அரசர்களறிய முலைப்பாலெனக்குக் கொடுத்து நான் உம்முடைய பிள்ளையென்கிற உண்மையைச் சொல்லுவீர். எ-று. (உ௫௯)

உய்வருந் திறல் வெம்போர் முடிப்பளவு முமக்கு நான் மகனெனுந் தன்மை, யைவரு மறியா வண்ணநீர் காப்பீரல்ல தங்கவர் சிறிதறியின், மைவருங் கடற்பா ரனைத்தையு மெனக்கே வழங்குவர் வழங்கினால் யானென், கைவருந் துணைவன் றனக்கலால் வழங்கேன் கடைப்பிடி கருமமீ தென்றான்.

(எ-து.) பிழைத்தற்கரிய வெவ்விய யுத்தமுடிவுவரைக்கும் நான் உமக்கு பிள்ளையென்கிற தன்மையைப் பஞ்சபாண்டவர்களறியாதவிதம் நீர் காத்தல்வேண்டும் அல்லாமல் அவர் சிறிதாவதறிந்தால் கருங்கடல்சூழ்ந்த பூமியெல்லாம் எனக்கே கொடுப்பார்கள் கொடுத்தால் யான் என்னுடைய துணைவனாகிய துரியோதனனுக்குக் கொடுப்பனேயல்லாமல் வேறொருவருக்குக் கொடுக்கமாட்டேன் இந்தக்காரியத்தை மறவாதை யென்றான் கர்னமகாராசன். எ-று. (உ௬0)

என்றலு மதுகேட் டின்றதா யொக்கு மென்று கொண்டிவ் வர நேர்ந்து, வன்றுயர் மேன்மேல் வளர யான் றளராவகை யுயிருனக்கு முற்பெயர்வ, தென்றினி யெனத் தன்கண்க ணீர்சொரிய விளைந்துநைந் தழுதழு திரங்கி, நின்றதன் மகனைத் தழீஇயவ ணிறுத்தி யாதவ னிருந்தது சென்றாள்

(எ-து.) அப்படி சொன்னவளவில் அதுகேட்டுப் பெற்ற தாயாகிய குந்தமாதேவியுஞ் சரியென்று இந்தவரங்க ளிரண்டையுங்கொடுத்து வலிமைபொருந்திய துக்க மேலுமேலுமுண்டாக இனி யான் தளராதவிதம் உயிருனக்கு முன்னே நீங்குவதென்று தன்கண்களிலிருந்து நீர்சொரிய நைந்து அழுதழுது இரக்கமுற்றுநின்ற தன் பிள்ளையைத் தழுவிக்கொண்டு அங்கே நிறுத்திவிட்டு ஸ்ரீகிருஷ்ணபகவான் இருந்த இடத்திற் போனாள் எ-று. [உ௬க]

கண்ணனுங் குந்தி கன்னனோ டுரைத்த கருத்தெலாந் திருத்தமாக் கேட்டு, எண்ணமு முடிந்ததென மகிழ்ந்தந்த மங்கையையில் லிடை யிறுத்தித், தண்ணளி யுடன்றன் பின்வரு நிருபர் தம்மையு முறைமுறை நிறுத்திப், பண்ணமர் தடந்தேர் மீது கொண்டன்றே பாண்டவ ருறைநக ரடைந்தான்.

(எ-து) ஸ்ரீகிருஷ்ணபகவானும் குந்திமாதேவி கர்னனோடு சொல்லிய வருத்தத்தை யெல்லாந் திருத்தமாகக்கேட்டு நம்முடைய எண்ணமெல்லாம் நிறைவேறியதென்று மனமகிழ்ந்து அவளை அந்த வீட்டிலே நிறுத்திவிட்டு குளிர்ந்த தயையுடன் பின்னேவந்த அரசர்களையும் அங்கங்கே நிறுத்திவிட்டு உறப்பமைந்த விலாசம்பொருந்திய தேரின்மேலேறிக்கொண்டு அப்பொழுதே பாண்டவர்களிருக்கின்ற நகரத்தை யடைந்தார் ஸ்ரீகிருஷ்ணபகவான். எ-று. [உசுஉ]

தூதுபோ யரவத் துவசனோ டுறுதி சொன்னது மறுத்தவன்
சினந்து, மோதுபோ புரியத் துணிந்ததும் விதுரன் மூரிவில் லிறுத்ததுங் கங்குற், போதுபோர் வஞ்சம் விளைத்ததுங் கன்னன் புரந்தரற் கீந்ததும் பயந்த, மாதுபோய் வரங்கள் பெற்றவை யொழிய மற்றெலா மைத்துனர்க் குரைத்தான்.

[எ-து.] தூதுபோய் சர்ப்பக்கொடிபடைத்த துரியோதனனுக்கு உறுதிசொன்னதும்அதை அவன் மறுத்துக் கோபித்து மோதப்பட்ட யுதத்துக்கு சம்மதித்துத் துணிந்ததும், விதுரன் வலிமையுள்ள தன் வில்லை யொடித்ததும், இராத்திரியில் நிலவறைவெட்டி தனக்கு வஞ்சனை செய்ததும், கர்னன் கவசகுண்டலங்களைத் தேவேந்திரனுக்குக் கொடுத்ததும் பெற்ற குந்திமாதேவி கர்னனிடத்திற்குப்போய்ப் பெற்ற வரங்கள் தவிர மற்றவைகளெல்லாம் மைத்துனராகிய பஞ்சபாண்டவர்களுக்குச் சொல்லினர் ஸ்ரீகிருஷ்ணபகவான். எ-று. [உசுந]

வாழிவிருத்தம்

பஞ்சவர் தூதனென்னும் பக்தவச் சலனும்வாழி
கஞ்சமென் முகத்தாளான கற்புத்தென் பதியும்வாழி
வஞ்சமில் மனத்தோரான மன்னரை வர்களும்வாழி
செஞ்சொலா லிதைப்படித்தோர் செகந்தோறும் வாழிமாதோ.

ஸ்ரீகிருஷ்ணஸ்வாமிதூது.

முற்றிற்று.